
# செம்மணி

நிலம் 2 துகள் 73 வள்ளுவர் ஆண்டு 2052, 11 மார்கழி 17 வாரமலர், பக்கங்கள் –24, விலை ரூபா 50/–

## தமிழர்களைக் கொன்ற
# மிருசுவில் கொலையாளிக்கு தடை விதித்தது அமெரிக்கா
### மற்றொரு அரச படையினருக்கும் அதே நடவடிக்கை

கொழும்பு, மார்கழி 11

மனித உரிமைகள் தினத்தையொட்டி இலங்கை அரச படையினர் இருவருக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்த இருவரும் அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் முழுத் தடை விதிக்கப்படுவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் (அமைச்சர்) அன்ரனி ஜே.பிளிங்ரன் அறிவித்தார்.



தடை விதிக்கப்பட்டுள்ள இருவரில் ஒருவர் இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்தவர். மற்றையவர் தமிழர்களைப் கடத்திக், கப்பம் கேட்டு பின்னர் படுகொலை செய்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்.

2000ஆம் ஆண்டு மிருசுவிலில் 8 அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட ஸ்டாவ் சர்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் தமிழ் மாணவர்கள் 11 பேரைக் கடத்திக் கொன்ற குற்றத்தில் அவர்களில் குறைந்தது 8 பேரையாவது கடத்தித் தடுத்து வைத்தார் என்று கூறப்படும் கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரியான சந்தன கெட்டியாராச்சி ஆகியோருக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தரைப் படையின் தளபதி லூட்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகவும் அமெரிக்கா இதேபோன்ற தடையை ஏற்கனவே பிறப்பித்திருக்கிறது.

அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கைகளில் மனித உரிமைகள் மிக முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருப்பதாக இராஜாங்கச் செயலர் தெரிவித்தார். இலங்கையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் அமெரிக்காவின் நோக்கத்தில் இந்த இருவர் மீதான தடை மட்டுமே நடவடிக்கை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

மார்கழி 10 மனித உரிமைகள் தினத்தையொட்டி அமெரிக்கா வெளிநாடுகளின் அரச அலுவலர்கள் 12 பேருக்கு எதிராக இத்தகைய தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அவர்களில் இருவர் இலங்கையர்கள்.

மிருசுவில் படுகொலைகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஸ்டாவ் சர்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு நீதிமன்றம் விதித்த தூக்குத் தண்டனைத் தீர்ப்பு 2019ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச.

## நாணய நிதியத்துடன் பேசுகின்றது அரசு

கொழும்பு, மார்கழி 11

அரசு கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் முக்கிய பிரதிநிதிகள் கொழும்பு வந்து ஆட்சிப்பீடத்தினருடன் பேச்சுக்களைத் தொடங்கியிருக்கின்றனர். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இந்தத் தகவலை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆட்சியாளர்களுடன் மட்டுமன்றி எதிர்க் கட்சியினருடனும் நாணய நிதிய அதிகாரிகள் பேச்சுக்களை நடத்துவர் என்றும் அவர் தெரிவித்தார். (பார்க்க பக்கம் 2)

## வடமாகாணத்தில் திங்கள் முதல் 30 வயதுக்கு கீழ் பூஸ்டர் தடுப்பூசி

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் எதிர்வரும் 13ஆம் திகதி (திங்கட்கிழமை) முதல் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள (பார்க்க பக்கம் 2)

## ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

தகவலறியும் உரிமைக்கான ஆணைக் குழுவிற்கான புதிய உறுப்பினர்களை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 12 (1) இன் விதிகளின் கீழ் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி உபாலி அபேரத்ன தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் (பார்க்க பக்கம் 2)

# மற்றோர் அரசியல் சந்திப்பு ஞாயிறன்று

வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகள், மலையக மற்றும் கொழும்புத் தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இடையிலான மற்றொரு சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இத்தகைய சந்திப்பு ஒன்று ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. அதில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கொழும்பு ஆட்சியாளர்களிடம் வலியுறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அதோடு இரண்டாவது சந்திப்பை கொழும்பில் நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ரெலோ, புளொட், தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தன. தமிழ் அரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் கலந்துகொள்ளவில்லை.

ஞாயிற்றுக்கிழமை சந்திப்பிற்குத் தலைமை தாங்கும்படி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கலந்துகொள்வார் என்று நிச்சயம் எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (பார்க்க பக்கம் 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மண்

வாரப் பத்திரிகை

551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com

தொடர்பு எண்: 0214927781

உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்


## வீறாப்புப் பேச்சைவிட மக்கள் நலனே முக்கியம்

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் வரை இருந்த அன்னியச் செலாவணி இருப்புக்கூட இப்போது 30 சதவீதம் வரை குறைந்துவிட்டதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்த நிலையில் அடுத்த தவணைக்கான கடன்களைக் கட்ட முடியாத நிலை கொழும்பு ஆட்சிக்கு ஏற்படும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

ஒருபுறத்தில் அமெரிக்க, இந்திய நெருக்குதல்கள் காரணமாக மேற்கு நோக்கியும் சரியத் தொடங்கியிருக்கும் கொழும்பின் போக்கால் அதிருப்தியுறும் சீனா முரண்படத் தொடங்கியிருக்கிறது. இதனால் அதனிடமிருந்தும் இனி கடன் உதவிகளை உடனடியாக எதிர்பார்க்க முடியாது. அப்படியே கிடைத்தாலும் அது அதிகூடிய வட்டி விகிதத்தில் பெறப்படுவதாகவே இருக்க முடியும். அது நாட்டை இன்னும் அதளபாதாளத்தில் தள்ளிவிடும்.

இந்த நிலையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் (ஐஎம்எவ்) உயர் நிலை அதிகாரிகள் கொழும்பிற்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் அரச மற்றும் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளுடன் நிலமைகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார்கள். இந்தப் பயணம் நிதியத்தின் வழக்கமான வருடாந்தப் பயணம்தான் என்று நிதியத்தின் அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவும் அதனையேதான் நாடாளுமன்றில் கூறியிருக்கிறார்.

ஆனால், ஆட்சியாளர்களிடம் இருந்து கோரிக்கை வந்தால் அது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நாணய நிதியம் தயாராகவே இருக்கின்றது என்பதை அதன் கொழும்புத் தலைமை அதிகாரி விளக்கியிருக்கிறார். அதற்குப் பதிலளிக்குமாப் போன்று நாடாளுமன்றத்தில் பேசிய நிதி அமைச்சரோ, நாணய நிதியத்தின் நிபந்தனைகள் ஏற்புடையனவாக இல்லாவிட்டால் அதனது உதவியைப் பெறப்போவதில்லை என்று கூறியிருக்கிறார்.

அத்தோடு அந்நியச் செலாவணியின் கையிருப்பை வேறு எவரின் உதவியும் இன்றி உயர்த்த இலங்கையால் முடியும் என்றும் சூளுரைத்திருக்கிறார் நாடாளுமன்றில். அவரும் அவரது சகாக்களும் வாய்ச்சவடால் விடும் அளவிற்கு நாட்டின் நிதி நிலவரம் இல்லை என்பது வெள்ளிடைமலை.

உச்சத்தைத் தொட்டிருக்கும் பொருள்களின் விலை, இறக்குமதியைச் செய்வதற்குப் போதிய டொலர் கையிருப்பில்லை என்கிற பல்வேறு பிரச்சினைகளும் சுமைகளும் பொதுமக்களை பேயாய் அழுத்தி வரும் நிலையில் நாட்டின் நிதி அமைச்சர் இவ்வாறு சாத்தியமற்ற சூளுரைப்புக்களையும் யதார்த்தத்தை மீறிய பேச்சுக்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பது சரியானதல்ல.

நாணய நிதியம் கைகொடுப்பதற்கு முன்வரும் நிலையில் அதனுடன் சேர்ந்து செயற்பட்டு இக்கட்டு நிலையில் இருந்து விடுபடுவதற்கு முற்படுவதே புத்திசாலித்தனம். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்தில் இதே கருத்தையே வலியுறுத்தியிருந்தார்.

தற்போதைய சூழலில் மேற்கையும் கிழக்கையும் வைத்து ஆடு புலி ஆட்டம் நடத்தும் கொழும்பின் வழக்கமான ராஜதந்திரம் பிசுபிசுத்துப் போயிருக்கும் நிலையில், நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுவது அவசியமானதாகி இருக்கிறது. நாணய நிதியம் விதிக்கக்கூடிய நிபந்தனைகள் நாட்டு மக்களுக்கு கெடுதல் விளைவிக்கக்கூடியவை அல்ல. அவை அரசியல் கட்சிகளின் அரசியல் சித்து விளையாட்டுக்கு ஆப்பு வைப்பவையாக இருக்கக்கூடும். ஆனால் நாட்டையும் மக்களையும் பொருளாதாரத் துயரத்தில் இருந்த மீட்கக்கூடியதாக இருக்கும். எனவே மக்கள் நலன் கருதி அரசு இந்த விடயத்தில் நாணய நிதியத்துடன் இணங்கிப் போவதற்கான முடிவை எடுக்கவேண்டும், வெற்று வாய்ஜாலங்களை விடுத்து.

## பொரளையில் துப்பாக்கி சூடு நடத்தி நகைகள் கொள்ளை

கொழும்பு, மார்கழி

கொழும்பு பொரளையில் உள்ள நகைக் கடை ஒன்றில் துப்பாக்கி முனையில் சனியிரவு துணிகரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

முகத்தை முழுமையாக மூடிய முகக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கடைக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடையில் இருந்த பணியாளர்கள், வாடிக்கையாளர்களை மிரட்டும் வகையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதே தவிர அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

நகைகளைக் கொள்ளையிட்ட பின்னர் அவர்கள் இருவரும் மீண்டும் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றுவிட்டனர். மறைகாணி (சிசிரிவி) பதிவுகளின் உதவியுடன் கொள்ளையர்களைத் தேடும் படலம் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக பொரளை காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சன நடமாட்டம் மிகுந்த பகுதியில் முன்னிரவில் நடத்தப்பட்டுள்ள இந்த துப்பாக்கிமுனைக் கொள்ளை மக்கள் மத்தியில் பதற்றத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

---

### பன்னாட்டு நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எத்தகைய பொருளாதார நெருக்கடி வந் தாலும் பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெற மாட்டோம் என்று ஆட் சித் தரப்பில் இதுவரை சூளுரைக்கப்பட்டு வந்தது. குறிப்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் பகிரங்கமாகவே இதனைத் தெரிவித்து வந்தார்கள்.

அரச தலைவர் மற்றும் அவருக்கு நெருக்கமான பொருளாதார வல்லுநர்களும் நாணய நிதியத்திடம் கடன் பெற்று அரசின் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பின்னடித்தார்கள். மனித உரிமைகள் விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் நாணய நிதியம் ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதே அதற்குக் காரணம்.

இந்த நிலையில் நாணய நிதிய அதிகாரிகள் கொழும்புக்கு வந்திருப்பது தொடர்பில் நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டிருப்பது ஆட்சியாளர்கள் தரப்பில் குறிப்பாக ராஜபக்சக்கள் தரப்பில் கொள்கை மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்கிற கேள்வியை எழுப்பியுள்ளது.

ஆனால், நாணய நிதிய அதிகாரிகளின் வருகை வழக்கமான வருடாந்த பயணத்தின் ஒரு பகுதிதான் என்று அதன் கொழும்புக்கான தலைமை அதிகாரி மசகிரோ நொசாக்கி தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் கொள்கைகள் தொடர்பில் உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி அறிக்கை முன்வைப்பது வழமை, இந்த அறிக்கையின் அடிப்படையில் நிதியத்தின் பணிப்பாளர் சபை விவாதங்களை நடத்தி முடிவுகளை எடுக்கும் என்றார் அவர்.

அதேநேரம், ''இலங்கை ஆட்சியாளர்களிடம் இருந்து அண்மையில் எந்தவொரு கோரிக்கையும் நாணய நிதியத்திற்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும் அப்படியொரு கோரிக்கை விடுக்கப்படுமானால் அது பற்றிக் கலந்துரையாட தற்போது கொழும்புக்கு வந்திருக்கும் அதிகாரிகள் தயாராகவே இருக்கிறார்கள்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் நாணய நிதியத்தின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இல்லை என்றால் அதனுடைய உதவியை இலங்கை நாடாது என்றும் பசில் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுக்கான பாதீட்டின் குழு நிலை விவாதத்தில் பேசிய அவர், அந்நியச் செலாவணி இருப்பில் ஏற்பட்டுள்ள சிக்கலை இலங்கை தானாகவே தீர்த்துக்கொள்ளும், எந்த உதவியையும் யாரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளாது என்றும் அவர் தெரிவித்தார்.

### வடமாகாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியினருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதார துறை சாராத முன்னிலை ஊழியர்கள்) முன்னுரிமை அடிப்படையில் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

2ஆவது தடுப்பூசியைப் பெற்று ஆகக் குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் 3ஆவது தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம் என அவர் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

### ஆணைக்குழுவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க உறுதிப்படுத்தினார் ஜகத் பண்டார லியனாராச்சி, கிஷாலி பின்டோ ஜயவர்தன, ஒய்வுபெற்ற நீதிபதி ரோஹினி வல்கம, கலாநிதி அதுலசிறி குமார [illegible] ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் மக்களைப் பிரநிதித்துப்படுத்தும் கட்சிகளை ஒன்றிணைக்கும் ஒரு முயற்சி என்று இது சொல்லப்பட்டாலும் ஆட்சித் தரப்பில் இல்லாமல் எதிர்க் கட்சித் தரப்பில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியாகவே இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரச தரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் அல்லது அரசியல்வாதிகளுக்கு இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலியின்றி உயிர் மாய்ப்பு

## கருணைக் கொலை என்றாலும் சரியா?

றாதா

உயிரை மாய்ப்பதே தவறு என்றிருக்கும்போது, அது பற்றிப் பலரும் விவாதித்து வரும்போது உயிரை மாய்ப்பதற்குப் புதிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்கிற செய்தி கிடைக்கப்பெற்றிருக்கிறது. உயிரை மாய்ப்பதற்கு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது என்பது இங்கு புதிய செய்தியல்ல. அதைப் பயன்படுத்த சட்டபூர்வமாக அனுமதியளித்திருப்பதுதான் புதினமான செய்தி...!

2017ஆம் ஆண்டில் பிலிப் நிச்கே என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த இந்த உயிர்மாய்க்கும் இயந்திரமானது முப்பரிமாண அச்சு இயந்திரத்தால் ஆக்கப்பட்டது. இதை இப்போது - 2021இல் சுவிட்சர்லாந்து நாட்டில் பயன்படுத்துவதற்குச் சட்டபூர்வ அனுமதியைப் வழங்கப்பட்டிருருக்கிறது.

ஒருவரது உயிரை எடுக்கும் அதிகா ரமோ, உரிமையோ எவருக்கும் இல்லை. அதாவது ஒருவரைக் கொல்லும் உரிமை சக மனிதர்களுக்கு இல்லை. இதனால் தான் சாவுத் தண்டனைகள் முடிக்கப் படாதவைகளாகப் பல நாடுகளில் உள்ளன. சாவுத்தண்டனை நிறைவேற்றப்படாமலும் அதற்கு அனுமதியளிக்காமலும் உள்ள நிலையே உலகின் பல நாடுகளில் இருந்து வருகிறது. இவ்வாறு மற்றவருடைய உயிரைப் பறிப்பதே தவறு என்கிற நிலையில் தமது உயிரைத் தாமே மாய்ப்பதென்பதும் மிகப் பெரிய தவறாகவே கொள்ளப்படுகிறது. மனித இயலாமையினதும் மன உறுதியின்மையினதும் வெளிப்பாடான அதை இல்லாமல் செய்வதற்குப் பல தரப்பினரும் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். உள்நாட்டில் உயிர்மாய்ப்பில் ஈடுபடும் மனிதர்கள் மனதளவில் பலவீனமானவர்கள் என்றறிந்து அவ்வாறு முற்படுபவர்களையும், அத்தகு எண்ணம் கொண்டோரையும் இனம் கண்டு அவர்களை ஆற்றுப்படுத்தவும் ஆறுதல்சொல்லவும் என்று பல சமூக அமைப்புகள் தம்மாலான முயற்சிகளை எடுத்துக் கருமமாற்றி வரும் நிலையில் வெளிநா டொன்றில் - அதுவும் மனித உரிமைகள், தனிமனித உணர்வு களுக்கு மதிப்பளிக்கும் மற்றும் ஜனநாயக ரீதியான உயர்வுகளை அடைந்த தேசத்தில் இவ்வாறாக உயிரை மாய்ப்பதற்கு அனுமதிய ளிக்கப்பட்டிருக்கிறதே... என்று பலரது புருவங்களும் உயர்ந்தி ருக்கின்றன.

### கருணைக் கொலை இயந்திரம்

தற்போது சுவிட்சர்லாந்தில் அனுமதியளிக்கப்பட்ட குறித்த இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். அடிப்படையிலேயே பிலிப் நிச்கே ஒரு மனிதநேயவாதி. எழுத்தாளர். மருத்துவம் மற்றும் கருணைக்கொலை சார்ந்த நிறுவனம் ஒன்றை நிறுவிச் செயற்பட்டுவருபவர். கருணைக்கொலையை அனுமதிக்கும் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று குரல் கொடுத்து வருபவர். கருணைக்கொலை செய்வதற்காகவே குறித்த இயந்திரத்தை இவர் கண்டறிந்தார். கருணைக்கொலை என்பது உயிர்மாய்ப்பிலிருந்து சற்று வேறுபடுவதே. ஏதோ ஒரு காரணத்தால் எதிர்காலத்தில் இறப்பை எதிர்நோக்கவுள்ளவர்கள் - இறப்பு நிச்சயிக்கப்பட்டவர்கள் (பெரும்பாலும் தீரா நோய்க்குள்ளாகி நோயாலும் அதன் வலியாலும் அவஸ்தைப்படுபவர்கள்) தமது விருப்பில் - அதேநேரம் சட்டபூர்வ அனுமதிகளைப் பெற்றுத் தமது உயிரை மாய்த்துக் கொள்ளலாம் - அல்லது அவர்களைக் கருணையின் அடிப்படையில் கொல்லமுடியும் என்பதே அந்தப் பிரதான வேறுபாடு.

இதில் இறப்பை நோக்கித் தினமும் வலியுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் நபரை அவர் மீது கொண்ட கருணையின் காரணத்தால் அவருடைய அனுமதியுடனே கொல்வதாக இருக்கும். அத்தகு தேவைக்காக உருவாக்கப்பட்ட குறித்த இயந்திரத்தைத்தான் உயிரை மாய்ப்பவர்களுக்கு வரப்பிரசாதமாக்கியிருக்கிறது சுவிஸ் அரசு.

உயிர்மாய்ப்பு என்பதில் இந்தக் கருணைக்கொலையைத் தவிரவும் தமக்குள்ள பல இயலாமைகளின் காரணத்தால் மனிதர்களின் தேவையற்ற இறப்புகள் நிகழ வாய்ப்பிருப்பதுதான் பிரச்சினைக்குரியது. ''தடுப்பவர்கள் தடுத்துக்கொண்டிருக்க இறப்பவர்கள் இறந்து கொண்டுதானே இருக்கிறார்கள்'' என்பதாக உயிர்மாய்ப்புகள் அனைத்தையும் தவிர்க்க முடியாத கையறு நிலை குறித்துக் கூறி இந்த இயந்திரத்தின் தேவையை முன்வைத்தாலும் தடுக்க முடியாதிருக்கிறது என்பதற்காகத் தவறான செயற்பாடு ஒன்றுக்கு ஊக்கமளிக்க முடியாது என்பதையும் கவனிக்க வேண்டும்.


### இயந்திரம் செயற்படும் விதம்

சிறிய பேழை போல - அழகான படுக்கை வடிவில் தயாரிக்கப்பட்டிருக்கிற குறித்த இயந்திரத்தைப் போகும் இடமெல்லாம் இழுத்துச் செல்ல முடியும். கிட்டத்தட்ட இழுத்துச்செல்லும் சூட்கேஸ் போல. அதற்குள்போய்ப் படுத்துக்கொண்டு உள்ளிருக்கின்ற குறித்த




பொத்தான் ஒன்றை அழுத்தினால்போதும். எவ்வித வலியும் இல்லாமல் உடலில் இருந்து உயிர்பிரியும். பொத்தானை அழுத்தியதும் நைட்ரஜன் என்கிற வாயு உள்ளே நிரம்பும், நிரம்பிய அது 30 விநாடிகளுக்குள் ஒட்சிசனின் அளவை இல்லாது செய்யும். மகிழ்ச்சியான உணர்வு பிறந்த கையோடு நினைவிழப்பு ஏற்படும். பின்னர் உறக்கம். தொடர்ந்து கோமா நிலை. இறுதியாக இறப்பு.

பொத்தானை அழுத்திய 20 தொடக்கம் 25 நிமிடத்துக்குள் இத்தனை செயற்பாடுகளும் நடந்துவிடும். வலியால் அவஸ்தைப்படுபவர்கள் மீது பரிதாபப்பட்டு, கருணைகொண்டு அவர்களைக் கொல்வதற்கு உருவாக்கிய இயந்திரத்தை உயிரை மாய்க்கும் பலவீனமான மனிதர்களின் கைகளுக்குக் கொடுத்ததுதான் இங்கு கவனிக்கத்தக்கது. வாழ்வதும் சாவதும் அவரவர் உரிமை என்று விளக்கமளித்து இதற்கு வலுச்சேர்ப்பது இதிலுள்ள பெருங்குறைபாடு.



கருணைக் கொலை இயந்திரத்துடன் செல்பி எடுத்துக்கொள்வதில் உயிரோடு இருப்பவர்களுக்கு ஒரு ஆர்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். குடாநாட்டில் அச்சுறுத்தலுக்குள்ளாகும் மாடு வளர்ப்பு

நிர்மலன்

கொரோனாவுக்குப் பின்பான சூழலில் பல்வேறு தொழில் முறைகள் கைவிடப் பட்டுவிட்டன. தொழிலாளர்கள் பலரை வைத்துத் தொழில் செய்த பலர் தமது தொழிலைக் கைவிட்டுள்ளனர். இத்தகைய காரணங்களால் அன்றாடத் தொழிலில் ஈடுபட்டு வந்த பலர் தமது புதிய தொழிலாகக் களவு எடுப்பதைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். ஏற்கனவே தமிழ்ச் சமூகத்தில் இருந்துவரும் குறித்த ஒரு பகுதியினருக்கான தொழில் என்ற நிலை மாறி இந்தப் புதிய களவுத் தொழில் சகலருக்குமான பொதுத்தொழிலாக – புதுத்தொழிலாக உருவாகியிருக்கிறது. இதில் மாடுகளைக் களவாடும் தொழில் மிகவும் பிரபல்யமாக மாறியுள்ளது.

**யார் இதைச் செய்கிறார்கள்...?**

பழைய இரும்புப் பொருள்கள் மற்றும் பழைய பொருள்களை வாங்குவோர், பாக்கு, தேங்காய், பொச்சுமட்டை வாங்கும் வியாபாரிகள், சிரட்டை வியபாரிகள் என உள்ளூரில் வீடுகள், தெருக்களில் அலைந்து திரிவோர் அதைச் சாட்டாக வைத்து வீடுகளுக்குள் புகுந்து தகவலறியும் வேலைகளையே முதலில் மேற்கொள்கின்றனர் என்கிறார்கள் மாடுகளைப் பறிகொடுத்தோர்.

பாக்குப் பிடுங்கும் சாட்டில் ஒரு வளவுக்குள் ஒருவர் புகுந்துவிட்டால் அந்த வீட்டுப் பாக்கு மரத்தில் இருந்தவாறே அந்த வீட்டிலும் அருகிலும் தண்ணீர் மோட்டர், சைக்கிள்கள், காஸ் சிலிண்டர்கள் (தற்போதுள்ள நெருக்கடியில் பலர் வீட்டுக்கு வெளியே வைத்திருக்கின்றனர்) போன்ற பெறுமதியான பொருள்கள் இருக்கும் இடங்களை அவதானிக்கின்றனர். அந்த வீட்டில் நாய் உள்ளதா? வயதானவர்கள் உள்ளனரா? என்கிற தகவல்களை வீட்டில் இருப்பவர்களிடம் கதை கொடுத்தே பெற்றுவிடுகின்றனர் – என்று படபடக்கிறார் பிரகாஸ். அண்மையில் இவரது வீட்டுக்கு அருகில் இருக்கும் ஒருவரின் பசுவும் திருடப்பட்டுள்ளது.

வியாபார நோக்கில் அன்றாடம் வரும் பலரும் தகவல் அறிந்து சென்ற பின்னர் களவுகள் நடக்கின்றன என்கிற குற்றச்சாட்டு நீண்டகாலமாகப் பரவலாகவே உள்ளது. எனவே அறிமுகமில்லாதவர்களை வீட்டுக்குள் உள்வாங்கும் விடயத்தில் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

இதைவிட ஆண், பெண் எனச் சோடியாகச் சிலர் பொருள்களை விற்கின்ற சாட்டில் ஊரூராக அலைகின்றனர். இவர்களின் வருமானம் மிகவும் குறைவாக இருப்பதால் இவர்களும் களவுக்கான தகவல் சேகரிப்பில் முக்கிய பங்கெடுக்கின்றனர் என்கிறனர் காவல்துறையினர். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் அலாத வேறு பகுதிகளைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது அவர்களின் அவதானிப்பு.

**மூடிய வாகனங்களில் வருவோர்**

பழைய இரும்பு வாங்குவோர் அல்லது வேறு பழைய பொருள்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு வருவோர் அந்த ஊரின் சூழலை அவதானித்துப் பகல் வேளைகளில் ஏதாவது ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்துவிட்டு அங்கு மேய்ந்துகொண்டிருக்கும் ஆட்டை அல்லது மாட்டைச் சடுதியாகப் பிடித்து வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வேகமாக ஓடி மறைந்துவிடுகின்றனர்.

இவ்வாறான வாகனங்களில் வருவோர் அந்த ஊரில் ஆடு, மாடுகள், வேறு பொருள்கள் எனக் களவாடக்கூடிய வாய்ப்பு இருப்பதை ஒரு தடவை அவதானித்துவிட்டால் திரும்பத் திரும்ப அந்த ஊருக்குள் சென்று உரிய தருணம் கிடைக்கும்போது அவற்றை எடுத்துச் செல்கின்றனர் – என்கின்றனர் காவல்துறையினர்.

**வாழைத் தோட்டங்களில் மாட்டுக் களவு**

மிக நீண்ட காலமாக யாழ்ப்பாண விவசாயிகள் தமது தோட்டங்களுக்குள் மாடுகளைக் கட்டி அவற்றின் சாணம், சிறுநீர் போன்றவற்றால் மண்ணை வளம்படுத்தும் இயற்கை விவசாய முறைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றை அவதானிக்கும் திருடர்கள் அங்குள்ள மாடுகளை இரவு நேரங்களில் சென்ற கடத்திச் செல்கின்றனர். கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் இவ்வாறாகத் தினமும் அதிகமான மாடுகள் களவுபோகின்றன. இந்த நிலை காரணமாக எஞ்சியிருக்கின்ற மாடுகளை விவசாயிகள் அறா விலைக்கு விற்கின்றனர்.

முல்லை மாவட்டத்தின் குமுளமுனைப்பகுதி மாடு வளர்ப்புக்கு மிகவும் பெயர்போனது. போர் முடிந்தபின் அங்கிருந்த மாட்டுப் பட்டிகளை தொகை விலையில் தீர்த்து விற்று அதற்கான பணத்துக்கு அரிவு வெட்டும் இயந்திரங்களை வழங்கிய சம்பவங்கள் நடந்தன. இது ஒருவகை பகல் கொள்ளையாகும். ஒரு சில வருடங்களில் அரிவு வெட்டும் இயந்திரம் பழுதாகிய பின் அவர்களின் பெரும் சொத்தாக இருந்த மாடுகளும் இல்லாமல் அரிவுவெட்டும் இயந்திரங்களும் இல்லாத கையறு நிலையில் பலர் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மேய்ச்சல் தரைகள் இல்லாததால் மாடுகளைக் கட்டித் தீனிபோட்டு வளர்க்கும் முறையே மிக நீண்ட கால இருந்து வருகிறது. தற்போது அதுவும் கள்வர் தொல்லையால் கைவிடப்படுகிறது. இத்தகைய ஒரு பின்னடைவை ஏழை விவசாயிகள் சந்தித்துள்ளபோதும் இவற்றைக் கட்டுப்படுத்தும் விடயத்தில்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியந்த குமாரவைக் கொன்றவர்களும் கறுப்பு ஜீலைக் காடையர்களும்...!

ரவீந்திரன்




பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2002இல் பொறியியல் பட்டம் பெற்ற பிரியந்தகுமார கடந்த 10 வருடங் களாகப் பாகிஸ்தானில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமை யாற்றி வந்தார். அந்த ஆடைத்தொழிற்சாலை அமைந்துள்ள வீதியில் வைத்து நூற்றுக்கணக் கான இஸ்லாமிய கடும்போக்குவாதிகளால் கல் லால் எறிந்தும் இரும்புக்கம்பிகளால் அடித்தும் கொல்லப்பட்டார். பின்னர் தீயிட்டுக் கொழுத்தப் பட்டார். சமூக ஊடகங்களில் காணொலியாகப் பரபரப்புடன் வெளியாகிய இந்தக் காட்சியின் கொடூரத்தைத் தாங்க முடியாமல் பார்த்துக் கொண்டிருந்த பலர் அதை இடையில் நிறுத்திக் கொண்டார்கள். அந்தளவுக்குக் குரூரமும் கொடு மையும் நிறைந்ததாக இந்தச் சம்பவம் இருந்தது.

பிரியந்தவின் கொலையில் தரிக் அல் லித்பய் என்கிற தீவிரவாத இஸ்லாமிய அமைப்பு ஒன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்கிறார்கள் பாகிஸ் தான் அதிகாரிகள். இது 2015இல் உருவாக்கப் பட்டுப் பின்னர் கட்சியாக மாறியது. பாகிஸ்தா னில் இஸ்லாமியச் ஷரியாச் சட்டம் நடைமுறைப் படுத்தப்ப வேண்டும் என்றும் வெளிநாட்டவர்கள் பாகிஸ்தானில் இருக்கக்கூடாது என்றும் தீவிர மாக இயங்கி வருகிறது. இந்தக் கட்சி இத்தகைய கொடுங்கோட்பாடுகளுடன் 2017, 2018 காலப் பகுதியில் பாகிஸ்தானில் இடம்பெற்ற உள்ளூர், தேசிய மட்டத் தேர்தலிகளில் களமிறங்கியது. அதில் 20 லட்சத்துக்கும் அதிக வாக்குகளையும் பெற்றது.

தரிக் அல் இத்பய் கட்சியின் தீவிரவாதப் போக்குக் காரணமாக 2021 ஏப்ரல் மாதத்தில் அதைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்த பாகிஸ்தான் அரசு தடையும் செய்தது.

### கொலைக்குக் காரணம்

தரிக் அல் இத்பாய் கட்சியின் கொள்கை, கோட் பாடுகளை வெளிப்படுத்தும் சுவரொட்டி ஒன்று பிரியந்த பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலையில் ஒட்டப்பட்டது. அதை நீக்கிய பிரியந்த குமார, இங்கு தொழில் புரிபவர்கள் வேலைக்கான ஊதி யத்தைப் பெறலாமே தவிர இத்தகைய மதவாத செயற்பாடு களில் ஈடுபடவேண் டாம் – என்று சொல்லியி ருக்கிறார். அங்கு பணியாற்றிய தரிக் அல் இத்பய் அமைப் பைச் சேர்ந்த சிலர் தமக்குச் சார்பான வர்களை இணைத்து இந்தப் படுகொலை யைச் ஷரியா சட்டத் தின் அடிப்படையில் நிறைவேற்றியிருக் கிறார்கள்.



### சிங்கள மக்கள் உணரவேண்டும்

சிங்கள மக்களில் பலர் இந்தக் கொடூரத்தைக் கண்டித்துக் கண்ணீர் விட்டார்கள். இதேபோன்ற தொரு கொடூரம் இதே சிங்கள மக்களில் ஒரு பிரிவினரால் 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பில் வைத்து மேற்கொள்ளப்பட்டது. நிர்வா ணமாக்கப்பட்ட தமிழரைச் சிங்களக் காடையர் கள் சுற்றி நின்று அடித்தார்கள், ஒரு குடும்பத் தையே காருடன் சேர்த்து நெருப்பிட்டார்கள், இதைவிட ஏகப்பட்ட கொடூரங்களை நிகழ்த்தி னார்கள். ஒரு கார் முற்றாக எரிக்கப்பட்டு அதன் கூடு மட்டும் எஞ்சியது. அந்தக் காரில் ஒரு தமிழ்க் குடும்பம் பயணித்தது. தாய் தந்தை 2 பிள்ளைகள் என. அந்தக் காரைக் கொழுத்திய போது பிள்ளைகள் கதறினார்கள். காரை எரித்து விட்டு வேடிக்கை பார்த்தவர்கள் அந்தப் பிள்ளை களைக் காரில் இருந்து இறக்கிவிட்டார்கள். பிள்ளைகள் வீதியோரம் நின்று தமது பெற்றோர் எரிவதைப் பார்த்து அழுதுகொண்டிருந்தபோது தந்தை தீப்பற்றிய தனது உடலுடன் வெளியே ஓடி வந்து தனது 2 பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு எரியும் காருக்குள் புகுந்து அந்தக் குடும்பமே எரிந்து சாம்பலாகியது, இதைப் பார்த்துக்கொண்டு நான் பேசாதிருந்தேன் என்று கூறும் பிரபல சிங்களக் கவிஞரின் கவிதை வெளிவந்த 83 கொடூரங்களை விளக்கப் போதுமானது. இதைவிட மோசமான கொலை களும் கொள்ளையடிப்புக்களும் விரட்டியடிப்பு களும் இலங்கையில் ஒரு தடவை இரண்டு தடவைகள் அல்ல பல தடவைகள் நடந்திருக்கின் றன. 2009 இறுதிப் போர் வரையிலும் நடந்தே றியிருக்கின்றன.

இந்த இருவேறு படுகொலை விடயங்களிலும் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ளத் தவ றக்கூடாது. பிரியந்தவைக் கொன்றவர்கள் இலங் கையில் வாழும் அவரது மனைவியும் இரு பிள்ளைகளும் பாகிஸ்தானில் வாழ்ந்திருந்தால் அவர்களையும் கொன்று எரித்திருப்பார்கள். இங்கு 1983 கலவரத்திலும், பாகிஸ்தான் படுகொலையி லும் சம்பந்தப்பட்டவர்கள் பாகிஸ்தானிலும் இலங்கை யிலும் வாழும் மக்களில் ஒரு சிறு பிரிவினரே. அவர்களால் அந்த நாட்டுக்கும் இனத்துக்கும் மதத்துக்கும் கெட்ட பெயர் வந்திருக்கிறது.

பிரியந்தவின் கொலையைக் கண்டிக்கும் சிங் கள மக்கள் தமது இனத்தவர்களால் கொல்லப் பட்ட அப்பாவித் தமிழர்கள் விடயத்திலும் அதே சிரத்தையுடன் செயற்பட்டு ஏனைய இனங்களை யும் சமதையாகவும் கௌரவமாகவும் நடத்தும் உயர்நிலையை எட்டவேண்டும் என்பதையே பிரி யந்த குமாரவின் படுகொலை சிங்கள மக்களுக் கும் காடையர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பௌத்த மதத் தலைவர்களுக்கும் உணர்த்தியி ருக்கிறது. எதிர்காலத்தில் இதைச் சீர்செய்ய வேண்டிய கடப்பாடும் சிங்கள மக்களுக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உவர் இப்ப ஆரோட நிக்கிறார்...?"

நியூட்டன்

உவர் இப்ப ஆரோட நிக்கிறார்...?" என்கிற பேச்சாடல் உள்ளூர்களில் நாளாந்தம் பலரால் கேட்கப்படும் கேள்வியாகி விட்டது. அன்றாடம் கட்சி தாவும், கொள்கை மாறும் நபர்கள் இப்போது எந்தக் கட்சியில், எந்தத் தலைவருடன், என்ன கொள்கையுடன் இருக்கிறார் என வினவுவதாக இதன் உள்ளார்ந்தம் விரிந்து செல்லும்.

மூத்த அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர்; கூறுவார், "தமிழனிட்ட எந்தக் கொள்கையுமில்லை. கையில தடியை வைத்திருப்பான். தேவைக்கேற்றபடி அதில் கொடியைக் கொழுவிக்கொள்வான்" என்று. இந்த விடயம் 2009க்குப் பிற்பட்ட காலத்தில் மிகவும் மலிந்துவிட்டது.

கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற் பட்பட்டுப் பிளவுகளுக்கு ஏற்ப தொண்டர்களும், செம்பு காவிகளும், அள்ளக்கைகளும் சிதறிப் போய் நிற்கின்றனர். யார் நல்லவர்? யார் துரோகி? என்பதில்கூடச் சரியான தெளிவில்லை. தமக்குத் தனிப்பட்ட முறையில் பிடிக்காத ஒருவரை மக்கள் மத்தியில் பொதுப்படையாகத் துரோகியாக்கி விடுகிறார் மற்றொருவர். ஆனால், அது தனிப்பட்ட விரோதம் கருதியதே தவிர பொதுநலன் கருதியதல்ல.




### ஜி.ஜி – செல்வா பிரிவு

தமிழர் மத்தியில் முதலாவதாக உருவாக்கப்பட்ட கட்சி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். அது தொடங்கப் பட்டு ஓர் ஆண்டு காலத்தில் அதி லிருந்து தந்தை செல்வா தலைமை யிலான அணி பிரிந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற கட்சியைத் தொடங்கியது. இந்தக் கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவெடுத்தது.

1977இல் தமிழீழத்துக்கான ஆணை பெறும் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டது. பரப்புரைக் கூட்டங்களில் மின்குழிழ்களை உதயசூரியன் வடிவில் அரைவட்டக் கதிர்வீச்சாக ஒளிரவிட்டு மக்கள் மத்தியில் பதியவும் செய்தார்கள். தற்போது அதன் தலைவராக வீ.ஆனந்தசங்கரி உள்ளார். உதயசூரியன் சின்னத்தையும் கைப்பற்றி வைத்திருக்கிறார். அதன் பின்னர் இந்தக் கட்சியின் நதிக் கிளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது.

### ரெலோவுக்குள் பிரிவு

குட்டிமணி,தங்கத்துரை ஆகியோரின் எண்ணத்தில் உதித்ததுதான் ரெலோ. தமது கடத்தலைக் காட்டிக் கொடுக்கும் காவல்துறையினரைச் சுடுவதே அதன் முக்கிய வேலையாக இருந்தது. இது இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படும் கடத்தல் பொருள்களைக் காப்பாற்றுவதற்காக நடத்தப்பட்ட ஆயுத நடவடிக்கையே தவிர இன விடுதலைக்கான நடவடிக்கை அல்ல என அவர்களுடன் முரண்பட்ட பிரபாகரன் ரெலோவிலிருந்து வெளியேறிப் புதிய விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை உருவாக்கினார்.

குட்டிமணி, தங்கத்துரையின் பின்னர் ரெலோ அமைப்பு சிறிசபாரட்ணத்தின் தலைமையில் இயங்கியது. இந்திரா காந்தியினதும், தி.மு.க. தலைவர் கருணாநிதியினதும் விருப்புக்குரிய அமைப்பாக உருவெடுத்தது. ஆனாலும் பொபி குழு, தாஸ் குழு என 2 ஆயுத அணிகளாகப் பிரிந்து ஆளுக்காள் தாக்கிக் கொண்டனர். 1986இல் புலிகளாலும் தடைசெய்யப்பட்டது. இந்தக் காரணங்களால் அதன் கட்டமைப்புக் குலைந்தது.

பின்னர் செல்வம் அணி, சிறி அணி என இருவேறுபட்ட அமைப்புகளாகச் செயற்பட்டு வருகின்றது. இதில் சிறி [illegible] ருடன் இணைந்து பணியாற்றி வருகிறது. செல்வம் அணி மகிந்தவுக்கு எதிரான கூட்டமைப்பில் இருக்கிறது.

### ஈ.பி.ஆர்.எல்.எவ்பின் பிரிவு

யாழ்ப்பாணத்தில் சித்தாந்த ரீதியாக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற அணியாக பத்மநாபா தலைமையில் இயங்கியது ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா இந்தியாவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் 1987 – 1990 காலப்பகுதியில் வரதராஜப் பெருமாள் தலைமையில் இந்தியப் படையினருடன் இணைந்து செயற்பட்டது.

வடக்குக் கிழக்கில் மாகாண ஆட்சியை முதன் முதலாக அமைத்தது. எனினும் அதைத் தொடர முடியாத நிலையே காணப்பட்டது. பின்னர் இப்போது சுரேஷ் அணி, வரதர் அணி என இரண்டாகப் பிரிந்து செயற்படுகிறது.

### ஈ.பி.டி.பிக்குள் பிரிவு

1986இல் புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐத் தடை செய்தபோது அதில் அங்கம்வகித்தடக்ளஸ்தேவானந்தா கொழும்புக்கு ஓடி அப்போதைய அரச தலைவர் ரணசிங்க பிரேமதாசவுடன் சேர்ந்துகொண்டார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இந்தியப் படையுடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் அதன் படைப் பிரிவுத் தலைவராக இருந்தவர் டக்ளஸ். இந்தியப் படை வெளியேறிய பின்பு இந்தியாவில் நிலைகொண்டிருந்தார். 1991இல் கொழும்புக்குத் திரும்பி வந்து அரச படையினருடன் இணைந்து துணைப் படையாகச் செயற்பட்டபடி அரசியலிலும் ஈடுபட்டார்.

அவரால் உருவாக்கப்பட்ட ஈ.பி.டி.பி. கட்சியில் முக்கிய நபராக இருந்தவர் சந்திரகுமார். உட்கட்சி முரண்பாடுகளால் அதிலிருந்து அவர் பிரிந்து சமத்துவக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை தொடங்கிச் செயற்பட்டு வருகிறார். இந்த உடைவு ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களை இரண்டாகப் பிரித்தது. டக்ளஸ்தேவானந்தா எப்போதும் ராஜபக்ச தரப்புடன் இணைந்து பணியாற்றி வருகிறார்.

### சம்பந்தன் – விக்கி உடைவு

சேர் பொன் ராமநாதனை ஆறுமுக நாவலர் அரசியலுக்குக் கொண்டு வந்ததுபோல நீதியரசரான விக்னேஸ்வரனை 2013 வடமா காண சபைத் தேர்த லின் மூலம் அரசிய லுக்குக் கொண்டு வந் தார் சம்பந்தன். கூட்டமைப்பினருக்கு விழும் வாக்குகளில் ஒரு விருப்பு வாக்கை அவருக்கு விழும்படியும் செய்தார். அதன் படி 1 லட்சத்து 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை விக்னேஸ்வரன் பெற்றார். அதனால் மக்கள் தனிப்பட்ட முறையில் தன்னை விரும்பியிருக்கிறார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டார்.கூட்டமைப்பிலிருந்து பிரிந்து 2015 தேர்தலின்போது கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிப் புதிய கட்சி ஒன்றையும் அமைத்தார். 2020 தேர்தலில் போட்டியிட்டு 21 ஆயிரம் வாக்குகளுடன் (முன்னர் பெற்ற வாக்குகளைவிட 1 லட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் குறைவு) நாடாளுமன்றம் சென்றார். இது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள் இடம் பெற்ற மற்றுமோர் முக்கிய உடைவாகும்.

### கஜேந்திரகுமார் – மணி பிரிவு

தமிழ்த் தேசியக் கொள்கைகளை அடிப்படையாக வைத்துச் செயற்பட்டு 10 வருட காலப் போராட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஓரளவுக்குச் செல்வாக்கு மிக்க கட்சியாக வளர்ந்து வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் 2020 தேர்தலின் பின்னர் ஏற்பட்ட முரண்பாடுகளால் மணிவண்ணண் தலைமையில் ஓர் அணி பிரிந்து செயற்படுகிறது. நாங்கள்தான் முன்னணியின் சொந்தக்காரர்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உரிமை கோரத் தொடங்கியிருக்கின்ற னர் அந்த அணியினர் இப் போது.

**புலிகளின் உடைவு**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஈழத் தமிழர்கள் மத்தியில் எழுந்த அரசியல் அமைப்புக்களிலேயே மிகச் சிறந்த ஆளுமையையும் கட்டுக் கோப்பையும் வெளிப்படுத்திய ஓர் உன்னத அரசியல் இயக் கம். ஆனால், தமிழர்களின் துன்பியல் அந்த இயக்கத்தையும் விட்டு வைக்கவில்லை. அதிலிருந்து அதன் கிழக்கு மாகாணத் தளபதியாகச் செயற்பட்டு வந்த கருணா எனப்படும் விநாயக மூர்த்தி முரளிதரன் பிரிந்து சென்றார். தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்கிற அரசியல் கட்சியைத் தொடங்கினார். அவரோடு தோள் நின்ற பிள்ளையான் பின்னர் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து தனித்து அரசியல் செய்யத் தொடங்கினார்.

இத்தகைய பிளவுகளால் ஒரு கட்சியின் ஆதரவாளர்களே இருவேறு பிரிவுகளாகச் செயற்படும் நிலையும் ஒரு கட்சிக்குள் இரு கன்னை பிரிந்திருக்கும் நிலையும் காணப்படுகிறது. இத்தகைய கட்சிப் பிளவுகளால் ஏதோ ஓர் அணி தென்பகுதி அரசியல்வாதிகளுடன் கைகோர்த்துச் செயற்படும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் மக்களும் இருவேறு கருத்து நிலைக்கும், செயற்பாட்டுக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இது கட்சி மோதல்களும் போட்டிகளும் அதிகரிக்கவும், எதிரிகள் துரோகிகள் எனச் சிதிலமடைந்து செல்லவும் வழிவகுத்திருக்கிறது. எந்தவொரு சிங்களத் தலைவரானாலும் அவரை வரவேற்பதற்கு யாரோ ஒரு தமிழன் இருக்கவே செய்கிறான்.

1949இல் தொடங்கிய தமிழ் அரசியல் கட்சிகளின் பிளவுகள் இப்போதுவரை ஓயவில்லை. கொள்கை கோட்பாடற்ற தமிழரின் செல்நெறியையே இது காட்டுகிறது. இந்த அடிப்படையிலேயே, "உவர் இப்ப ஆரோடை...?" என்கிற தனி மனிதக் கேள்விகள் எழுகின்றன. இதற்கிடையில் இவர்தம் அரசியலில் தமிழ்த் தேசியமும் இழையோடுவதாகக் கூறப்படுவதுதான் மிகச் சிறந்த பகிடி.

## கதிரேசன் காத்தவராயன்

# மறதியும் சோறு போடுமோ?

''சுப்பிரமணியம் மாஸ்ரர் கனநாளாக் காணேல்லை எண்டு கேட்டவர்'' எண்டு மேள் சொன்னாள். மாஸ்ரர் வீட்டை போனன். மாஸ்ரற்றை மேன் சுதன் தான் ''வாங்கோ மாமா'' எண்டு கூப்பிட்டு இருத்தினான். ''அப்பா இல்லையோ? காணயில்லை ஆளை? அதுசரி எப்பிடியெடா தம்பி பள்ளிக்கூடங்கள் போகுது?'' எண்டு கேட்டுக்கொண்டிருக்க மாஸ்ரர் கையிலை பேப்பரோடை வந்து இருந்து ''பேப்பறுகளிலையும் ஒண்டுமில்லை கதிரேசர்... பாத்த பழக்கம் பாக்காமலுக்கும் இருக்க முடியுதில்லை'' எண்டார்.

பிறகு அவரே ''கதிரேசர் நீர் சுதனைக் கேட்ட விசயம் இருக்கல்லே வலு மோசம். கவனமில்லாத வேலை காணும்... மழை வெள்ளம் எண்டு மூடின பள்ளியளை சனிக்கிழமையளிலை நடத்துகினம்... போர்காக் லத்திலை பதில் பாடசாலை எண்டிறதொரு விசயத்தை அறிஞ்சதுகூட இல்லை...'' எண்டு மாஸ்ரர் சொல்லிக்கொண்டிருக்க முருகேசரும் தம்பரும் வந்து எங்கடை கதையிலை சேந்துகொண்டினம்.

''நாங்கள் சரியான கெட்டிக்காறரல்லே... எவ்வளவு பிரச்சனையையும் சிம்பிளாத் தீர்த்துப்போடுவம்... எண்டு வீரம் பேசியல்லே கனக்க விசயத்திலை கவிண்டு கொட்டுண்டிருக்கிறம்...'' எண்ட முருகேசர் வழக்கம் மாதிரி எல்லாரையும் ஒருக்காப் பாத்தார். ''ஏன் முருகேசண்ணை இப்ப கடைசியாய் காஸ் சிலிண்டர் பிரச்சனைக்கும் தீர்வு கண்டிட்டமல்லே?'' எண்டு தம்பர் சொன்னார். மாஸ்ரர் பிலத்தாச் சிரிச்சார்.

''தம்பா! குக்கரும் குழாயும் வெடிக்கிறதுக்கு சிலிண்டரிலை ஸ்ரிக்கர் ஒட்டிச் சரிவருமோ? வெடிக்கிறதுக்கு ஸ்ரிக்கர் ஒட்டலாமெண்ட விசயம் முந்தியே தெரிஞ்சிருந்தால் பங்கர் வெட்டிறதை விட்டிட்டு ஸ்ரிக்கர் ஒட்டியிருக்கலாமல்லே? இஞ்சாருங்கோ மாஸ்ரர் உந்த ஸ்ரிக்கர் விளையாட்டு முந்தியும் நடக்கிறதல்லே?'' எண்டு முருகேசர் மற்றத்தரமும் தன்ரை ஸ்ரைலிலை நிப்பாட்டினார். எல்லாரையும் ஒரு பார்வை பாத்தார்.

''என்ன கதிரேசண்ணை முருகேசர் ஸ்ரிக்கர் விளையாட்டெண்டிறார்? அடடட ஓஓ... கொரோனாவுக்கு ஒட்டினனாங்கள் என்ன? தொத்துக்காறர் வீடகளிலையிருந்து வெளிக்கிடாமலிருக்க படலையளிலை ஒட்டினதல்லே அதையே சொல்லுறார்?'' எண்டார் தம்பர் குழப்பத்தோடை. எல்லாருமே சிரிச்சம்.. தம்பர் உட்பட. ''ஒட்டிக்கழைச்சு அதையும் விட்டாச்சல்லே'' எண்டுது சுதன். ''ஒட்டுறது பூட்டிறது மட்டுமே விட்டாச்சு?'' எண்டு திரும்பவும் துண்டுக் கதையாய் சொல்லி நிப்பாட்டினார் முருகேசர்.

''இஞ்சாரும் தம்பு உம்மடை சந்தேகத்துக்கு வாறன்... வடிவாய் நினைச்சுப்பாரும் கொஞ்சக் காலத்துக்கு முதலிலை நடந்ததை? என்ன ஞாபகமில்லையே?'' எண்டு மாஸ்ரர் கேக்க இல்லையெண்டிற மாதிரியாய் தம்பர் தலையை ஆட்டினார். ''உந்த அங்கர் மாவிலை ஏதோ கலந்துகிடக்குது எண்டு ஒரு பூதம் வெளிக்கிட்டதல்லே? கிடக்குதெண்டும் இல்லையெண்டும் கடுமையாய் குழம்பியடிச்சனாங்கள். என்ன ஞாபகம் வருகுதே? ம்ம்ம்... பிறகு பெட்டியிலை ஸ்ரிக்கரோடை வாறது நல்லது எண்டு அறிவிச்சனாங்களல்லே?'' எண்டு நான் அந்தக் கதையை ஞாபகப்படுத்த எல்லாரும் ''ஓஓஓ...'' எண்டு ஆமோதிச்சினம்.

> **உந்த அங்கர் மாவிலை ஏதோ கலந்து கிடக்குது எண்டு ஒரு பூதம் வெளிக்கிட்ட தல்லே? கிடக்குதெண்டும் இல்லையெண்டும் கடுமையாய் குழம்பியடிச் சனாங்கள். என்ன ஞாபகம் வருகுதே?**

''உந்த ஸ்ரிக்கர் ஒட்டிறதிலை கனக்க நடந்துதானிருக்குது என்ன? நான்தான் மறந்திட்டன்'' எண்டார் தம்பர். ''இஞ்சார் உந்த மறதிதான் பெரிய இடங்களுக்குச் சோறு போடுகுது கண்டியளோ?'' எண்டார் முருகேசர். ''அரசியலும் சரி நிர்வாகமும் சரி சொல்லகிறதகளிலை ஏதாவது நடக்கிறதே? சொல்லெக்கை ஆவெண்டு கேக்கிறதும் எதையாவது தொடங்கேக்கை வாயைப்பிளக்கிறதும்தான்... சொன்னதையும் சரி தொடங்கிறதுகளையும் சரி செய்யிறதுமில்லை. முடிக்கிறதுமில்லை... நாங்கள்தான் மறந்து போகிடுவமே...அவங்களும் மறந்து நாங்களும் மறந்து... மறதி அவங்களுக்கு சோறு போடுகுதில்லோ?'' எண்டார் மாஸ்ரர். ''உண்மைதான்'' எண்டன் நான்.

''உதுதான் மாமா பள்ளிக்கூடங்கள் எப்பிடியெண்டதிலையும்... பள்ளிக்கூ டம் வராத ஆக்களைப் பிடிச்சு சோதினை எழுத வைச்சு றிசல்ற் வந்தவுடனை ஒப் பாரி வைச்சுக் குழறுகிறதுக்கு ஆயித்தப்படுத்துறம்... தொழிலறிவு இல்லாமலவனும் கல்வியிலை பின்னுக் குப் போட்டமெண்டு நாங்களும் அழுகிறதுக்கு ஆயத் தப்படுத்துகிறம்'' எண்டான் சுதன். ''அதுகும் ஒரு வேலைதானே? செய்வம்'' எண்டுகொண்டு வந்திட் டன்.

# இதுக்கும் பயன்படுமாம் வயக்கரா!

அறிமுகமான காலத்தில் உலகையே ஒரு கலக்குக் கலக்கிய மாத்திரை என்றால் அந்தப் பெருமை வயக்கராவுக்குத்தான் உண்டு.


ஆண்மை குறைவு பிரச்னைக்கு மருந்தாக எடுத்துக் கொள்ளப்படும் வயாகராவை, அல்சைமர்ஸ் நோய்க்கும் மருந்தாகப் பயன்படுத்தலாம் என அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வயாகரா மருந்து மூளையில் என்ன மாதிரியான தாக்கங்களை ஏற்படுத்தும் என இவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

அல்சைமர்ஸ் போன்ற மறதி நோயின் டிமென்ஷியாவினால் திரளும் புரதங்களை, வயாகரா மருந்து இலக்கு வைப்பதாக, உயிரணுக்களை பரிசோதனை செய்ததன் மூலம் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சுமார் 70 லட்சம் நோயாளிகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்த க்ளீவ்லேண்ட் அணி, வயாகரா மருந்து எடுத்துக்கொள்ளும் ஆண்கள், அல்சைமர்ஸ் நோயால் பாதிக்கப்படுவதற்கான அபாயம் குறைவாக உள்ளது என கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பான ஆய்வுகள் மதிப்பு வாய்ந்தது என இந்த ஆராய்ச்சியாளர்கள் 'நேச்சர் ஏஜிங்' என்கிற சஞ்சிகையில் வெளியாகி யுள்ள ஆய்வுக் கட்டுரையில் கூறி யுள்ளனர்.

ஏற்கனவே இருக்கும் மருந்தை வேறு ஒரு தேவைக்கு பயன்படுத்துவது விரைவானது, எளிமையானது, புதிய மருந்தைக் கண்டுபிடிப்பது, புதிய சிகிச்சையைக் கண்டுபிடிப்பதைவிட விலை மலிவானது என நிபுணர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனிமேல் ரோபோட்டுக்களும் இனப்பெருக்கம் செய்யும்

வெர்மான்ட் பல்கலைக்கழகம், டஃப்ட் பல்கலைக் கழகம், ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் விஸ் இன்ஸ்டிட்டியூட் ஃபார் பயலாஜிகலி இன்ஸ்பைர்டு இன்ஜினியரிங் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் சேர்ந்து முற்றிலும் புதுவகையான உயிரியல் மறு உற்பத்தி முறை ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இந்த முறையைப் பயன்படுத்தி, முதல் முறையாக இனப் பெருக்கம் செய்யும் ரோபோட்டுகளை உருவாக்கி யுள்ளார்கள். அதைப் பற்றிய சில சுவாரசியமான தகவல்கள்:

1. தவளை செல்களில் இருந்து ஜெனோபோட் என்று அழைக்கப்படும் உயிருள்ள ரோபோட்டுகளை உருவாக்கி 2020இல் அறிவித்த விஞ்ஞானிகள் குழுதான், இப்போது இனப்பெருக்கம் செய்யும் ரோபோட்டுகளை உருவாக்கியுள்ளது.

2. இந்த இனப்பெருக்கம் செய்யும் ரோபோட்டுகள் கணினி உதவியால் வடிவமைக்கப்பட்டு, பிறகு பொருத்தப்பட்டவை.

3. சிறு தட்டு ஒன்றில் நீந்திச் சென்று, நூற்றுக்க ணக்கான தனித்தனி செல்களை ஒன்று திரட்டி தங்கள் வாய் பகுதியில் புதிய குழந்தை ரோபோட்டு களை இவை உருவாக்குகின்றன.

4. இந்த குழந்தை ரோபோட்டுகள் சில நாள்க ளில் வெளியே வந்து தாய் ஜெனோபோட்டுகள் போலவே நகரவும் செயல்படவும் தொடங்குகின்றன.

5. தவளையின் கருவில் உள்ள ஸ்டெம் செல்லை எடுத்து இவற்றை விஞ்ஞானிகள் உருவாக்கினர்.

6. தடுப்பூசி மாதிரிகளை உருவாக்கவும், சேத மடைந்த மனித உயிரணுக்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தவுமே முதலில் விஞ்ஞானிகள் உயி ருள்ள ரோபோட்டுகளை உருவாக்கினார்கள்.

7. ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான அகல முள்ள ஜெனோபோட்டுகள் முன்பே தாமாக நீந்திச் செல்லவும், நகரவும், தங்களைத் தாங்களே குணப் படுத்திக்கொள்ளவும் கூடியதாக இருந்தன.

8. இப்போது புதிய கண்டுபிடிப்பில் இந்த ஜெனோ போட்டுகள் இனப்பெருக்கம் செய்யக் கூடியவையாக உருவாக்கப்பட்டுள்ளன.

9. தவளையின் ஜெனோம் இந்த ஜெனோபோட்டு களில் இருந்தாலும் இவை தலைப்பிரட்டையாக மாறாது. தவளை இனப்பெருக்கம் செய்வது போல அல்லாமல் முற்றிலும் வித்தியாசமாக இவை இனப் பெருக்கம் செய்கின்றன. இதுவரை அறிவியல் அறிந்த எந்த விலங்குகளோ, தாவரங்களோ இப்படி இனப் பெருக்கம் செய்வதில்லை என்கிறார் ஆராய்ச்சியின் தலைமை ஆய்வாளர் சாம் கிரீக்மேன்.

10. முதலில் உருவாக்கப்படும் தாய் ஜெனோபோட் 3 ஆயிரம் செல்களால் ஆனது.

# எமையறிதல்... 36

ஐயங்கொண்டான் சுவாமிகள்

வாழிடம் என்பதை இருக்கின்ற விடங்களைவிட இல்லாத கற்பனை விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அமைத்துவிட்டு அல்லல் படுகிறோம் என்பதை எப்போதாவது சிந்தித்துள்ளோமா? வாழிடம் தொடர்பில் மட்டுமல்ல எமது அன்றாட வாழ்விற்கான வசதி வாய்ப்புகளையும்கூட தவற விட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர்வ தில்லை. தவறவிடப்பட்டதாலேற்பட்ட இழப்பினை அல்லது இடையூறுகளை விதிப்படிதான் என்று தலைவிதி என்கிற கற்பனைப் பாத்திரத்தில் சுமத்திவிட்டு புலம்பித் தவிக்கி றோம்.

விதி எனும்போது இயற்கை விதிகள் என்ற உண்மைகள் ஏராளம் இருக்கின்றன. நாங்கள் எமக்கு வசதியானவற்றை அல்லது சாதகமானவற்றை மட்டுமே கவனத்தில் கொள்கிறோம். அவற்றைக்கூட எமக்கேற்றபடி மாற்ற முற்படுகிறோம். தொழில்நுட்பம் விஞ்ஞான - மருத்துவ வளர்ச்சியை துணைக்கழைத்து இயற்கை தந்த விதிகளை மாற்ற விளைகிறோம். இயற்கை எதிர்நீச்சலிட்டு தன்னைத் தக்கவைக்க முயல்கிறது என்பதை ஒவ்வொரு முறையும் உணரத் தவறிவிடுகிறோம்.

இயற்கையினது தன்னைத்தானே தக்கவைக்க எடுத்துக்கொள்ளும் எத்தனிப்புகள் இயற்கைப் பேரிடர்களாக திகைக்க வைத்துக்கொண்டிருக்கிறது. இதனையும் முன்பிற விப்பயன் தெய்வக்குற்றம் போன்ற கற்பனைகளான விடயங்களுக்குள்ளால் கடந்து போக முயல்கிறோம். கடந்து போதலுக்குள்ளால் பிராயச்சித்தம் தோசநிவர்த்தி நேர்த்தி அதுஇதுவென்று பலவாறாக சுரண்டிப்பிழைக்கும் ஒரு ஏமாற்றுக்கூட்டம் கொழுத்துக் கொண்டிருக்கிறது.

இங்கு இந்தச் சுரண்டிப் பிழைப்போர் புத்திசாலிகளே என்பதை ஏற்றேயாக வேண்டி யுள்ளது. பருவங்களை (இயற்கை விதி) நன்கு புரிந்துவைத்துக்கொண்டு ஆவணி புரட்டாதி மாதங்களில் மழையைவேண்டி யாகம் மோதகபூசை கொடும்பாவியிழுப்பு என்பன போன்ற பித்தலாட்டங்களைச் செய்து பணமீட்டிக்கொள்கின்றவர்கள் அவர்க ளல்லவா? அடுத்து வரும் மாதங்களில் தழை கொட்டித் தீர்க்கிறபோது நாங்கள் யாகத்தின் மகிமை மோதக பூசையின் பயன் அவற்றை முன்னெடுத்த புரோகிதனின் சிறப்பு என்றெல்லாம் பிரமித்துப்போகிறோம். கோடையை அடுத்து மாரி வந்தே தீரும் என்கிற விதியை அறியாத நம்பாத ஒரு கூட்டமாகவே இருந்துவிடுகிறோம்.

இதே சடங்குகளை வைகாசியில் செய்து வெள்ளமோடச் செய்ய முடியுமா அவர்க ளால்? ஏன்று விடைகாண எப்போதாவது முயன்றிருக்கிறோமா? மழை பொழிவது மட்டுமல்ல பொய்த்துப்போவதும்கூட இயற்கைதான். ஆளவை மீறிப் பொழிவது காலந் தப்பிப் பொழிவது பொய்த்துப்போவது என எல்லாமே தெய்வக்குற்றமல்ல. எமது குற்றமே. இயற்கையை துன்புறுத்தி அழிப்பதன் விளைவுகள்தான். வரட்சி என்பதுகூட அவ்வாறே. கற்பனையில் வைக்கின்ற நம்பிக்கையில் ஒரு சிறு பகுதியையாவது இருக்கின்ற இயற்கையின்மீது வைத்திருப்போமாயின் அனர்த்தங்கள் ஏற்படுமா?

இயற்கை நியதிகளை அதாவது விதிகளை மீறிவிட்டு எந்தவிதமான ஆய்ந்தறிதலும் இல்லாமல் கற்பனைக் காரணங்களிற்குள் முடங்கிக்கொள்கிறோம். இயற்கை என் கின்ற பெருஞ்சக்தியை உணர மறுத்தபடி இல்லாததுகளை நம்பி வாழ்கிறோம் என்ப தைக்கூட புரிந்துகொள்ளமுடியாத நிலையில்தான் வாழ்கிறோம். வாழ்வு இனிக்குமா?

முன்பகுதியில் பகிர்ந்தபடி இல்லாத ஒன்றை நம்புகிறோம். அதன்பின் அலைந்து கொண்டிருப்பதால் இருப்பவற்றை கண்டுகொள்ளவும் அவற்றைச் சரிவர அனுபவிக்க முடியாமலும் இருக்கிறோம். உள்ளதை அனுபவித்தல் என்பதைத் தவிர்த்து இல்லாத துகளை எண்ணிக் காலத்தைப் போக்காட்டிக்கொண்டிருக்கிறோம். கானல் நீரை அமிர்தம் நிறைந்த சுனை என்று நம்பி நீந்தி மகிழ்தல் என்பதை எண்ணிக்கொண்டி ருக்கிறோம். யதார்த்தமற்றவற்றை அனுபவிக்கத் தவிக்கிறோம். அவ்வளவுதான்.

இவ்வுலகில் கண்காண தொட்டுணர சுவைக்க கேட்க மணக்க என்றிருக்கிற யதார்த் தத்தை அனுபவிப்பதை கன்மவினை முக்தி சுவர்க்கம் நரகம் என கற்பனையிலுள்ள விடயங்களை விரும்பியோ பயந்தோ தவிர்த்துவிடுகிறோம். வாழ்வை மனநிறைவோடு அனுபவித்து நாமும் நிறைந்து பிறரையும் நிறைவிக்க முடியாமல் யதார்த்தமான நிகழ் காலத்தைத் தொலைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த உண்மையை உணர்ந்துகொள்ள கட்டுப்பாடுகள் கற்பிதங்களற்ற வினாக்களோடு உறவாடவேண்டும். சிந்தனை விரிவா கும். சிந்திப்போம்.

## ரித்து சினிமாவில் நடிக்க ஒப்பந்தம்



ஒரு காலத்தில் சினிமாவில் மதிப்பிழந்தவர் கள்தான் சின்னத்திரைக்கு வந்தார்கள். காலம் மாறியது. சின்னத்திரை சினிமாவிற்கான நுழை வாயிலானது. நடிகர் சிவகார்த்திகேயன், சந்தா னம் போன்ற பலர் சின்னத்திரையிலிருந்தே சினி மாவிற்குள் நுழைந்து வெற்றி பெற்றார்கள்.

இப்போது அதன் அடுத்த கட்டமாக சமூக வலை த்தளமான யுரியூப் போன்றவையும் சினிமாவிற் கான நுழைவாயில்க ளைத் திறந்துவிட்டு ள்ளன. அண்மையில் அவ்வாறு யுரியூப்பராக இருந்து சினிமாவிற் குள் நுழையும் சமூக வலைத்தள நட்சத்திர மாக மாறியிருக்கி றான் சிறுவன் ரித்து.

'ரித்து ராக்ஸ்' என்ற யுரியூப் சேன லில் தனது சுட்டித்தனமான வீடியோக்களின் மூலம் பிரபலமான தமிழ்நாடு, கோயம்புத்தூரைச் சேர்ந்த 7 வயது சிறுவன் ரித்விக், இப்போது இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளான் என்று அவரது தந்தை தெரிவித்தார்.

ஏற்கனவே பிடவைக் கடை விளம்பரத்தில் நடித்திருக்கிறார் ரித்விக். இப்போது திரைப்படத் திலும் நடிக்க இருப்பது அவரது பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளது. இவையனைத்தும் யுரியூப்பினால் மட்டுமே சாத்தியமாகியிருக்கி ன்றது என்பதுதான் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தப்பிப் பிழைக்குமா தலை?"

## யாழ். மாநகர சபைப் பாதீடு ஒரு பார்வை

யாழ். மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தின் முதலாவது முன்வைப்பு - வாக்கெடுப்பு இன்னும் நான்கு நாள்களில் - மார்கழி 15ஆம் நாள் புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. ஆட்சிக்கு வந்து சரியாக ஒரு வருட காலத்தில் மாநகர முதல்வர் மணிவண்ணன் பதவியிழப்பாரா? அல்லது தலை தப்பி அடுத்து வரும் காலத்துக்கும் ஆட்சியைத் தொடர அனுமதிக்கப் படுவாரா? என்பது அன்றைய பாதீட்டு வாக்களிப்பின் நிறைவிலேயே தெரியவரும்.

கடந்த வருடம் வரையில் சுமார் மூன்றாண்டுகள் ஆட்சியில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய உள்வீட்டுக் குழப்பங்களின் காரணமாக அதிகாரத்தை இழந்திருந்தது. பாதீட்டு வாக்களிப்பின்போது இரண்டு முறை தோற்கடிக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட், அதே வாக்காளர்கள் (உறுப்பினர்கள்) மத்தியில் மீண்டும் வாக்கெடுப்பில் வெல்வார் என்ற அநியாய நம்பிக்கை ஒன்றின் அடிப்படையில் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கூடி எடுத்த முடிவு பிழைத்துப் போன தன் விளைவு மணிவண்ணனுக்குச் சாதகமாக அமைந்தது. அப்படி மணிவண்ணன் முதல்வராக வருவதற்கு தமிழ் அரசுக் கட்சிக்குள் இருந்த குழு மனப்பான்மையும் ஒரு காரணம். அந்த மனப்பான்மை காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனின் மறைமுக ஆதரவும் மணிவண்ணன் பதவியைப் பெறுவதற்கு உதவியாக இருந்தது.

தான் முதல்வராகிய சில மாதங்களுக்குள்ளேயே மணிவண்ணன் முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட்டால் செய்யப்படக் கூடியதாக இருந்தும், அவர் செய்யாமல்விட்ட அத்தனை மக்கள் நலன்சார் விடயங்களையும் கையிலெடுத்துச் செய்யத் தொடங்கினார். இதன் மூலம் மக்களிடையே செல்வாக்குப் பெற முயன்றார். வெறுமனே கொள்கையை மட்டும் பேசிக்கொண்டிராமல் மக்களுக்குத் தேவையானதையும் கொள்ளையுடன் சேர்ந்தே கொண்டுசெல்லக்கூடியவன் தான் என்ற எண்ணத்தை மக்களிடம் பதிய வைக்க முயன்றார். இதே சிந்தனைப் போக்கே - அதாவது நிரந்தர அரசியல் தீர்வக்காக முயற்சிக்கும் அதே வேளை மக்களுக்கான அபிவிருத்தியையும் மேற்கொள்ள வேண்டும் - நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமும் ஆழமாக உண்டு என்பதும் இங்கு கவனத்திற்குரியது.

யாழ். மாநகரைப் பொறுத்த வரையில் பெருஞ் சவாலாகக் காணப்பட்ட திண்மக் கழிவகற்றல் பொறிமுறையை கடந்த ஒரு வருட காலத்தில்

**தனியார் பங்களிப்புடன் நகரை அழகுபடுத்தும் திட்டங்கள் தொடங்கப்பட்டன. அதன் ஒரு படியாக ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடலை பாதீட்டுக்கு முன் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தார் மணிவண்ணன். ஒருவேளை பாதீட்டில் தோல்வியடைந்து பதவி பறிபோனாலும் நகரின் மத்தியில் அவரது பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டச் செய்யப்பட்டது**

ஓரளவுக்கேனும் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. குப்பை வண்டில்களில் இன்னமும் வசூல் ராஜாக்கள் வருவது ஒரு புறமிருந்தாலும் குப்பைகள் அளப்படாமல் கிடந்து வீதிகளில் சீரழிகின்றன என்கிற மக்களின் கோபக் குரல் சற்று அடக்கம் காணும் வகையில் செயற்பாடுகளில் முன்னேற்றம் இருந்தது. மாரி காலமானதும் வெள்ளக்காடாகக் காட்சியளித்த யாழ். நகரிலும், புற நகர்ப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்க விடாமல் ஒரே நாளில் வழிந்தோடச் செய்யும் வகையில் வெள்ள வாய்க்கால்கள் புனரமைப்பதற்கான பணிகளும் விரைவுபடுத்தப்பட்டன. மழை நீரைச் சேமிக்கும் வகையில் ஒரு சில குளங்கள் தூர் வாரப்பட்டு துப்புரவாக்கப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல தனியார் பங்களிப்புடன் நகரை அழகுபடுத்தும் திட்டங்கள் தொடங்கப்பட்டன. அதன் ஒரு படியாக ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடலை பாதீட்டுக்கு முன் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தார் மணிவண்ணன். ஒருவேளை பாதீட்டில் தோல்வியடைந்து பதவி பறிபோனாலும் நகரின் மத்தியில் அவரது பெயர் கல்வெட்டில் பொறிக்கப்பட்டச் செய்யப்பட்டது.

மணிவண்ணன் மாநகர சபைக்குத் தெரிவாகியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில். பின்னர் அந்தக் கட்சியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். அதனை அவர் ஏற்றுக்கொள்ளதபோதும், தான் வெளியேற்றப்பட்டதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்துள்ள போதும் மாநகர சபைக்குள் மக்கள் முன்னணி உறுப்பினர்களில் பலர் இன்னும் அவரைக் கவிழ்ப்பதில் குறியாக இருக்கிறார்கள். இப்படி ஒரு புறம் சொந்தக் கட்சியினர் சூனியம் வைக்க, மறுபுறம் எதிர்த் தரப்பாரின் அவதூற்றுப் பரப்புரைகளுக்கு மத்தியிலும் தனக்குக் கிடைத்த வாய்ப்பில் தனது மதிப்பை மக்கள் மத்தியில் உயர்த்தும் திட்டங்களில் மணிவ்ண்ணன் கண் வைத்துச் செயற்பட்டார் என்பது மிகத் தெளிவு.




■ ஆதிரன் ■

இதனால் மணிவண்ணனிடம் மேலும் சிறுது காலத்துக்கு மாநகர சபையின் ஆட்சி இருக்க வேண்டும் என்று மக்களில் ஒரு பகுதியினர் விரும்புகின்றனர். 2018 பங்குனி மாதம் முதல் 2019 மார்கழி வரையான - கிட்டத்தட்ட இரண்டே முக்கால் ஆண்டுகளை கூட்டமைப்பின் முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட் வீணடித்துவிட்ட நிலையில் இப்போதைக்கு இந்த ஆட்சி கலைந்து புதிய முதல்வர் வருவதிலும் பார்க்க மணிவண்ணனே பதவியில் தொடர்வது நல்லது என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

இதனிடையே, நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அமைப்புகளினது ஆட்சிக் காலமும் எதிர்வரும் மாசி மாதமளவில் நிறைவுக்கு வரவுள்ள நிலையில் உடனடியாகத் தேர்தல் நடத்தப்படாமல் மேலும் ஒரு வருடத்திற்கு ஆட்சி நீடிப்புச் செய்யப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. தொழும்பில் ஆட்சியில் உள்ள ராஜபக்சக்கள் தெற்கில் தமது செல்வாக்குச் சரிந்து வரும் நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தயாரில்லை என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். அதனால் சபைகளின் பதவிக் காலத்தை அவர்கள் நிச்சயம் இன்னும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்குமென கணிசமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனூடாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு கிராம, நகர்ப்புற மக்களை மீண்டும் தம்வசப்படுத்தி, செல்வாக்கைப் பெருக்கிக் கொண்ட பின்னர் மாகாண சபைத் தேர்தலையோ, உள்ளூராட்சித் தேர்தலையோ வெற்றிகரமாகச் சந்திக்க முடியுமென்பது ராஜபக்சக்களின் கணிப்பு என்று கருதுகிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

இந்தப் பின்னணியில் யாழ். மாநகர சபையின் ஆட்சிக் காலமும் மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்படலாம் என்ற நிலையில் அந்த ஒருவருட காலத்தையும் மணிவண்ணனிடமே விட்டுவிட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பே அவரது ஆதரவாளர்களிடமும் மக்களில் ஒரு பகுதியினரிடமும் இருக்கின்றது. ஆனால் மாநகர சபைக்குள் ஓராண்டு காலத்திற்கு முன்னர், பதவிக்கு வரும்போது மணிவண்ணன் மீது சபை உறுப்பினர்கள் பலருக்கு இருந்த நல்லெண்ணம் இப்போது இல்லை என்பது அவரது பதவியின் மீது தொங்கும் மிகப் பெரிய கத்தி.

தான் ஆட்சியில் இருந்த காலத்தில் மணிவண்ணன் ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் நடந்து கொண்ட விதம் அவருக்குச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தனது செல்வாக்கை, மதிப்பை மக்கள் மத்தியில் உயர்த்துவதில் அவர் கூடுதல் கவனம் காட்டினாரே தவிர உறுப்பினர்களின் விருப்பத்தை, கரிசனைகளை மதிக்கவில்லை என்பது அவர்களின் குற்றச்சாட்டு. உறுப்பினர்கள் மத்தியில் அதிலும் தனக்கு கடந்த தடவை ஆதரவளித்த ஈபிடிபி மற்றும் சுந்திரக் கட்சி போன்றவற்றின் அதிருப்தி குறித்தும் அதனால் தன் பதவிக்கு மேல் பாதீடு எனும் கத்தி தொங்குவதை அறிந்தும், தம்முடன் இணங்கிப் போக முயற்சிக்காமல் வீராப்புடன் மணி வண்ணன் நடந்துகொள்கிறார் என்பதும் தனது பதவி பறிபோனால் சபை கலைந்துவிடும் அதனால் உறுப்பினர்களுக்கு இப்போது கிகைட்கும் பல சலுகைகளும் கிடைக்காமல் போய்விடும் என்பதைக் காட்டி மிரட்டியே ஆட்சியில் தன்னால் தொடர முடியும் என்ற அவரது எண்ணமும் ஒரு தொகுதி உறுப்பினர்களைச் சீற்றம்கொள்ள வைத்துள்ளது.

இக்கட்டான நிலையிலும் தன்னை மட்டும் முன்னிறுத்திக்கொண்டு சபையின் எதிர்காலத்தைக் கருத்தில்கொள்ளாமல் மணிவண்ணன் முன்னெடுக்கும் இந்த அரசியல் நகர்வு அவரது அரசியல் முதிர்வின்மையையே காட்டுகிறது.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின்படி பாதீடு இரண்டு வாக்கெடுப்புகளிலும் தோற்கடிக்கப்பட்டால் முதல்வர் பதவி விலகியதாகக் கருதப்பட்டு, உள்ளூராட்சி ஆணையாளரினால் புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பிப்...

நடத்தப்படுமே தவிர சபை கலைக்கப்பட மாட்டாது. எனவே தன்னைப் பதவியிலிருந்து அகற்றினால் உறுப்பினர்கள் அனுபவிக்கும் சலுகைகள் இல்லாமல் போய்விடும் என்கிற முதல்வரின் மிரட்டல் ஆதாரம் ஏதுமற்றது. ஆனாலும், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அவ்வாறு புதிய முதல்வர் தெரிவு செய்யப்படாமல், சபை கலைக்கப்பட்டு ஆளுநரால் நியமிக்கப்படும் விசேட ஆணையாளர் ஒருவரின் கீழ் - முதல்வரின் அதிகாரங்கள் கையளிக்கப்பட முடியும் என்றும் சட்டவல்லுநர்கள் சிலர் சட்ட வியாக்கியானம் செய்கிறார்கள் என்பதும் கவனத்திற்குரியது.

இத்தனை விவாதத்திற்கும் காரணமாக மாறியிருக்கும் யாழ். மாநகர சபையின் பாதீடு தோற்கடிக்கப்படுமா? அதை முன்னின்று செய்யக் கூடிய பலம் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மட்டுமே உண்டு. சபை உறுப்பினரான லோகதயாளன் தொடக்கம் முதலே மணிவண்ணனின் ஆட்சியின் மீது அதிருப்திகொண்டுள்ளார். ஒரு ஊடகவியலாளராகவும் இருக்கும் இவர், தனக்கிருக்கும் ஊடகப் பலத்தைக் கொண்டு மணிவண்ணனின் ஆட்சியில் நடந்திருக்கக்கூடிய சந்தேகத்திற்குரிய பல நடவடிக்கைகளை வெளிப்படுத்தி அவருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வந்திருக்கிறார். மணிவண்ணனைப் பதவியிலிருந்து அகற்றி கூட்டமைப்பு மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார். அவருக்குப் பக்கபலமாகப் பின்புலத்தில் பதவியிழந்த முன்னாள் ஆளுநர் ஆர்னோல்ட் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பலரும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு இருக்கும் சிக்கல் அவர்களின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு கட்சித் தலைமையிடம் இருந்து இன்னும் சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கவில்லை என்பதுதான்.

மணிவண்ணன் கடந்த ஒரு வருட காலத்தில் செய்திருக்கக்கூடிய சில செயற்றிட்டங்களால் மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் உயர்ந்திருக்கிறது என்று கருதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை - இந்த விடயத்தில் தலைவர் மாவை மற்றும் கட்சியின் மாற்றுக் குழுதத் தலைவர் சுமந்திரன் இருவருமே ஒத்த கருதத்தோடு இருக்கிறார்கள் என்றும் கேள்வி - இந்த நேரத்தில் மணிவண்ணின் ஆட்சியைக் கலைப்பது கூட்டமைப்பின் மீது மக்கள் மேலும் கோபம் கொள்வதற்கு வழியேற்படுத்தும் என்று கருதுவதாகத் தெரிகிறது. இதனை உணர்ந்திருக்கும் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். கட்சித் தலைமையின் எண்ணப்படி செய்வதா அல்லது முன்னால் முதல்வர் ஆர்னோல்ட்டும் உறுப்பினர் லோகதயாளனும் முன்னெடுக்கும் முயற்சிக்கு கட்சி உறுப்பினர்கள் என்கிற ரீதியில் ஆதரவு தெரிவிப்பதா என்பதில் குழம்பிப் போயுள்ளார்கள்.

எந்தக் காரணத்திற்காகவும் சபை கலைக்கப்படுவதையும் அது நியமன ஆணையாளரின் கைகளிலோ அல்லது தற்போதைய ஆணையாளரின் கைகளிலேயோ சென்று சேர்வதை ஈபிடிபி, சுந்திரக் கட்சியைத் தவிர்ந்த வேறு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. அப்படி நடந்தால் அது கொழும்பு அரசிடம் அல்லது மொட்டின் பங்காளிக் கட்சிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கு ஒப்பானதாகிவிடும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

ஆனால் இந்த ஒரு விடயம் மட்டுமே மணியின் தலை தப்புவதற்குப் போதுமானதல்ல என்கிறார்கள் கணிசமான உறுப்பினர்கள். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தான் சர்வாதிகாரமாக ஏனைய கட்சிகளை ஏறெடுத்தும் பார்க்காமல் தான் மணிவண்ணன் நடந்து கொண்டார் என்பது உண்மை, ஆட்சி தன்னிடம் இருக்கிறது என்பதால் மாற்றுக் கட்சிக்காரர்கள் எவரும் தேவை இல்லை என்று எடுத்தெறிந்து நடந்து கொண்ட "மணி அணி" பாதீடு நெருங்கும் நேரத்தில் மட்டும் மற்றவர்களுக்கு நேசக் கரம் நீட்டுவதில் எந்தப் பயனும் இல்லை என்கிறார்கள் அவர்கள்.



■ ஸ்ரீதர்.எஸ் ■

# எரிந்து தீர்ந்து விடாதீர்கள்!

இங்கிலாந்தில் பணிபுரிந்தபோது எங்கள் குழுவில் டிம் என்று ஒருவர் இருந்தார். நன்றாக வேலை செய்துகொண்டிருந்தவர் திடீரென்று சொதப்பத் தொடங்கினார். செயற்கைப் புத்திக்கூர்மை வடிவமைப்பாளராக இருந்த அவரிடம் இருந்து, வடிவமைப்புகள் அரைகுறைத் தரத்துடன் வரத் தொடங்கின. அது பற்றி ஏதாவது கருத்துச் சொன்னால் அதை வைத்துக் கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகிவிடுவார். "என்னால் இவ்வளவுதான் முடியும்" என்று சிடுசிடுப்பார். இன்னும் கடுமையாக அழுத்திக் கேட்டால், கோபக் கணையுடன் எதிர்மறைக் கருத்துக்கள் பாய்ந்து வரும். ஒரு கட்டத்தில் இந்த ஆளை வேலையை விட்டுத் தூக்கிவிட வேண்டியதுதான் என்கிற முடிவுக்கே வந்துவிட்டேன். டிம்மைப் பற்றி என் முகாமையாளரிடம் சொன்னேன். முழுவதையும் நிதானமாகக் கேட்ட அவர், "டிம் ஒருவேளை 'பேர்ன் அவுட்' ஆகி இருக்கலாம்" என்றார்.

### அது என்ன 'பேர்ன் அவுட்'?

தொடர்ந்து இடைவெளியின்றி எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தி, விரைவிலேயே எரிந்து வடிந்துபோகும். அதேபோல மனிதர்களும் இடைவெளியின்றி தொடர்ந்து வேலை செய்துகொண்டேயிருந்தால், ஒரு கட்டத்தில் உளவியல் ரீதியாக, 'எரிந்து போன' நிலைக்குப் போய்விடுவார்கள். இதனை ஆங்கிலத்தில் 'பர்ன் அவுட்' (BURN OUT) என்று சொல்கிறார்கள்.

இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து இடைவெளியின்றி வேலை செய்துகொண்டேயிருந்த டிம் எரிந்துபோய்க் கிடந்தார். அதைப் புரிந்துகொண்டு நிறுவனத்தின் மனித வளத் துறை மேலாளரை அவருடன் பேச வைத்து, ஒரு மாதம் விடுப்பு கொடுத்து அனுப்பினோம். கூடவே ஓர் உளவியல் நிபுணரையும் கலந்தாலோசிக்கச் சொன்னோம்.

ஒரு மாத விடுமுறை, ஒன்றரை மாதமாக அதிகரித்தது. விடுமுறை முடிந்து திரும்பிய டிம், 'பழைய பன்னீர்செல்வம்' ஆக மாறி வந்தார். முழு உற்சாகத்துடன், தான் முன்னர் செய்துவந்த அதே உயர்தர படைப்புத் திறத்தில் தன் வடிவமைப்பு வேலைகளைச் செய்யலானார்.

### எல்லோருக்கும் இடைவேளை

உடல் உழைப்பு செய்பவர்களுக்கு மட்டும்தான் இடைவேளை தேவைப்படும் என்று நம்மில் பலர் நம்புகிறோம். அறிவு-சார் உழைப்பைப் போடுபவர்களுக்கு என்ன ஓய்வு வேண்டிக்கிடக்கிறது? சுழல் நாற்காலியில் அமர்ந்துதானே வேலை செய்கிறார்கள் என்றும் தோன்றலாம். ஆனால் அவர்களும் பாதிப்படைகிறார்கள் - எரிந்துபோகிறார்கள்.

நிறையப் பேருக்கு, நாம் உளவியல் ரீதியாக எரிந்துபோயிருக்கிறோம் என்பதுகூடத் தெரிவதில்லை. உடலில் காயம் வந்தால் கண்டுபிடித்து மருந்து போடலாம். உள்ளத்தில் காயம் வந்தால் என்ன செய்வது? "சே, இதெல்லாம் ஒரு விசயமா?" என்று நீங்கள் கேட்கலாம். இது அவ்வளவு எளிய பிரச்சினை அல்ல. சிகரெட், மது போல அதீத உழைப்பும் உடல் நலத்துக்குத் தீங்கானது. உயிருக்கே ஆபத்து விளைவிப்பது.

மதுவுக்கு அடிமையாவதற்கு 'ஆல்கஹாலிஸம்' (ALCOHOLISM) என்பதுபோல வேலைக்கு அடிமையாவதற்கு 'வொர்க்கஹாலிஸம்' (WORKAHOLISM) என்று சொல்கிறார்கள். இது முததன் முதலில் ஜப்பானில்தான் கண்டறியப்பட்டது.

### வேலை அடிமைக் கொடுமை

உலகிலே கடுமையான உழைப்புக்குப் பெயர் பெற்றவர்கள் ஜப்பானியர்கள். 1990களில் அங்கே, பல ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போதே அலுவலக இருக்கையிலிருந்து விழுந்து இறந்துபோயிருக்கிறார்கள். இதனை ஜப்பானிய மொழியில், 'கரோஷி' என்று அழைக்கிறார்கள். 'அதீத வேலை காரணமாக இறப்பது' என்று அர்த்தம்.

இப்படி கரோஷியில் இறப்பதை சில காலம் பெருமையாகக் கருதிக்கொண்டிருந்தார்கள்.

**உடலில் காயம் வந்தால் கண்டுபிடித்து மருந்து போடலாம். உள்ளத்தில் காயம் வந்தால் என்ன செய்வது? "சே, இதெல்லாம் ஒரு விசயமா?" என்று நீங்கள் கேட்கலாம். இது அவ்வளவு எளிய பிரச்சினை அல்ல. சிகரெட், மது போல அதீத உழைப்பும் உடல் நலத்துக்குத் தீங்கானது. உயிருக்கே ஆபத்து விளைவிப்பது.**

அதாவது எல்லையில் படை வீரர்கள் மரிப்பது தியாகமாக, பெருமையாக கொண்டாடப்படுகிறது அல்லவா? அதுபோல இதையும் ஒரு விருது கிடைத்ததுபோலத்தான் அணுகினார்கள். பின்னர்தான், இது ஒன்றும் அவ்வளவு பெருமைக்குரியது அல்ல, ஒரு ஊழியனை 'உசுப்பேத்திவிட்டு கொலை செய்கிறோம்' என்ற தெளிவு நிறுவனங்களுக்கு வந்தது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வின்படி, அதீத அலுவலக உழைப்பு காரணமாக ஆண்டுக்கு சுமார் 7.5 லட்சம் பேர் உலகெங்கும் இறக்கிறார்கள். இந்த மாதிரியான புள்ளி விவரங்களில் ஒன்றாக ஆகிவிட நம் யாருக்குமே விருப்பம் இருக்காதுதானே? அப்படியானால் இந்த 'எரிந்து போவதை' எப்படித் தடுப்பது? அதற்கு முன்பு நாம் எரிந்துகொண்டிருக்கிறோம் என்பதை எப்படிக் கண்டறிவது?

அதீத வேலையில் பாதிப்புற்று இருப்பவர், ஒருவித தோல்வி மனப்பான்மையில் உழலுவார். தனக்கு இருக்கும் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் இல்லை என்று நம்பிக்கொண்டிருப்பார். எதற்கும் ஊக்கமின்றி ஏதோ இயந்திரம்போல வாழ்வைக் கழித்துக்கொண்டிருப்பார். எதிர்மறைச் சிந்தனைகள் அவரை ஆக்கிரமித்து இருக்கும். பிறந்து இத்தனை ஆண்டுகள் வாழ்ந்து என்ன சாதித்தோம் என்பதான விரக்தி மனப்பான்மை அவரைக் கவ்விக் கிடக்கும். அப்படி ஒரு நிலை உங்களுக்கு இருந்தால் என்ன செய்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாது குறை சொல்வதே பெண்ணின் அடையாளமா?

■ அராத்து ■

ஆண் - பெண் உறவுச் சிக்கலைப் பற்றி பேசுகையில் இந்தப் புத்தகத்தைத் தவிர்க்க முடியாது: 'மென் ஆர் ஃப்ரம் மார்ஸ், விமன் ஆர் ஃப்ரம் வீனஸ்'. உலக அளவில் பிரபலமான புத்தகம் இது. தமிழிலும் வெளியாகியிருக்கிறது, 'ஆண்களின் பூர்வீகம் செவ்வாய், பெண்களின் பூர்வீகம் சுக்கிரன்!' - மஞ்சுள் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறார்கள்.

உண்மையிலேயே ஆண் - பெண் அடிப்படை வேறுபாடுகளை, அவர்களின் சிந்தனா முறைகளை, எளிமையாக விளக்கும் புத்தகம். சரி, இதை யாரடா எழுதியிருக்கிறார் என்று பார்த்தால் அவரும் ஓர் ஆண்தான். ஜான் கிரே!

புத்தகத்தில் ஜான் கிரே நடுநிலைமையாக இருவரைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இருவருக்குள்ளும் கணக்கிலடங்கா வித்தியாசங்கள் இருக்கின்றன. எப்படி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு சரிசெய்து வாழ்வது? இந்த முயற்சிகளி



லும் எப்போதும் ஆண்தான் முன் நிற்கிறான் என்பதற்கு இந்தப் புத்தகம் ஒரு சின்ன உதாரணம்.

பெண்களும் இதைப் போன்ற புத்தகங்கள் எழுதியுள்ளனர். ஆனால், பெண்கள் எழுதி நான் படித்த புத்தகங்கள், கட்டுரைகள் வரையில், அவர்கள் தாங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், தங்களுடைய முன்னுரிமைகள், தங்களுக்கு விருப்பமானவை என முழுக்க முழுக்கப் பெண்கள் உலகை முன்வைத்து மட்டும் எழுதியிருக்கிறார்களே தவிர ஆண்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை.

"நான் இப்டிதான், இதைப் படித்துப் புரிந்துகொண்டு எனக்கு ஏற்ற மாதிரி மாறிக்கொள்!" என்பதுதான் பெண்கள் எழுதும் பெரும்பாலான புத்தகங்களின் அடிநாதம்!

**கணவனை ஏன் குறை கூறுகிறார்கள்?**

ஓர் ஆண் எவ்வளவுதான் கேடு கெட்டவனாக இருந்தாலும், தன் நண்பர்கள் வட்டத்திலும் உறவினர் வட்டத்திலும் மனைவியை அசிங்கமாகப் பேச மாட்டான். மனைவி எவ்வளவு கேடு கெட்டவளாக இருந்தாலும், கொடூரமானவளாக இருந்தாலுமே இதுதான் நிலைமை. இன்னும் கேட்டால், ஆண் நண்பர்கள் குழு கும்மாளத்தில் மனைவி ஒரு பேசுபொருளே இல்லை அல்லது அது சட்டென்று கடக்கும் ஒரு விடயம்.

பெண்கள் அப்படியா? உறவினர்கள் முன்னிலையிலும், நண்பர்கள் வட்டாரத்திலும் கணவன் கதி சிரிப்பாய் சிரித்தபடி இருக்கவேண்டும். கணவனைப் பற்றி விமர்சனம் மட்டுமல்ல, அவனைப் பற்றிய சின்னச் சின்ன விடயங்களைக்கூட பெண்கள் பரப்பிவிடுவார்கள். குறிப்பாக, மனைவியின் குடும்பத்தார் மத்தியில்தான் அவனுடைய அவமானங்கள் அதிகம் அரங்கேறும். உலகக் கண்களுக்குக் கம்பீரமானவனாக இருக்கும் அந்தக் கணவன், அவனுடைய மனைவி சம்மந்தப்பட்டவர்களுக்கு மட்டும் கோமாளியாகக் காட்சியளிப்பான்.

ஆண்கள் எந்த விடயத்திற்கும் மனைவியை இழுப்பதே கிடையாது. ஆனால், சம்மந்தம் இல்லாத விடயத்துக்குக்கூட மனைவிமார்களுக்கு கணவனை இழுக்கவில்லை என்றால் தூக்கம் வராது.

நான் இரவில் வெகுநேரம் விழித்து, அதிகாலையில் படுத்து, நண்பகல் எழுந்துகொள்ளும் ஆசாமி. இரவில் என்ன செய்வேன்? படிப்பேன், எழுதுவேன், சிலதைக் கற்றுக்கொள்வேன்... இன்னும் என்னமோ செய்துவிட்டுப்போகிறேன். இதெல்லாம் என் தனிப்பட்ட விடயங்கள் அல்லவா?

எனக்குப் பத்து மணிகூட அதிகாலைதான். அரைத் தூக்கத்தில் இருப்பேன். என் மனைவிக்கு ஒரு அலைபேசி அழைப்பு வருகிறது. ஸ்பீக்கர் போனில் அவள் பேசுவது எனக்கு அரைகுறையாக காதில் விழுகிறது.

"மகளுக்கு எப்ப பள்ளிக்கூடம் திறக்கிறார்களாம்?"

"அதுவா... இவர் இன்னும் எழும்பவேயில்லை, 12 மணி ஆவும் எழும்ப.

பெண்கள் அப்படியா? உறவினர்கள் முன்னிலையிலும், நண்பர்கள் வட்டாரத்திலும் கணவன் கதி சிரிப்பாய் சிரித்தபடி இருக்கவேண்டும். கணவனைப் பற்றி விமர்சனம் மட்டுமல்ல, அவனைப் பற்றிய சின்னச் சின்ன விடயங்களைக்கூட பெண் கள் பரப்பிவிடுவார்கள்.

இரவு வெளியில எங்கயோ சாப்பிட்டிட்டு வந்திட்டாராம். பிள்ளையள் எப்பவும் ரிவியும் போனுமாவே இருக்குதுகள். அதுகளக் கேள்வி கேட்க ஆளில்லை இஞ்ச. இவர் அதெல்லாம் ஒண்டும் கேக்கவே மாட்டார். பள்ளிக்கூடம் எப்ப திறப்பாங்களோ தெரியாது பாப்பம்."

தூக்கத்திலிருந்தபடியே முணுமுணுக்கிறேன்.

"யார் அது? என்னா கேக்கறாங்க? நீ என்ன சொல்லிற?"

திடீரென்று எழுந்து எகிறிவிட்டு மீண்டும் தூக்கத்துக்குள் ஆழ முயற்சித்தேன். மீண்டும் ஒரு அழைப்பு.

"நான் எழுப்பினா எழும்பமாட்டார். ஆனா நான் போன் பேசினா பிடிக்காது. நித்திரையிலகூட எழும்பித் திட்டுவார். ஒரு போன்கூட என்னால வீட்ல நிம்மதியா பேச முடியாது!"

இதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள்? என்னை ஒரு சைக்கோ, கொடுமைக்காரன் என்று நினைப்பார்கள். இதனால்தான் பல மாமியார் வீடுகளில், மனைவி சார்ந்த உறவுகள் நடுவில் மாப்பிள்ளை என்பவன் கொடூர வில்லனாகவும், கோமாளியாகவும் நிலைபெற்றிருக்கிறான்.

விரைவில் தூங்கி விரைவில் எழுவதை என் மனைவியிடம் நான் குற்றமாகக் காணவில்லை. ஆனால், தாமதமாகத் தூங்கி தாமதமாக எழுவதை அவர் ஏன் குற்றமாகக் காண்கிறார் என்று எனக்குப் புரிபடுவதே இல்லை.

ஓர் உறவுக்குள் தீவிரமாக இருக்கையில் நிறைய 'ஸ்வீட் நத்திங்க்ஸ்' இருக்கும். சில பைத்தியக்காரத்தனங்களும் இருக்கும். தவிர்க்க முடியாத பழக்கவழக்கங்கள் இருக்கும். இவை எல்லாம் அந்த இருவருக்குள் மட்டும் இருக்கவேண்டியவை. இதைப் போன்றவைகள் சம்பந்தப்பட்ட இருவரைத் தாண்டி வெளியே போகும்போது அவை நகைப்புக்குரியவையாக மாறுகின்றன.

காதலும் கொஞ்சலும் உச்சத்தில் இருக்கையில் இருவரும் அந்தரங்கமாக இருக்கும் தருணங்களில், பெண்கள் தூண்டிவிட ஆண்கள் இதைப் போன்ற பித்துக்குளியான பலவற்றைச் செய்வார்கள். அப்போது ரசித்துவிட்டு, தானும் அதில் ஒரு பங்காற்றிவிட்டு, பிறகு தன் சுற்றத்தாரிடம் இவற்றைச் சொல்லி அசிங்கப்படுத்துவதைப் பெண்கள்

(15ம் பக்கம் பார்க்க)

## எரிந்து ...

**பேசுங்கள்:**

உங்கள் நண்பர்களுடன், காதலன், காதலி, கணவன், மனைவி யாருடனாவது பேசுங்கள். உங்கள் பிரச்சினைகளை, அலுவலகத்தில் எதிர்கொள்ளும் சவால்களை விவாதியுங்கள். இவர்கள் உங்களுக்கு அறிவுரை தராமல், உங்களை மதிப்பிடாமல் அணுகுபவர்களாக இருக்கவேண்டும். அப்படி யாரும் இல்லையேல் நல்ல உளவியல் ஆலோசகரை நாடலாம்.

**தனித்திருங்கள், விழித்திருங்கள்:**

தினமும் கொஞ்சம் தனியாக இருங்கள். அதற்காக எல்லோரையும் விட்டுவிட்டு காட்டுக்குப் போகவேண்டாம். உங்கள் சிந்தனைகளைச் சேகரிக்க, அவற்றை அலச அல்லது எதுவும் யோசிக்காமல் சும்மா இருக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

**வேலை-வாழ்வு எல்லை வகுத்தல்:**

வேலை அலுவலகத்தோடு நின்றுவிட வேண்டும். வாழ்வின் நேரத்துக்குள் எட்டிப் பார்க்கக் கூடாது. அப்படி ஓர் எல்லை வகுத்துச் செயல்படுங்கள். தேவைப்பட்டால் ஓரிரு வாரங்கள் விடுமுறை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உளவியல் ஆலோசகரை ஆலோசிப்பதானால், அவரேகூட உங்களுக்கு விடுமுறைக்கான மருத்துவச் சான்றிதழை வழங்க முடியும்.

**உங்களை மன்னியுங்கள்:**

பல முறை நாம் நம்மிடமே கடுமையாக நடந்துகொள்வதை நாம் உணருவதே இல்லை. நேரத்துக்கு ஒரு இடத்துக்குப் போவதில்லை, ஒரு வேலையை திறன்பட முடிப்பதில்லை, அதைச் செய்வதில்லை, இதைச் செய்வதில்லை என்று நம்மை நாமே தொடர்ந்து கடிந்துகொண்டேயிருப்போம். இதுவேகூட பல நேரம் நம்மை உளவியல் ரீதியாகப் பாதிக்கிறது. இதை நிறுத்தினாலே வாழ்வில் பாதிப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

நாம் வெறும் மனிதர்கள்தான். பல்வேறு குறைபாடுகளும், பிரச்சினைகளும் கொண்டவர்கள். தவறுகள் வாழ்வில் வழக்கமானவைதான் என்று அணுகுங்கள். ஏதாவது சொதப்பினால் 'சரி விடு! பார்க்கலாம்' என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொண்டு கடந்து போக முயலுங்கள்.

**உங்கள் தேவைகளையும் கவனியுங்கள்:**

பல நேரம் நாம் நம்மை கவனித்துக்கொள்வதே இல்லை என்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். அதுதான் உண்மை. குறிப்பாக குடும்ப சூழலில் புழங்குபவர்கள், பிறரின் தேவைகளை முன் நிறுத்தியே வாழப் பழகிப் போனவர்களாக இருக்கிறார்கள். வேலையில் முகாமையாளர் சொல்வதுதான் சரி, வீட்டில் அம்மா, அப்பா, மனைவி அல்லது கணவன் தேவைகள்தான் முக்கியம் என்று மாறி மாறி வாழ்ந்ததில், உள்ளே அழுந்திப் போயிருக்கும் சுயம் திடீரென ஒரு நாள் பொங்கி எழும். பல நேரம் இதுவும் எரிந்து போதலுக்கு காரணமாக இருக்கிறது. நிறுத்தி நிதானமாக உங்கள் தேவைகளையும் கொஞ்சம் கவனியுங்கள். அதற்கும் நேரமும் நிதியும் ஒதுக்குங்கள்.

கரோஷி என்பது கடந்துபோகக்கூடிய சிறிய விடயம் இல்லை உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் என்று பார்த்தோம். உயிர் போகிறதோ இல்லையோ, ஆனால் உளவியல் ரீதியான எரிதல் மூலம் வாழ்வின் தரம் கண்டிப்பாக பாதிக்கப்படுகிறது. நாம் எரிந்து கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் வீடு, அலுவலகம் என்று வாழ்வைத் தொடரும்போது நாமும் நம் சுற்றமும் பாதிப்புறுகிறோம். அதைக் கொஞ்சம் கவனமாகக் கண்டறிந்து, அதற்குத் தீர்வுகள் கண்டு சரிசெய்தால் நம் வாழ்வின் தரம் உயரும். நமது குடும்பத்தினரும் மகிழ்ச்சியுறுவார்கள். வேலையின் தரம் கூடுவதால், அலுவலகத்திலும் நமக்கு வெற்றிகள் சேரும்.

எரிதலை நிறுத்துவோம். மெழுகுவர்த்தியை அவ்வப்போது அணைத்து வைத்துப் பாதுகாப்போம்.

( டிம் அவர் உண்மைப் பெயர் அல்ல.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நோய்ச் சொர்க்கம்

■ தூயன் ■



(கடந்த வார தொடர்ச்சி...)

அடுத்த நாள் அதைச் சரிசெய்ய வீட் டுக்காரர் வேறொருவரை அழைக்க வந்தார். முடிச்சு அவிழ்கிறதா என்று தள்ளி நின்று கவனித்தேன்.

"சரியானதா?" இளைஞன் ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். 'எப்படிச் சரியாகும்? ஆகாது. சிக்கல் எங்கு எப்படி வரும் என்று பொதுவான கணிப்பு உண்டு. அதன்படிதான் வேலைக்காரன் அதைப் பார்ப்பான். ஆனால் இது வேற இல்லையா. அவ்வளவு சரியாகக் கண்டுபிடிக்க முடியாது. ஒவ்வொருத்தராக முயற்சிப்பார்கள். முடிச்சை விட்டுவிட்டு மற்ற எல்லா வழிகளையும் அவிழ்ப்பார்கள். சில சமயம் நானும் போயிருக்கிறேன். ஒரு கட்டத்தில் யாருக்கும் திராணியில்லை என்றான பிறகு நானே சரி செய்துவிடுவேன். சரி செய்வதென்றால் கண்ணுக்குத் தெரியாதவாறு அதுவே நிகழ்ந்தது மாதிரி.' சற்று நிறுத்திவிட்டு "நீ ஒன்றும் பயந்திடாதே. இதெல்லாம் ஒரு விளையாட்டுதான்' என்று உதட்டைச் சுழித்தார். இளைஞன் பயந்துதான் போனான். சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். அவர் தேநீரைக் குடித்துவிட்டு காகிதத் தம்ளரை உருட்டி எறிந்தார். வெகுநேரமாக அண்ணாந்திருந்த தெருநாய் ஓடிச்சென்று முகர்ந்துவிட்டு மீண்டும் அண்ணாந்தது. அவர் தொடர்ந்தார். 'யாராவது தினப்படிக்குப் பணம் கொடுத்து சாப்பாடு போட்டாலும் வேலை செய்யாமல் இருக்க முடியவில்லை. அதனால் தூக்கமும் அறவே போயிடுச்சு. நானாக ஏதாவதொரு வேலையை முடிக்காலாம் என்றாலும் அதுவும் குறையாகவே இருக்கிறது. இதோ.' எதிரே இருந்த சுவரொட்டியைக் காட்டி 'தெரு முழுக்க இப்படி ஒட்டிருப்பதையெல்லாம் கிழித்து சுத்தம் செய்து பார்த்துவிட்டேன். மனதுக்குத் திருப்தியே இல்லை. இது மாதிரி நிறைய செய்து சலித்துவிட்டேன்.' இளைஞன் குறுக்கிட்டு 'இப்போ யாராவது உங்களுக்கு வேலை கொடுத்தால் போதும்.' ரகசியத்தைக் கண்டுபிடித்தது மாதிரி கேட்டான். அவர் அவன் தோளைத் தட்டி' அதேதான்' என்று இரண்டு முறை பலமாகத் தட்டி, 'அதுக்கு உன்னுடைய உதவி வேண்டும்' என்று அவனை ஏறிட்டார். 'நீ எனக்கு வேலை கொடுக்க வேண்டும்.' இளைஞன் நெற்றியைச் சுருக்கினான். 'புரியும்படி சொல்கிறேன். தினம் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துவிட்டுப்போ. நான் அதைப் பார்த்து வைக்கிறேன். மறுநாள் வேறொரு வேலை. அடுத்த நாள் இன்னொன்று. இப்படி தினம் புதுப்புது வேலையைச் செய்ய வைத்தால் போதும்.' அவன் ஏதோ கூறத் தயங்கினான். 'உனக்குத் தெரிந்ததைக் கொடு அல்லது தெரியாதென்றாலும் பரவாயில்லை. நான் முயற்சிக்கிறேன். அப்படியாவது திருப்தி ஆகிறதா பார்க்கலாம்.' அவன் அரைமனதுடன் சம்மதித்தான். அவருக்கு மிகுந்த சந்தோஷம். பல முறை நன்றி கூறினார். 'ஆனால் இதில் சில விதிமுறைகள் வைத்துக்கொள்வோம். சுவாரஸ்யத்திற்காக இல்லை. அப்போதுதான் எனக்குமே வேலை செய்வது போலிருக்கும்.' அவன் விதிமுறைகளைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் இருந்தான்.

'ஒன்று, கிட்டத்தட்ட எல்லா வேலைகளையும் நான் செய்திருக்கிறேன். நீ என்ன யோசித்தாலும் நிச்சயம் எனக்குப் புதிதாக இருக்காது. அதனால் எனக்குத் தெரிந்ததாக இருக்கலாம். தப்பில்லை. ஆனால் உனக்குத் தெரிந்ததாக இருக்கக் கூடாது. நீ கைக்காட்டுவதோடு சரி. முடித்த பிறகு நான்தான் அதை உனக்குச் சொல்வேன்.' இளைஞன் சம்மதித்தான். ஆனால் உடனே அப்படியொரு வேலையை அவனால் யோசிக்க முடியவில்லை. நான்கைந்து நாட்கள் அதைப் பற்றிய சிந்தனையைக்கூட அவனுக்குத் தராதவாறு வேறொரு விதிச்சுழலுக்குள் மாட்டிக்கொண்டிருந்தான். அதிலிருந்து தப்பிக்க நடுத்தரவயதுக்காரருக்கு வேலை கொடுக்க வேண்டிருந்தது.

இரண்டாவது வேலைக்குரிய சீட்டில் இருந்த பெயரைப் படித்ததும் வக்கீல் என்ற அடைமொழியுடன் அப்பெயரை அவரையறியாமல் உதடுகள் உச்சரித்தன. இறந்து இரண்டு வருடங்கள் ஆகியிருக்கும். மிகப் பெரிய ஊர்வலம் நடந்தது. சாலை முழுக்க செண்டிப்பூவும் உதிர்ந்த ரோஜாவும் மணக்க மணக்க இறைந்திருந்தன. அவரும் மலர்ந்த மலர்போலவே இருப்பார். சாயம் பூசிக் கருகருவெனத் தூக்கி வாரிய தலைமுடி. நன்றாக மழித்த முகம். தவளை மூக்கு. பொடி போட்டுச் சாயம் படிந்த நாசி வாசல். பெரிய உதடு. பேசிப்பேசியே தடித்துப் போயிருக்கலாம். கஞ்சி போட்ட கதர் வேட்டி கதர் சட்டை. கீழராஜ வீதியின் நான்காம் தெருவில் இருக்கும் மூலைக் கடையில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பார். தொடையில் கிடக்கும் பாதத்தைத் தடவிக்கொண்டே பேசுவதைக் கேட்பார். கேட்பாரா அல்லது கால் நகத்தை பிய்த்துப் போடுகிறாரா என்று சந்தேகப்பட வைக்கும். இரண்டு காபி ஆவி பறக்க அடுத்தடுத்துக் குடிப்பது வழக்கம். நேரம் கழித்துக் கிச்சடி வரவழைத்துச் சாப்பிடுவார். கிச்சடிக்குச் சொல்லிவிட்டால் அன்றைக்கே பிரச்சினையைப் பேசித் தீர்க்கிறாரென்று அர்த்தம். தொண்ணூறு சதவீதச் சில்லரை வழக்குகளை காபிக்கும் கிச்சடிக்கும் நடுவே முடித்துவிடுவார்.

இதுவரைதான் நடுவயதுக்காரருக்குத் தெரிந்திருந்தது. வக்கீல் மகா புத்திவான் அவர் வீட்டில் இருப்பவர்களும் அப்படித்தான் இருப்பார்கள். முதல் வேலைபோல இது சாத்தியப்படாது. இறந்தது ஊரே அறியும். தொலைந்தாரென்றால் சிரிப்பார்கள். பிறகு அதுவே விசித்திர வழக்காகும். பேசாமல் வேலையை மறுத்துவிடலாம். ஆனால் யாராவது ஒருத்தரை நம்ப வைத்தால் போதும் என்கிற வசதி நழுவ விடாமல் பிடித்திருந்தது. அவசரப்பட்டு வக்கீல் வீட்டிற்குச் செல்லாமல் காபி கடைக்கும் வீடு இருக்கும் தெருக்கோடிக்கும் அன்றைக்குப் பூராவும் நடந்துகொண்டிருந்தார். நூலாம்படை தொங்கிய பழைய ஓட்டுத்திண்ணை வீடு. உள்ளே சாமான்கள் கிடந்தன, குடித்தனத்துக்கான கசங்கலே இல்லை. அருகில் விசாரித்ததில் வக்கீலின் பேரன் இருக்கும் விலாசத்தைக் காட்டினார்கள்.

விசித்திரமான இரண்டாவது வேலை எதிர்பாராத விதமாக கத்தி மேல் நிற்பதுபோல முடிந்ததை இளைஞனிடம் நடுநிசித் தேநீரில் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொண்டார். 'வக்கீலுக்கு இருந்த ஒரே மகன் சிறுவயதிலேயே இறந்துவிட்டான். துணைக்குப் பேரன் மட்டும்தான். பாட்டி இறந்த பிறகு உறவினர்கள் யாரும் உரிமை கோரக் கூடாதென்று வீட்டைப் பூட்டியிருக்கலாம் என்று நினைத்தேன். அது சரியாகத்தான் இருந்தது. பூர்வீக வீட்டிற்குப் போனபோது சொத்து விவகாரம் முடிவுக்கு வராமல் இழுத்துக்கொண்டிருந்த சமயம். அறக்கட்டளையின் பெயர் பேச்சில் அடிபட்டது. தாத்தாவைப் போன்றே பேரன் தொடை மேல் போட்ட காலைத் தடவிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் சென்று தனியாகப் பேச வேண்டும் என்றேன். சட்டையே செய்யாமல் என்னைப் பார்த்தான். காதில் 'உங்க தாத்தா தொலைந்து போவதற்கு முன்னாடி சொத்து உங்கக் கிட்ட இருப்பதைத்தான் அவரும் ஆசைப்பட்டார்'என்று சொல்லி முடிக்கவில்லை சரேலென்று காலை வீசி எழுந்தவன் தோளைப் பற்றி உள்ளே கூட்டிப் போனான். எதுவும் பேசாமல் மேலும் கீழும் திக்பிரமையுடன் பார்த்தான். 'தாத்தாவைத் தேடி அலைய வேண்டாம் காசியிலதான் இருக்கிறார். நான் அவரோட பழைய நண்பர். சிஷ்யர் மாதிரி. காபி கடையில் பார்த்ததில்லையா?' அவன் எதுவும் பேசவில்லை. என் முகத்தை அதிசயமாக ஒருகணம் ஏறிட்டான். 'நம்ப முடியலையா? இன்றைக்குச் சரியான நேரத்துக்கு என்னைய இங்க அவர்தான் போகச் சொன்னார்.' பேரன் சிரிப்பதிலேயே அவன் நம்பிவிட்டான் என்று முடிவுசெய்துவிட்டேன். அலுமாரியிலிருந்து காகிதக் கட்டை நீட்டி 'ஆமாம் நானும் அதைத்தான் இவங்ககிட்ட சொல்லிட்டுருக்கிறேன். இதை அவர்களிடம் கொடுத்து நீங்கள் சொன்னதை அப்படியே சொல்லுங்கள்' என்றான் கைகளுக்குள் திணித்து.

இளைஞன் அதிர்ச்சியில் திகைத்துப் போய்விட்டான். 'சரி அப்புறம் என்ன?' முதன்முறையாகச் சிரித்துக்கொண்டு கேட்டான். 'இன்னும் இருக்கிறது' என்று தேநீரை உறிஞ்சியபடி 'பொறு' எனக் கையைக் காட்டினார். 'அவன் கொடுத்த காகிதக் கட்டை வெளியே இருந்தவர்களிடம் கொடுத்து பெரியவர் கொடுக்கச் சொன்னார் என்றதும் அவர்கள் முகத்தில் ஈ ஆடவில்லை. வாங்கிப் படித்தார்கள். அதில் என்ன இருந்ததோ படித்த அத்தனை முகங்களும் கோபத்தில் திரண்டுவிட்டன. வக்கீல் இருக்கிறாரென்று நான் சொன்னது அவர்கள் யார் செவியிலும் விழுந்ததாகத் தெரியவில்லை. நின்றுகொண்டிருந்த சின்ன வக்கீல் திடுதிப்பென்று பேரனை அடிக்கப் பாய்ந்தார். 'துரோகி நல்லா இருக்க மாட்ட." ஆளாளுக்கு ஏச ஆரம்பித்தார்கள். பிறகு இழவு வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் கிளம்புவது மாதிரி ஒவ்வொருவராகக் கலைந்தார்கள்'

'பேரனிடம் மறுபடியும் பேசினீங்களா?'

'ஆமாம். தாத்தாவை எங்கு பார்த்தீர்கள்? எப்படி இருக்கிறார்?' என்று அவன் விசாரிக்கும்போது 'ஒரு வயதானவர் சம்பந்தமில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆஜரானார்.' இளைஞன் அவசரமாக 'யார்?' என்றான். 'நான் பார்க்கவில்லை சொத்து விவகாரத்துக்கு வந்திருக்கிறவராக இருக்கலாம். ஆனால் அதிசயம் என்னவென்றால் வயதானவரும் நான் சொன்னதையே அழுத்தமாகப் பேரனிடம் சொல்லிட்டு விறுவிறுவெனப் படியிறங்கிப் போய்விட்டார். பேரன் மந்திரித்தது மாதிரி என்னைப் பார்த்தான். மிச்சமிருந்த ஒருத்தர் எங்களையே வெறித்துக்கொண்டிருந்தார். எனக்கே அங்கே நடப்பது ஒன்றும் பிடிபடவில்லை. தலை சுத்தியது.' நடுவயதுக்காரர் வயிற்றைப் பிடித்தபடி பலமாகக் கீழே விழுந்து சிரிக்க ஆரம்பித்தார். பிறகு கையைப் பின்னால் ஊன்றி வானத்தை அண்ணாந்தவாறு சிரித்தார்.

அந்தியில் ஆடையகத்திற்குச் செல்வதும் காலையில் வீடு திரும்புவதும் இளைஞன் சமைத்துப் போடும் ருசியான உணவுடன் தூங்கிப் போவதுமாக முதியவரின் அன்றாடம் மாறிப் போனது. இரண்டு நாளிலேயே அவர் இதுவரை சாப்பிட்டு வந்த உணவுகளுக்குப் புதிய ருசி குணங்களை அவன் காட்டியிருந்தான். புதிய நாவைத் தைத்துவிட்டது போல. இந்த இடைவெளியில் அவன் வந்தபோது கூறிய விலாச அடையாளங்கள் நினைவில் வைக்காததால் மறுபடியும் அவனிடம் கேட்டுப் பார்த்தார். அதற்குள் அது அவனுக்கு மறந்துவிட்டது. அதே சமயம் தானும் நினைவுதொலைதலுக்கு ஆட்பட்டுக்கொண்டிருப்பதை அவனிடம் சொல்வதா வேண்டாமா என்கிற குழப்பம் வேறு (அதுவும் மருத்துவரிடம் காட்டிய சீட்டை வைத்தும் ஆடையகத்தில் மற்ற சிப்பந்திகள் நடந்துகொள்ளும் போதும் தான் தனக்கு அவ்வியாதி இருப்பது பலமுறை அவருக்கு நினைவூட்டப்படுகிறது). சரி ஒரு வேளை உண்மையைக் கூறிவிடுவதால் என்ன ஆகும்? ஒன்று, இவரும் என்னைப் போன்றுதான் என்று அவன் சமாதானம் அடையக்கூடும். இரண்டாவது, இரண்டு பேரும் ஒன்றே எனும்போது எதற்கு இங்கு தங்க வேண்டுமென்று வெளியேறி விடலாம். இளம் வயதென்பதால் இரண்டாவதைத் தேர்ந்தெடுக்கவே வாய்ப்பு அதிகம். ஆதலால் முதியவர் அவனிடம் தனக்குக் கூர்மையான ஞாபகம் உண்டு என்பதுபோல காட்டத் துவங்கினார். அதற்காக தினம் ஏதாவது பொய்க் கதைகளைத் தனது வாழ்வனுபவமாக விவரிக்க வேண்டுமென நினைத்துக்கொண்டே இரவுப் பணி முடித்துவருவார். கால் இடறியதுபோல எங்கோ அவ்வெண்ணம் நழுவிவிடும்.

அப்படித்தான் அன்றைக்குக் காரமும் புளிப்புமாக வைத்திருந்த மீன் குழம்பைக் கை கழுவும் முன் தட்டில் ஊற்றிக் குடித்தபோது 'உங்களுக்குப் பிடித்த பெயர் ஏதாவது இருந்தால் எனக்கு வைத்துவிடுங்கள்.' அவன் அப்படிக் கேட்டதும் முதியவர் சிரித்துவிட்டார். உறப்பு தலைக்கேறியது. ஆனால் அப்படிச் சிரிப்பதே அலாதியாக இருந்தது. அவனும் என்னவென்று விளங்காமல் உதடு விரித்தான். மூக்கில் இறங்கிய காரத்தை உறிஞ்சிவிட்டு 'நகராட்சிக் கூடத்தில் பன்றிகளுக்கு இது மாதிரி பெயர் வைப்பார்கள்'' என்றார் சம்பந்தமில்லாமல். அவன் முகம் கோணினான். 'விற்பனைக்கு ஆகாத பன்றிகளை நன்றாகக் கொழுக்கட்டும் என்று விடுவதும் உண்டு. அப்படி வருடக்கணக்காகக் கிடப்பவைக்கு ஊழியர்கள் பெயர் வைத்துவிடுவார்கள். பிடித்த பெயர், பிடிக்காத பெயர். யாருக்கு என்ன தோன்றுகிறதோ அப்படி. நான் சீனப் பெயரை வைத்தேன்.'

'நீங்களா?' சந்தேகமாகக் கேட்டான்.

'ஆமாம் எல்லாம் வெறுப்புலதான்.' நரைத்த புருவத்தை உயர்த்தி அசடுபோல முதியவர் சிரித்தார். 'சீனப் போருக்காகத்தானே அறுபத்தி ரெண்டில் நான் ராணுவத்துல சேரப் போனேன்.' கையைக் கழுவிவிட்டு வந்தவர் சட்டென நின்று பின்பு நடந்தார். அவன் பாத்திரங்களை அடுக்களையில் வைத்துவிட்டுக் கதைக் கேட்கும் ஆர்வத்தில் வந்தமர்ந்தான். முதியவர் சற்றுத் தடுமாற்றத்துடன் கட்டிலில் சாய்ந்தார். பிறகு சிரமத்துடன் கையை எடுத்து ஒரு முறை நன்றாக முகர்ந்தார். 'யாரையாவது சுட்டிருக்கிறீர்களா, துப்பாக்கி ரொம்ப கனமா இருக்குமா, எதிரிகிட்ட மாட்டிட்டா?' பதில் சொல்லாமல் 'நல்ல மணம்'' என்றார். 'மில்லில் அரைத்த மிளகாய்த்தூளில் மட்டும்தான் இப்படியொரு காரம் இருக்கும்.'அவன் சலித்துக்கொண்டான். முதியவர் சிரித்தார் 'ஆமா ரத்தமும் சதையுமாகக் குண்டடிபட்டு விழுந்து கிடப்பார்கள். சில சமயம் சிதறிக் கிடக்கிற உடல் உறுப்புகள் எல்லாம் ஒரே பெயரில் ஒன்று சேர்த்திடுவோம்.' பிறகு அரைத் தூக்கத்தில் பெரும் போர்க்கதையைக் கூறத் தொடங்கினார். உதடு முணுமுணுப்பின் மீது கண்களை வைத்தபடி அவன் அமர்ந்திருந்தான். அவருடன் ராணுவத்தில் இருந்த நண்பர்கள் இன்னும் இதே ஊரில் இருப்பதாகவும் அவர்களையெல்லாம் பார்த்துப் பல வருடங்கள் ஆனதாகவும் அங்கலாய்த்தார். கதை நண்பன் பக்கம் திரும்பிற்று. ராணுவத்திற்கு ஒப்பாத அவனது உடலமைப்பு, அங்க அசைவில் தோன்றும் நளினம், ஆத்திரத்தில் சில அடவுகள்கூட தெரிப்பதும் இப்போதுகூட பார்த்தால் தெரிந்துவிடும் என்று சொல்லிச் சிரித்தார். 'பக்கத்தில்தான் எங்கோ இருக்கிறான். விலாசமும் பெயரும் நன்றாக நினைவில் இருக்கிறது' என இளைஞன் பக்கம் திரும்பி ஒருமுறை உச்சரித்து அலமலந்துகொண்டார்.



**கொஞ்சநாள் காத்திருக்கலாம். நிலைமை மாறட்டும். உன்னைப் பற்றித் தெரியாதவரை அது நிம்மதிதான். தெரிந்துவிட்டால் பிறகு அது தொந்தரவாகிடும். இப்படி இருக்கிறது தான் நல்லது.'**

மதியம் எழுந்தபோது இளைஞன் வாசல் படியில் அமர்ந்திந்தான். அந்தக் காட்சிகூட எப்போதோ இதற்கு முன்பு நடந்த மாதிரி தோன்றிற்று அவருக்கு. மெதுவாகக் கழிப்பறைக்குச் சென்றுவிட்டு வரும்போது, துணி துவைத்து காயப் போடாமல் நாறியது. அவரே காயப்போட்டு விட்டு வந்தார். அடுப்பில் உலை கொதித்துப் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. சத்தம் போட்டார். அவன் ஓடிச் சென்று அமர்த்தினான். கோபமாக, 'அப்படி என்ன தான் யோசனை' என்று முறைத்தார். 'என்னைப் பற்றி ஏதும் விசாரித்திர்களா?' என்றான். அவர் பதில் சொல்லவில்லை. 'இப்படியே என்னை வைத்துக்கொள்ளலாம்னு நினைச்சிடாதீங்க.'' முதியவர் திடுக்கிட்டுத் திரும்பினார். பிறகு அவரே சமாதானமாகிவிட்டுச் சொன்னார், 'கொஞ்சநாள் காத்திருக்கலாம். நிலைமை மாறட்டும். உன்னைப் பற்றித் தெரியாதவரை அது நிம்மதிதான். தெரிந்துவிட்டால் பிறகு அது தொந்தரவாகிடும். இப்படி இருக்கிறது தான் நல்லது.'

அவனுக்கு முதியவர் சொல்வதைக் காதில் வாங்க இஷ்டமே இல்லை. 'வாழ்க்கை அர்த்தமில்லாமல் போய்விடாதா?'

'யார் அர்த்தப்படுத்துகிறார்? யாருக்காக நாம் அர்த்தப்படுத்திக்க வேண்டும்? நீ இங்க இருக்கிறதில ஒரு அர்த்தம் உருவாகியிருக்கிறதே அதையே ஏற்றுக்கொள்ளலாம் இல்லையா? இங்க இனி தொலைந்த யாராலையும் கண்டுபிடிக்க முடியாது. எல்லோருமே தொலைந்தவர்கள்தான். தினம் ஏதோவொன்று நம்மைக் கண்டுபிடித்து வைத்திருக்கிறது. செய்தாக வேண்டிய வேலைகள்தான் நம்மைக் கண்டுபிடித்துப் பத்திரமாக வைத்திருக்கிறது. உனக்கு இதை ஏத்துக்கிறதுல என்ன சிக்கல்?'

'உங்களால முடியலைனா சொல்லிடுங்க. என்னால் அப்படியெல்லாம் ஏத்துக்க முடியாது. காணாமல்போன ஆடு ஏதோவொரு மந்தையப் பார்த்துவிட்டுத் தன்னுடையதுதென்று சேர்ந்துகிறது மாதிரி இருக்கு நீங்க சொல்றது.'

முதியவர் அந்த வார்த்தையை எதிர்பார்க்கவில்லை. அதன் கூர்மை தெரியாமல் அவன் பிரயோகித்திருப்பதாக நினைத்தார். 'வெறும் பெயர் ஊர் தெரிந்தால் போதுமா? அப்படி என்ன அர்த்தத்தை அது கொடுத்திடும். நிறைய பேர் அதை ஒரு பொருட்டாக எடுத்துக்காம இருக்கிறதலாம் உண்டு. என்னையக் கேட்டா அது சுமைதான்.' இருமியபடியே எழுந்து போனார். முதியவர் அவரை மனதில் வைத்துத்தான் அப்படிக் கூறினார். ஆனால் அவனுக்கு நடுத்தரவயதுக்காரரை நினைவுபடுத்தியது. ஆமாம், அவரும் ஒருமுறைகூட அவருடைய பெயரைச் சொன்னதில்லை. அப்படியொன்று இருப்பதுபோலவும் தெரியவில்லை. யாரும் அவரைப் பெயர் சொல்லி அழைத்துப் பேசியதுமில்லை. அது என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டுமென்கிறத் தனம். அதைவிட வேலையைக் கண்டுபிடிப்பதுதான் அவருக்கு முக்கியம். முதியவரிடம் இளைஞன் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. தன்னுடைய தொலைந்த அடையாளம், நடுத்தரவயதுக்காரர் குறிப்பிட்டது மாதிரி வேலையில் சிக்கலைப் பின்னிவிட்டது போல மாட்டிக்கொண்டிருக்கிறது. முடிச்சை அவிழ்ப்பது, ஒன்று அதை முடிச்சிட்டவனாக இருக்கவேண்டும் அல்லது வேறு யாராவது.

பெரியவருக்காகக் காத்திருக்காமல் வீட்டைவிட்டு வெளியேறிவிடலாம் என்றுகூட முடிவெடுத்தான். காலையில் முதியவர் வேலையிலிருந்து திரும்புவதற்குள் வீட்டைவிட்டு வெளியேறி வெறிச்சோடிய கடைத்தெருவில் நடக்க ஆரம்பித்தான். ஒன்றிரண்டு ஆட்களைத் தவிர அதிகமான புழக்கம் இல்லை. அந்த ஒரு சிலரும் கண்களைக் கட்டிக்கொண்டு ஜாக்கிரதையுடன் நடப்பது மாதிரி திரிந்தார்கள். முகக்கவசத்துடன் அலையும் முகங்கள் அத்தனையும் அவனுக்கு ஒன்றுபோலவே இருந்தன. கண்களை மட்டும் கொண்ட உருவங்கள். பூட்டிய கடைத் திண்ணையிலும் வீட்டின் ஜன்னல் வழியாகவும் தெரிந்த முகக்கவசமில்லாத முகங்கள் அவனையே அவன் கண்ணாடியில் பார்ப்பது போலிருந்தன. இந்தச் சூழலில் நிச்சயமாக அவனால் ஒருவரைக்கூட நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. தொலைந்துபோனால் பிறகு நிலைமை இதைவிட மோசம் ஆகிவிடும். அதனால் இனி வயதானவரை நம்புவது மட்டுமே தனக்கிருக்கும் ஒரே நம்பிக்கை என்று வெளியேறும் முடிவையும் கைவிட்டுத் திரும்பிவிட்டான்.

ஆனாலும் அவனால் வீட்டிற்குள் அடைபட்டிருக்க முடியவில்லை. முதியவரின் கைத்தடி அறை மூலையில் கிடந்தது. கொஞ்ச நாளாக அவர் அதைப் பயன்படுத்துவதில்லை. வழி பிறழாமல் இருக்க அதுபோல ஒன்று அவசியம். முதியவரின் துணிப்பையைக் கொட்டித் தேடினான். வரைபடம் கண்ணில் பட்டது. இப்போது அவர் அதிகம் பயன்படுத்துவதில்லை. கடைத்தெரு வீதியின் வரைபடம். பதினாறு நேர்வரிசைக் கட்டங்களும் பதினாறு குறுக்குவரிசைக் கட்டங்களும் எந்த எந்த இடத்தில் வீதி குறுக்குவெட்டாகப் பிரிகிறதென்று பச்சை நிறத்தில் அடையாளமிட்டும் எந்தக் குறுக்குப் பாதைகள் மூலம் சீக்கிரமாக ஓரிடத்தை அடைய முடியும் என்பதற்கு சிவப்பு நிற அம்புக்குறிகளும் இடப்பட்டிருந்தன. முதலில் அதை எவ்வாறு பார்ப்பது என்றே அவனுக்குப் பிடிபடவில்லை. திசைக்காட்டியோ திசைக்குறிப்போ இல்லாததால் காகிதத்தை எந்தப் பக்கம் திருப்பினாலும் ஒன்றுபோலவே காட்டியது. கசங்காமல் அப்படியே அதை வைத்துவிட்டான். படுக்கையில் நேரம் போகவில்லை. பட்டாம்பூச்சியைப் பிடிப்பதுபோல தூக்கம் சட்டென எழுந்தோடியது. மறுபடியும் துணிப்பையை எடுத்தான். வரைபடத்தை இன்னொரு காகிதத்தில் உள்ளபடியே பிரதியெடுத்துக் கொண்டான். மெத்தைக்கடியில் பத்திரப்படுத்தியதற்குப் பிறகு தூக்கம் வராத இரண்டாவது இரவு மீண்டும் எடுத்துப் பிரித்துப் பார்த்தான். வரைபடத்துக்குள் தான் தங்கியிருக்கிற வீட்டைக் கண்டுபிடிக்கலாம் எனத் தேடினான். அதற்கு முதலில் வீட்டுக்கு அருகிலுள்ள அடையாளங்கள் தெரிய வேண்டும். வீட்டைவிட்டு வெளியே வந்தான். ஆளரவமில்லை. சுற்றி அடுக்குமாடிகள். அருகில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையும் பின்னால் ஒரு கோவிலும் சற்றுத் தள்ளி தேவாலயமும் இருந்தன. வரைபடத்திற்குத் திரும்பினான். மருத்துவமனையைத் துழாவினான் அதற்குள் தேவாலயம் கிடைத்துவிட்டது. இரவு என்பதால் திசைக்குழப்பம் வேறு. விரலைத் தேவாலயத்தில் வைத்துத் தோரயமாக நகர்த்தி ஓரிடத்தில் நிறுத்தி இங்குதான் என்று அனுமானித்தான். அது சரிதானா என்று சோதிக்க வேண்டும். அங்கிருந்து நீண்டு செல்லும் பாதை சிறு வளைவில் திரும்பியதும் தேவாலயத்தில் மோதி நிற்கிறது. சரி என்றால் ஒரு முறை சென்று பார்க்கலாமென வரைபடத்துடன் இருளுக்குள் வந்தான்.

கடைத் திண்ணைகளில் உறங்குபவர்களும் உலாத்தும் தெருநாய்களையும் தவிர விளக்கு வெளிச்சம் மட்டும் தனியாக எரிந்துகொண்டிருந்தது. சரியான கணிப்பில் தேவாலயத்தைத் தொட்டுவிட்டு அறைக்கு மீண்டான். ஏதோ புதிரை அவிழ்த்துவிட்ட பரவசம். அடுத்து மருத்துவமனை. அதையும் அடைந்துவிட்டதும் அளப்பரிய களிப்பு. இனி வரைபடத்தின் மையத்தைத் தொட்டு மீளும் அடுத்த நடையைத் தொடங்கினான். அதாவது கட்டத்தின் குறுக்குவாக்கில் வயோதிகர் வைத்திருந்த ஏணி வழியே ஏறி, சரியாக நாற்பதாவது நிமிடத்தில் வரைபடத்தின் மையத்தை அடைந்தபோது காகிதத்தை மடித்துவிட்டு கண்ணில் பார்த்த அடையாளங்களுடன் திரும்பியவன் சரியாக நாற்பதாவது நிமிடத்தில் பிசிறில்லாமல் வந்து சேர்ந்தான். இவ்விதம் தினம் இரவுகளில் வரைபடத்தின் கோடியில் இருக்கும் இடத்திற்குச் சென்று விட்டுத் திரும்பிய நான்காவது இரவில் வீட்டை அடைய சில அடி தூரம் மிச்சமிருந்தபோது அந்த நடுவயதுக்காரின் அறிமுகம் கிடைத்தது.

அவரைச் சந்தித்த நான்காவது இரவு அது. அப்போது அவன் அவருக்கு எந்த வேலையும் கொடுக்கத் துவங்கவில்லை. வழக்கமாகத் தன்னுடைய வேலையின்மைப் பிரச்சினையைப் பைத்திய மனதுடன் உளறிக்கொண்டிருந்தார். அவன் ஆர்வமின்றி அமர்ந்திருந்தான். தன்னைப் பற்றி எதுவும் தெரிந்து வைத்திருக்கிறாரா என்று கேட்டுவிடலாமா என்று தோன்றிற்று. ஆனால் அப்படிக் கேட்பது தன்னைப் பலவீனமாகக் காட்டிவிடும் என்று பயந்தான். அன்றைக்கு அதற்கு மேல் அங்கு உட்கார்ந்திருக்க அவனுக்கு வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. வரைபடத்தை எடுக்காமலேயே வீடு வரை செல்வதென முடிவெடுத்தான். உடனே கிளம்ப வேண்டும் போலிருந்தது. தேநீர் வரும் வரை கூட காத்திருக்கப் பிடிக்கவில்லை. 'நாளை பார்க்கலாம் நேரம் ஆச்சு' என்றதும் நடுவயதுக்காரர் மலங்கமலங்க விழித்தார். அவர் பேசிக்கொண்டிருந்ததற்கு இவ்வளவு நேரம் செவிகொடுக்காதது அப்போதுதான் புரிந்தது. கிளம்பப் போனவனிடம் அவரே முன்னால் வந்து 'நான் என்னைப் பற்றியே பேசிட்டிருக்கிறது உனக்கு அலுப்பா இருக்கும்னு நினைக்கிறேன்.' அவன் உடனே, 'அதெல்லாம் இல்லை. ரெண்டு நாளா சரியான தூக்கம் இல்லை. அதான்' என்று அசௌகரியம் காட்டினான். பதிலுக்கு அவர் 'கிழவர் இப்போ நல்லா இருக்கிறாரா' என்று விசாரித்தார். அவனும் முதலில் தலையாட்டியபடி நகர அடியெடுத்து வைத்துவிட்டான். சட்டென ஒரு திடுக்கிடல். முதியவரைப் பற்றி வாய் திறக்கக் கூடாதென வைத்திருந்ததை மறந்து சொல்லிவிட்டேனா என்று குழப்பமானான். சற்றுத் தயங்கி, நல்லாயிருக்கிறார் என்பதுபோல மீண்டும் தலையசைத்துவிட்டு 'நான் அவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறேனா?' என்று ஜாக்கிரதையாகக் கேட்டான். அதற்கு அவர், 'நானே பாத்திருக்கிறேனே'' என்றார்.

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இந்தத் தெருவில் நான்கைந்து நாட்களாகத்தான் அவன் வந்து போகிறான். ஆனால் முதியவர் எப்போது தன்னைக் கூட்டி வந்தார் என்பது நம்ப முடியவில்லை. இவர் எப்போது பார்த்தார்? வேறு யாரையும் பார்த்துவிட்டு உளறுகிறாரோ? அவர் அதற்குள் 'கிழவருக்கு ஞாபக மறதி இருக்கும்போல. தெருவில் நடந்துகொண்டிருக்கும்போது, சட்டுனு எங்காவது நிற்பதைப் பார்த்திருக்கிறேன். எதையோ வாயில் அதக்குவது மாதிரி அப்படியே அசைபோடுவார். பிறகு நீ வந்து கூட்டிப்போகும் வரை அதே வெறித்த நிலைதான். பார்ப்பதற்கே பயமாக இருக்கும். பாவம் சில சமயம் நாள் பூராவும் உட்கார்த்தி வைத்ததுபோல இருப்பார். யாராவது டீ வாங்கித் தந்தாலும் குடிக்க மாட்டார். வீட்டிலும் அப்படித்தான் இருக்கிறாரா?'

அவர் முடிப்பதற்குள் இளைஞனுக்கு வெலவெலத்துவிட்டது. கண்ப்ஞ்சடைத்தது மாதிரி இருண்டு விலகியது. தலை வெடித்துவிடும் போல் இருக்க நெற்றியைப் பிடித்துக்கொண்டான். நிதானிக்க விடாமல் சறுக்குகிறது. கவனம் பிசகிவிட்டது. அவர் பேசிக்கொண்டே இருந்தார் 'ஏதாவது மருத்து மாத்திரை சாப்பிடலாம். ஆனால் இந்த வயதுக்கு மேல என்ன புதிசா மாறிடப் போகுது. பொறுப்பா பார்த்துக்கோ. எங்காவது தொலைந்து போனால் அவ்ளோதான்'' இளைஞனுக்கு வியர்த்துவிட்டது. குளிரில் நனைவது மாதிரி உடம்பைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான். வயிற்றைக் குமட்டுவதுபோல உருட்டியது. அவர் நிறுத்திய மறுகணம் பிடரியில் அடி விழுந்தது மாதிரி ஆகிற்று. நிலத்தில் கால்கள் நிற்பது போலில்லை. அங்கிருந்து கிளம்பினால் போதுமென்று இருந்தான். நல்லவேளையாக அலைபேசி ஒலித்ததும் ரகசிய அழைப்பு அது என ஜாடை காட்டிவிட்டு நகர்ந்த சமயத்தில் அவன் ஓடிவந்துவிட்டான்.



வீட்டிற்குள் நுழைந்த அடுத்த நொடி கண்ணில் பட்ட பொருட்களை எல்லாம் கலைத்துப் போட்டான். முதியவரது பெட்டியைக் கொட்டிக் கவிழ்த்தான், சுருட்டிக் கிடந்த துணிக் குவியல்களுக்குள் ஒன்றுகூட அவனுடையதில்லை, புகைக்கும் பீடிக்கட்டு, தலைவலித் தைலம், பழைய பித்தளை சவரத்திருக்கி, கண்ணாடிக்கூடு, மை தீர்ந்த பேனாக்கள், எப்போதோ வாங்கி வைத்த திருநீற்றுப் பொட்டலம், ஆடையகத்தின் விலைச் சீட்டுகள் சில, காலி மாத்திரை அட்டைகள், கடைசியாகக் கதவுக்குப் பின்னால் நிற்கும் மூங்கில் தடி (அதை அவர் எடுத்துப் போவதில்லை) என ஒவ்வொன்றும் அவர் பயன்படுத்துபவைதான். கிளறியெழுந்த வீட்டின் அழுக்கு வாடையும் அசந்துவிட்ட உடலின் வியர்வை வீச்சமும் வயிற்றைக் குமட்டியது. கட்டிலில் போய் விழுந்தான். நடுவயதுக்காரரின் வார்த்தையைத் தவிர அங்கு அவன் இருந்ததை நம்புவதற்கு எந்த ஆதாரமும் இப்போது கையில் இல்லை. அந்த வார்த்தையைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தான். தொலைந்த இடத்தைக் கண்டுபிடித்துவிட்டதற்கும் அல்லது தொலையையவே இல்லை என்றானதற்கும் அவனால் கொஞ்சம் நேரம்கூட சந்தோஷப்பட முடியவில்லை. ஏன் அது இந்த இடமாக இருந்தது என்று விசனப்படத்தான் முடிந்தது. நான்தான் முதியவரைப் பராமரித்தவன் என்றால் இப்போது பராமரிக்கப்படுகிறவனாக எப்படி மாற முடியும். எந்தப் புள்ளியில் இது நிகழ்ந்திருக்கும். அடையாளங்கள் உடலை விட்டு உடல் இடம்பெயர்ந்து மாதிரி. காலத்தை மாற்றிப் போட்டு விளையாடும் விதியை நினைத்து பயந்து போனான்.

**திரைக்குப் பின்னால் முதியவர் பசியுடன் அலையும் பூனை போன்று சாப்பிட எதையோ தேடிக்கொண்டிருக்கிறார். வீடு, கட்டில், திரை, முதியவர், சன்னல் எல்லாமே நகராமல் உறைந் திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.**

நடுத்தரவயதுக்காரர் சொன்னதன் மேல் துளியும் சந்தேகமில்லை ஏனெனில் அவரே பலமுறை அவனைத் தெருவில் பார்த்ததாகத்தான் அறிமுகப்படுத்திக் கொண்டார். அப்படியென்றால் அவனைத் தவிர எல்லோருக்குமே அவன் அங்கிருந்தது தெரியும். ஆக, இப்போது முதியவரின் அபார ஞாபகத்திறனைத்தான் சந்தேகிக்க வேண்டியிருந்தது.

காலையில் பாத்திரங்களை உருட்டிய சத்தத்தில் கண் விழிக்கையில் திரைக்குப் பின்னால் முதியவர் பசியுடன் அலையும் பூனை போன்று சாப்பிட எதையோ தேடிக்கொண்டிருக்கிறார். வீடு, கட்டில், திரை, முதியவர், சன்னல் எல்லாமே நகராமல் உறைந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. முதியவர் சமையலறையில் நின்றுகொண்டிருக்கிறார். நான் கட்டிலில் உறங்கி விழிக்கிறேன். இது மாதிரி எப்போதோ நடந்திருக்கிறது என்று திரும்பத் திரும்ப உச்சரித்தான். யாரோ தன்னை உலுக்குவது தெரிகிறது. ஆனாலும் அவனால் உறைந்த காட்சியிலிருந்து கண்களை எடுக்க முடியவில்லை. உறைநிலையிலிருந்து அறுபடுவதையும் உணர முடிகிறது. மெல்ல மீண்டவன் முகத்தை அண்ணாந்தான். முதியவர் 'என்ன கனவா?' என்றார். அவன் தலையசைத்தான். முகம் கழுவிப் பல் தேய்த்து வருவதற்குள் தேநீர் ஆறிவிட்டது. வெளியே நின்றுகொண்டிருந்தார். அவரிடம் கேட்டுவிடலாமா? கேட்டால் என்ன சொல்வார்? தெரியாது என்றால் எப்படி நிரூபிப்பது? இல்லவே இல்லையென்றால்? ஏன் அவருடைய நங்கூர நினைவுக்குள் என்னுடைய தொலைந்த காலம் மட்டும் தென்படவில்லை? அல்லது அவர் மறைக்கிறாரா? எதற்காக மறைக்க வேண்டும்? வெறுமனே அவரிடம் நேரடியாகக் கேட்பது என்பது இல்லாதவொன்றை வலுக் கட்டாயமாக நம்ப வைப்பது போலாகிவிடாதா? இரண்டாவது, அவருடைய மறதிக்குள் ஒருவேளை அது அமிழ்ந்து போயிருந்தால் வேறு வழியில்லாமல் அதை அவர் ஆமோதிக்கும் நிர்ப்பந்தம் உருவாகலாம் அல்லது அவர் அதை மறுக்கவும் உரிமை உண்டு. மூன்றாவது, வெளிக்கொணர்வது மட்டும்தான் அதை உயிர்மீட்கும் ஒரே வழி. வேறு வழியே இல்லாமல் அவன் மூன்றாவதையே எடுத்தான். தொலையாததைத் தொலைந்ததாக நம்பிக்கொண்டிருக்கும்போது அது தொலையவில்லை என்று மறுக்க அதே காலத்துக்குள் பத்திரமாக இருக்கும் பிறிதொன்றின் சாட்சி தேவைப்படுகிறது. முதியவரின் சொற்களில்தான் அது இருக்கிறது. அவன் காத்திருந்தான்.

ஆனால் அவருக்கோ அவனைப் பற்றிய எந்த யோசனையும் இல்லை. தினமும் என்ன சமைப்பது அதற்கு எது வேண்டும், எவ்வளவு வேண்டும், எங்கு வாங்குவது, எப்படிக் கிடைக்கும், எந்தச் சேர்மானம் நன்றாக இருக்கும் என்பது மட்டுமே முதியவரின் சிந்தனையில் இருந்தது. அலைந்து திரிவதற்கும் அவர் அசரவில்லை. உதாரணத்திற்கு, ஒவ்வொரு குழம்பும் தனித்தனிச் சுவையில் காரமாகவும் ரத்தச் சிவப்பாகவும் இருக்க வேண்டுமென்றால் குடமிளகாயையும் நீளமிளகாயையும் தனித்தனியாக வாங்கி அரைத்தால்தான் வரும் எனும்போது அந்த வீதியின் எந்த மண்டியில் நயமானது கிடைக்குமென விசாரித்து அரைத்து வந்துவிட்டார். அது மட்டுமில்லாமல் பூண்டு வகைகளை ரசத்திற்கு, குழம்புக்கு, சாம்பாருக்கு, குருமாவுக்கு, சட்னிக்கு எனத் தனித்தனியாகப் பிரித்துக்கொண்டார். பச்சை மிளகாய், இஞ்சி, புதினா, கருவேப்பிலை, கொத்தமல்லி வேலை முடித்துத் திரும்பும்போது பையில் எப்போதும் இருக்கும். முதல் நாள் சாய்ந்தரமே அடுத்த நாள் சமையலுக்கானதை எழுதிப் பெற்றுக்கொள்வார். விடிந்ததும் குறிப்பில் முதலில் எதிலிருந்து தொடங்குவது, அது எங்கு கிடைக்கும், அதிலிருந்து அடுத்ததற்கு எப்படி போய்ச் சேர்வது, கடைசியில் எந்த வழியில் திரும்புவதென்கிற சூட்சமமான சித்திரம் ஒன்று தோன்றிவிடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒயாது குறை சொல்வதே பெண்ணின் அடையாளமா?

வழக்கமாகச் செய்துவருகிறார்கள். தன்னைப் பற்றி உயர்வாக எண்ணும்படியும், ஆணைப் பற்றிக் கேவலமாக நினைக்கும்படியும் நுட்பமாகச் சித்திரிப்பதில் பெண்கள் கை தேர்ந்தவர்கள். இதை ஏன் இங்கே முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால் - காதலன் / கணவனுடன் பெரிய பிரச்சினை இருக்காது. அவனைப் பிரிய வேண்டும் என்ற நோக்கமும் இருக்காது. அவனுடன் எந்தச் சிக்கலும் இன்றி வாழ்க்கை தொடர்ந்துகொண்டிருக்கும் போதே பிரியும் அளவுக்குக் கொடூரமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். இதனால் அவர்ளுக்கு என்ன பயன்? என்ன நோக்கம்? என்ன லாபம்? எப்படிச் சிந்தித்துப் பார்த்தாலும் விடை கிடைப்பதில்லை.

விவாகரத்து வழக்கு நடக்கும்போது இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் கூட அதைப் புரிந்துகொள்ள முடியும். சும்மா நல்ல நாட்களிலேயே கணவர்களைப் பற்றிப் புகார் பட்டியல் வாசிப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் பல பெண்களை நான் கண்டிருக்கிறேன். "என்னதான் உன் பிரச்சினை?" என்று கேட்க தோன்றும். கேட்டாலும் உருப்படியான பதில் கிடைக்காது!

ஐ

அடுத்து என்னைக் கொலை வெறியில் தள்ளும் வார்த்தை, 'கவனிப்பு (கெயரிங்)!'

இந்த 'கவனிப்பு' இருக்கிறதே, அது பெண்களுக்கு மிகவும் பிடித்தமான வார்த்தை. ஆண்களுக்கு வெறுப்பான வார்த்தை.

ஒரு ஆணுக்கு அவனுடைய விவரம் தெரியாத நாட்களில் அவன் தாயிடம் கிடைத்த கவனிப்பைத் தாண்டி, வாழ்வில் அவனுக்கு கவனிப்பு என்றால் என்னவென்றே தெரியாது. நவீன வாழ்வில் தன் இணையை கவனிப்பதற்காகப் படைக்கப்பட்டிருக்கும் ஜந்து அவன். அதுவும் வெறும் கவனிப்பு அல்ல, எப்போதெல்லாம் கேட்கப்படுகிறதோ அப்போதெல்லாம் வழங்கப்படவேண்டிய கவனிப்பு. "என்னை கவனிச்சுக்கொண்டேயிரு!", "என்னைக் கவனிக்கிறதே இல்லை!" எனப் பெண்கள் கூட்டத்திலிருந்து காட்டுக் கத்தல் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

பெண்களே, மனசாட்சியைத் தொட்டு சொல்லுங்கள். காதலில் இருக்கும்போது நீங்கள் உங்கள் காதலனை என்னென்ன விதமாக கவனித்திருக்கிறீர்கள்? தன் இணைக்காக என்னென்னவோ செய்யும் ஆண்களை எனக்குத் தெரியும். ஆனால், அவர்களும் இந்தப் புகார்களை எதிர்கொள்ளாமல் இல்லை. "பிறந்த நாளன்று இரவு 12.02-க்குதான் நீ விஷ் பண்ணினனீ!" "சாப்பாட்டுக் கடையில, நான் சாப்பிட்டு முடிக்கிறதுக்கு முதலே நீ போய் கைகழுவிட்டு வந்திட்டாய்!" எல்லாமே அற்ப காரணங்கள். ஆனால், பெரிய புலம்பல்கள்!

தனக்குச் சின்னதாக உடல்நலம் குன்றும் போதும்கூட காதலனைத் துணைக்கு அழைக்கும் பெண்கள் காதலிக்கும்போது ஆடவன் உடல் நலமில்லாமல் படுத்துவிட்டால் பெண்கள் அளிக்கும் கவனிப்பு என்ன தெரியுமா?

முதல் கவனிப்பு: மருந்து மாத்திரையின் செயலால் அரை மயக்கத்தில் கிடக்கும் அவனை தொடர் தொலைபேசி, குறுந்தகவல் மூலம் தொல்லைப்படுத்துவது.

இரண்டாவது கவனிப்பு: 'எனக்கு முதலே தெரியும் இது இப்பிடித்தான் வரும் என்று!' எனத் தொடங்கி அவனை அக்கறை என்ற பெயரில் வறுத்து எடுப்பது.

மூன்றாவது கவனிப்பு: அவன் மருத்துவமனை செல்கையில், அனைத்தையும் உடனுக்குடன் நேரலை செய்யச் சொல்வது அல்லது பிரேக்கிங் நியூஸ்போல அப்டேட்ஸ் கேட்பது...

நான்காவது கவனிப்பு: ஐந்து சதவீதம் சுகமாகிறான் என்று தெரிந்த உடனேயே தங்களுடைய நிலுவையில் உள்ள வேலைகளைச் செய்யப் பணிப்பது.

ஐந்தாவது கவனிப்பு: வந்து சென்ற நோயைக் காரணம் காட்டி, அவனை எந்த உல்லாசத்திலும் ஈடுபடவிடாமல் அடிப்பது.

> **எந்தச் சிக்கலும் இன்றி வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருக்கும் போதே பிரியும் அளவுக்குக் கொடூரமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். இதனால் அவர்ளுக்கு என்ன பயன்?**

இதற்குப் பேர் கவனிப்பா?

எல்லாவற்றிலும் தலையீடு

பெண்கள் உலகில், அவர்கள் பழக்கவழக்கங்களில், அவர்களுடைய ரசனை மற்றும் வாழ்க்கைமுறைகளில் கூடுமானவரை நவீன ஆண்கள் தலையிடுவதே இல்லை. இன்னும் கேட்டால் அவர்கள் இதற்கெல்லாம் உதவி செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆணின் வாழ்வில் உறவாக நுழைந்துவிட்ட ஒரே காரணத்தாலேயே, பெண்கள் தேவையில்லாமல் ஆண்களின் எல்லா விடயங்களிலும் தலையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். கொஞ்சம் பொறுமையாக யோசித்துப் பார்த்தால், அவர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட வாழ்வு, வட்டம் இல்லாத காரணத்தால், போர் அடித்துப் போய் இப்படி மூக்கை நுழைப்பதையே வேலையாகக் கொண்டி ருக்கிறார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஒருவனுடைய செய்கை அவர்களையோ, அவர்கள் வாழ்வையோ பாதிக்கும்போது எதிர்ப்புத் தெரிவிப்பதைப் பற்றி நான் பேசவில்லை. எந்தப் பாதிப்பும் இல்லாவிட்டாலும், வெட்டியாக எதற்கெடுத்தாலும் மூக்கை நுழைத்து வம்பு வளர்த்துக்கொண்டிருப்பதைப் பற்றி மட்டுமே பேசுகிறேன்.

காதலில் கசிந்துருகும்போது, 'ஈருடல் ஓருயிர்', 'செம்புலப் பெயநீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' போன்ற மாய யதார்த்த தருணங்கள் உச்சம் பெறும்தான். அது இருவருக்கும் நடக்கும். இரண்டு பேர் சேர்ந்து ஒருவரானால் அதில் இருவருடைய பண்புகளும், ஆசாபாசங்களும்தானே இருக்கவேண்டும்? ஆனால், இந்த விநோத வேதியல் கலவை ஏற்பட்டு இருவர் ஒன்றாகும்போது ஆடவனை உயிருள்ள பிண்டமாக மட்டுமே தன்னுடன் பெண்கள் பிணைத்துக்கொள்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தொடர்ந்து பேசுவோம்...



# கவனம் இது பேய்க் கதை

ஆனந்தன் – மண்கும்பான்

## வைத்தவனும் அவனே எடுத்தவனும் அவனே

எனது நண்பர் ஒருவர் பற்றறிக் (மின்கலம்) கடை வைத்திருந்தார். அவர் நீண்ட காலமாக அந்தத் தொழிலைச் செய்கிறபோதிலும் குறிப்பிட்டளவில்கூட முன்னேற்றம் எதையும் காண முடியவில்லை. எனினும் அவரது விடாமுயற்சியால் சிறிய வீட்டுடன் காணி ஒன்றை வாங்கினார். அதன் பின்னரும் அவரது முன்னேற்றம் மட்டுப்பட்டதாகவே இருந்தது.

காணிக்குள் சூனியம் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் அவருக்கு எழுந்தது. சூனியம் வைக்கப்பட்ட இடத்தில் வெற்றிலைக்கொ நட்டால் அது கருகிப்போகும் என்று இன்னொரு நண்பர் அவருக்குக் கூறியிருக்கிறார். அவர் அந்தக் காணியில் ஏற்கனவே நட்ட பல வெற்றிலைக் கொடிகள் கருகிப்போய் விட்டன. அதுபற்றி அந்த நண்பருக்குக் கூறியிருக்கிறார். அவர் உடனே, "நீ எதற்கும் இந்த இடத்தில் இருக்கும் ஒருவரைப் போய்ப்பார். அவர் இந்தக் காணியில் உள்ள பிரச்சினையைச் சொல்லுவார். தீர்ப்பார்" என்றார்.

அதன்பின் நண்பர் குறிப்பிட்ட அந்த நபரைச் சென்று சந்தித்து இன்ன இடத்தில் காணி வாங்கினோன். வாங்கிய காலத்தில் இருந்து ஒரே பிரச்சினையாக இருக்கிறது என்றுகூற அவர் கொஞ்ச நேரம் கண்ணை மூடி யோசித்துவிட்டு, "உந்தக் காணியில் கேற் அருகில் இந்தப் பக்கத்தில் கிண்டிப்பார்... ஒரு செப்புத் தகட்டில் சூனியம் தாட்டுக் கிடக்கு (இடுபொருள்) அதைக் கிண்டி எடுத்து ஆக்கள் புழங்காத இடத்தில் எறி" என்றார். அவர் கூறிய இடத்தில் கிண்டிப் பார்த்தபோது செப்புத் தகடு ஒன்றில் ஏதோ கீறி எழுதியிருந்தது. அவர் கூறியபடியே அதை எடுத்து எறிந்தார். அதன் பின் அதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தபோது அந்த வீட்டின் சொந்தக்காரன் பல வருடங்களுக்கு முன்னர் சூனியம் செய்து இறந்திருக்கிறார். அதன் பின் இருவரின் கைக்கு அந்த வீடு மாறியிருக்கிறது. அவர்களும் இறந்திருக்கிறார்கள் என்று தெரியவந்தது.

> காணியில்
> கேற் அருகில்
> இந்தப் பக்கத்தில்
> கிண்டிப்பார்...
> ஒரு செப்புத்
> தகட்டில் சூனியம்
> தாட்டுக் கிடக்கு
> அதைக் கிண்டி
> எடுத்து
> ஆக்கள் புழங்காத
> இடத்தில் எறி
> என்றார்

அந்தச் செப்புத் தகட்டை எடுக்காதிருந்தால் எனது நண்பரும் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அவர் இது விடயமாகத் தொடர்ந்து தேடிப் பார்த்தபோது செப்புத் தகடு உள்ளது என்று கூறிய மந்திரக்காரன்தான் பல வருடங்களுக்கு முன் அதை அங்கு புதைத்தான் என்றும் அறிய முடிந்தது. தாட்டவனே அதை எடுப்பதால் அவனுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படும் என்றோ என்னவோ தான் வந்து தோண்டி எடுக்காமல் என் நண்பனை எடுக்கச் செல்லியிருக்கிறார். இப்படிப் பல சூனியக்காரர் புதைப் பதையும் எடுப்பதையும் தமது வருமான மார்க்கமாக வைத்திருக் கும் நிலை காணப்படுகிறது. இவ்வாறானவர்களால் மக்கள் தொடர்ந்தும் துன்பப்படவேண்டியிருக்கும். அதேவேளை இவ்வாறு புதைக்கப்பட்ட பொருள்களை வெளியே எடுக்கும்போது அதைச் செய்வித்தவர்களின் குடும்பங்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனவும் அறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாகலாந்தில் குன்னூரில் 13 கெட்டது

றொபின்



இந்தியாவின் வடகிழக்கு நிலப்பரப்பில் மியன்மாரின் எல்லைக்கருகிலுள்ள பகுதி நாகலாந்து. இந்த மாதம் 4ஆம் திகதி நாகலாந்தில் நடந்த சம்பவம் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. அதிலும் குறிப்பாக உள்ளூர் இந்தியர்களையே கொந்தளிக்கச் செய்திருந்தது.

நாலாந்துப் பகுதியில் தீவிரவாதிகள் பயணித்த வாகனத்தைத் தாக்கியதாக இந்திய படைத் தரப்பு தெரிவித்தது. ஆனால், அந்த வாகனத்தில் பயணித்த வர்கள் சுரங்கப் பணியாளர்கள். தொழிலாளர்கள் பயணித்த வாக னத்தையே இந்திய தரைப்படை தாக்கியது. அதில் 6 தொழிலாளர்கள் கொல்லப்பட் டார்கள். அதில் இறந்தது தீவிரவாதிகள் அல்லர் அப்பாவித் தொழிலாளர்கள் என்ற விடயம் தெரிய வந்ததும், சுரங்கத் தொழிலாளர்களின் சாவைத் தாங்கிக் கொள்ள முடியாத உள்ளூர் மக்கள் இந்தி யப் படையினருக்கு திராகக் கலகத்தில் இறங்கி னர். கலகக்காரர்கள் மீது படையினர் சுட்டதில் 7 பேர் சாவடைந்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் எல்லாமாக 13 பேர் கொல்லப் பட்டனர். அப்பாவித் தொழிலாளர்களைக் கொன்ற தோடு நின்றுவிடாமல் அதற்காகப் போராட்டத்தில் குதித்தவர்களையும் கொன்றது இந்தியப் படை. தவறுக்கு மேல் தவறிழைத்தாலும் அருவருப்போ குற்றவுணர்வோ இல்லாமல் அதிகாரபீடமாக அசராமல் நின்றது. தமது கொலைகளுக்காவும் அப்பாவிகளின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதற்காகவும் இந்திய ஆட்சியாளர்களோ படையினரோ மனிப்புக்கோரவில்லை.

## 13க்குப் 13

13 என்கிற இலக்கம் எப்போதுமே கெட்டது என்கிற கருதுகோள் மேற்கு நாடுகளில் பலமாக உண்டு. இலங்கை அரசமைப்பில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்காகக் கொண்டுவரப்பட்ட திருத்தமும் 13ஆவது திருதத்தமே அதனால்தானோ என்னவோ அதனை இன்றுவரை முழுமையாகக்கூட நடைமுறைப்படுத்துகிறார்களில்லை. அப்படிப்பட்ட 13 என்கிற எண்ணிலேயே இந்தியப் படைகள் படுகொலைகளை நிகழ்த்தின. அது தனது வேலையை உடனேயே காட்டியது.

8.12.2021 அன்று தமிழ்நாட்டின் குன்னூர் பகுதிக்கு மேலாகப் பறந்துகொண்டிருந்த இந்திய வான் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று விபத்துக்குள்ளாகியது. சிறப்பு நபர்கள் பயணம் செய்யும் சகல வசதிகளையும் கொண்ட அந்த வானூர்தியில் பயணித்த இந்திய முப்படைத் தளபதியான பிபின் ரவாத் [வயது 63], அவரது மனைவி, 11 சிப்பாய்கள் என 13 பேர் நொடியில் சாவடைந்தி ருக்கிறார்கள். இந்தச் செய்தி இந்தியாவையே அதிர வைத்துள்ளது.


நாகலாந்தில் ஏழை மக்கள் 13பேர் கொல்லப்பட்டு 4 நாள்கள் கடந்த நிலையில் இந்த வானூர்தி விபத்து நடந்திருக்கிறது. இதிலும் 13 பேர் சாவடைந்திருக்கிறார்கள். இது இயற்கை விதியின் அடிப்படையில் நடந்த தண்டணையோ என்று எண்ண வழிவகுத்திருக்கிறது. பலவான்களை எதிர்க்க முடியாத ஏழை மக்கள் தமது கண்ணீரால் சபித்ததன் பயனாகவும் இது நடந்திருக்கலாம்.

## படைத் துறை அவமானம்

ஏழைத் தொழி லாளர்க ளுக்கு யாரும் நீதி வழங்காத நிலை யில் அல் லது ஏழை மக்க ளைக் கிள்ளு கீரை களாகப் படை யினர் கையா ண்டிருந்த நிலையில் இந்த விடயம் அரங்கேறியுள்ளது. ஒருவகை யில் பார்த்தால் தீவிரவாதிகள் பயணம் செய்யும் வாகனத்தை தாக்குவது என்ற முடிவை எடுப்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல. குறிப்பிட்ட வாகனத்தில் எத்தனை தீவிரவாதிகள் உள்ளனர்? அவர்களிடம் எத்தகைய ஆயுதங்கள் உள்ளன? அவர்கள் திருப்பித் தாக்கினால் நிலமை என்னாகும்? போன்ற பல விடயங்களைப் பகுப்பாய்வு செய்த பின்னரே தாக்குதலில் இறங்கியிருக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் முதலில் தீவிரவாதிகளை உறுதி செய்திருக்க வேண்டும். மரபு ரீதியான ஒரு படை தாக்குதலுக்கு முன்னரே இவற்றையெல்லாம் திட்டமிட்டிருக்கும். ஆனால் நாகலாந்தில் பொதுமக்களைப் பொருட்படுத்தாமல் தான் தாக்குதல் நடந்துள்ளது. இத்தகைய முன்னேற்பாடுகள் எவையுமின்றித் தீவிரவாதிகளன் வருகிறார்கள் என்ற தகவலின் அடிப்படையில் சுட்டோம் என்றோ சுட்ட பின்தான் அதில் இருந்தவர்கள் தீவிரவாதிகள் இல்லை என்பது தெரியும் என்றோ நொண்டிச்சாட்டுக் கூறுவது உலகின் முன்னணி படையான இந்தியத் திரைப் படைக்கு அழகல்ல. மாறாக அவமானமே. தமது மக்களுக்கு காவலாக இருக்கவேண்டிய படையினரே அந்த மக்களையே சகட்டு மேனிக்குக் கொன்று குவிப்பது ஏற்றுக்கொள்ளவே முடியாத மனித உரிமை மீறல். அத்தகைய ஒரு அராஜகத்தினால் கொல்லப்பட்ட உயிர்கள் 13ஆக இருக்க அந்த எண் தன் வேலையைக்காட்டி பதிலுக்குப் பதில் பழிக்குப் பழி என்று நிலைமையை ஆக்கிவிட்டது போலும்.

# முட்டை பலகாரம்

நம்மவர்களின் உள்ளூர்த் தயாரிப்பான முட்டை மா பற்றி இந்தச் சமையல் பகுதியில் பார்த்திருக்கிறோம். அந்த வகையில் தமிழகத் தமிழர்கள் மத்தியில் புழக்கத்திலுள்ள முட்டைப் பணியாரம் இது. முட்டைத் தோசை, முட்டை அப்பம், முட்டைமா என்றெல்லாம் இங்கு முட்டையைப் பயன்படுத்தி வகை வகையாக நாம் ஆக்கியுண்கிற உணவைப்போலதான் இந்த முட்டைப் பணியாரமும். முட்டையும் சேர்த்து ஆக்கப்படுவதால் அவ்வாறு பெயர் சூட்டியிருக்கிறார்கள். தவிர இது அதிகளவில் முட்டையை மாத்திரம் கொண்டிருப்பதல்ல.




### என்னென்ன பொருள்கள் தேவை?

முட்டைகள் 2, பெரிய வெங்காயம் 1, பச்சை மிளகாய்கள் 2, மஞ்சள்தூள் - ஒரு தேக்கரண்டி, மா 2 மேசைக்கரண்டி, கடுகு, உழுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு ஆகியன தலா ஒரு தேக்கரண்டி யளவு, கறிவேப்பிலை, எண்ணெய், உப்பு ஆகியன தேவைக்கேற்ப.


### எப்படி ஆக்குவது?

முட்டைகளை உடைத்தெடுத்து அடித்துக்கொள்ளுங்கள், வெங்காயம், பச்சை மிளகாய்களை நறுக்கி வைத்திருங்கள். கடுகு, உழுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு ஆகியவற்றைத் தாளித்து எடுத்துக்கொள்ளுங்கள்.

பின்னர், மாவுடன் உடைத்த முட்டை மற்றும் வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு அடித்துக்கொள்ளுங்கள். இதனுடன் தாளித்து வைத்திருந்தவற்றைக் கலவுங்கள். கலந்ததும் குண்டுத்தோசை சுடுவதற்குப் பயன்படும் குழிச் சட்டியை எடுத்து அடுப்பில் வைத்துச் சூடேற்றிக் குழிகளுக்குள் சிறிதளவில் எண்ணெய் ஊற்றிக் கலந்து வைத்துள்ள கலவையை ஒவ்வோர் குழிகளுக்குள்ளும் ஊற்றி வேகவிடுங்கள். வெந்ததும் இறக்கி ருசியுங்கள். முட்டைப் பணியாரம் இன்னும் ருசியாவதற்கு சம்பலோ, குழம்புக்கறியோ தொட்டுக்கொண்டாலும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறைக்குள்...

தர்மராசா 34

## கைதிகளை நிற்க வைத்துவிட்டுச் சீட்டாடிய ஊழியர்கள்

சிறைக் கைதிகளை ஏற்றிச்செல்லும் பேருந்தில் கைதிகளை உள்ளேவிட்டு இடைக் கதவுகளைப் பூட்டுவார்கள். அதற்குள் ஆயுதங்களுடன் சிறைச் சாலை ஊழியர்கள் வரக்கூடாது என்பது சட்டம். ஆனால் மட்டக்களப்பு ஸ்கொட்டில் கைதிகளும் ஆயுதம் தாங்கி யவர்களும் ஒன்றாகவே இருந்து பயணம் செய்யவேண் டியிருந்தது. அந்த வாகனம்கூட சிறைச்சாலைக்குச் சொந்தமானது அல்ல. தனியார் ஒருவருக்குச் சொந்த மான றோசா ரகப் சிற்றுந்து.

சிறையில் தண்டனைக் காலத்தை எண்ணிக் கொண்டிருந்த குழந்தை என்று அழைக்கப்படும் அச்சுக் கைதியுடன் ஒரு நாள் கதைத்துக்கொண்டி ருந்தபோது அவர் ஸ்கொட் போன தனது அனுபவம் ஒன்றைக் கூறினார். அதன்படி களுத்துறைச் சிறைச்சா லைப் பேருந்தில் நிறையக் கைதிகள் அனுராதபுரத் துக்குப் போனார்கள். அவர்கள் மன்னார், வவுனியா நீதிமன்றங்களில் வழக்குள்ளவர்கள். அந்தப் பேருந்தின் இரண்டு பெரிய ஆசனங்களில் அமர்ந்திருந்த நான்கு கைதிகளை எழுந்து நிற்குமாறு கூறிவிட்டுச் சிறைச் சாலை ஊழி யர்கள் அதில் அமர்ந்து சீட்டாடினார்கள். அப்போது பேருந்து கொழும்புக்குத் தெற்காக மொறட் டுவப் பகுதியில் போய்க்கொண்டிருந்தது.

இதைப் பார்த்த குழந்தை ஏனையவர்களுக்குச் சொன்னார், “இப்ப ஒன்றும் குழம்பக்கூடாது... இது சிங்கள ஊர்... நாங்கள் பிரச்சினைப்பட்டால் சிங்களச் சனமே வெட்டிப்போடுவாங்கள் வெள்ளவத்தைப் பகுதி வந்ததும் நான் பெரிதாகக் கத்துவேன். எல்லோரும் என்னுடன் சேர்ந்து கத்தவேணும்” என்று. வெள்ள வத்தைப் பகுதிக்குள் பேருந்து சென்றதும் “நிப்பாட் டுங்கோ பஸ்ஸை” என்று எல்லாரும் பெரிதாகக் கத்தி னார்கள். உடனே பேருந்து நிறுத்தப்பட்டது. (குழந் தைக்குச் சிங்களம் கதைக்கத் தெரியாது) தான் சொல் வதைச் சிறை ஊழியர்களுக்குச் சிங்களத்தில் சொல் லும்படி சிங்களம் தெரிந்த மற்றொரு கைதியிடம் கூறினார். “கைதிகளை நிப்பாட்டி வைத்துக்கொண்டு காட்ஸ் விளையாடவோ உங்களுக்கு அரசு சம்பளம் தருகுது?” என்று கேட்டார்.

ஜெயிலர் உள்ளே வந்து என்ன ஏது என்று விசா ரித்தார். கைதிகள் கலகம் செய்யப்போகிறார்கள் என்று எண்ணித் துப்பாக்கியுடன் இருந்த சிறைக்காவலர்கள் ஏ.கே. ரகத் துப்பாக்கிகளைச் சுடுவதற்காகத் தயார்ப் படுத்திக்கொண்டு உள்ளே வந்தார்கள். உடனே குழந்தை, “உந்தத் துவக்கைக் கொண்டுபோய் வேறு யாருக்கும் காட்டு நான் இயக்கத்தில பிப்ரி கலிபர் வைச்சு அடிபட்டனான். எனக்குக் காட்டாத போடா வெளியில” என்று சீறியுள்ளார். சீட்டாடிய ஊழியர்களைப் பேசி னார். அவர்களை எழுந்து நிற்கும்படிகூறிவிட்டுக் கைதி களை அமர்ந்து பயணம் செய்ய வலியுறுத்தினார்.

சேரன் என்ற கைதி தனது ஸ்கொட் அனுபவம் ஒன்றைக் கூறினார். அவருக்குக் கொழும்பிலும் திரு கோணமலையிலும் வழக்கு இருந்ததால். திருகோண மலை வழக்குக்காகப் பல தடவைகள் ஸ்கொட் போக வேண்டியிருந்தது. கொழும்பில் வழக்கு நடந்த அடுத்த நாளே சிலவேளை திருகோணமலைக்குப் போகவேண் டிய நிலை ஏற்பட்டது. அவரைத் தனியே பேருந்தில் ஏற்றி முன்சீற் கம்பியில் பொருந்துமாறு கைகளில் விலங்கைப் பூட்டுவார்கள். சிறுநீர் கழிக்கக்கூட இறக்க வில்லை.

> **“உந்தத் துவக்கைக் கொண்டுபோய் வேறு யாருக்கும் காட்டு நான் இயக்கத்தில பிப்ரி கலிபர் வைச்சு அடிபட்டனான். எனக்குக் காட்டாத போடா வெளியில”**

அவரை ஒரு சிறப்புக் கைதி என்று குறிப்பிட்டுக் கொமிற்றலில் எழுதப்பட்டிருப்பதால் தப்பி ஓடிவிடுவார் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அதனால்தான் அவ்வாறு நடந்துகொண்டார்கள். இத னால் சேரன் பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றை எடுத்து அதன் மேற் பகுதியில் ஒரு துவாரம் வெட்டிச் சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை ஏற்படும்போது பேருந்தின் ஆசனத்தில் இருந்து அதற்குள் சிறுநீர் கழித்தார். பின்னர் இறங்குமிடத்தில் அதை ஊற்றுவார்.

13.11.2001 அன்று மட்டக்களப்பில் இருந்து வெலிக்கந்தைக்கு ஸ்கொட் எடுத்தார்கள். தமிழ்ச் சூழலைவிட்டுப்போவது மனதுக்குக் கஸ்ரமாக இருந்தது. என்னுடன் பத்துக் கைதிகள் வந்தனர். மட்டக் களப்பிலிருந்து புறப்படும்போது யூறியாப் பைகளுக்குள் உணவுப் பொருள்கள், சவர்க்காரம் போன்றவற்றைக் கைதிகள் கட்டிக்கொண்டு வந்தார்கள். எனக்கு அவ்வாறான அவசியம் இருக்கவில்லை. பூசா வில் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை எனது வீட்டிலிருந்து சிறை நிர்வாகத்தினூடாக மணி ஓடர் அனுப்பப்படும். அந்தப் பணத்தில் பொருள்களை வாங்கக்கூடிய சூழல் இருந்தது. எங்களுக்கான பண விவரத்தை பொருள்களை வாங்கித் தருவதற்குப் பொறுப்பான சிறை அதிகாரியின் புத்தகத்தில் பதிந்து வைத்திருப்பார்கள். அவ்வாறு பணம் இருந்தால் தேவையான பொருள்களை வாங்க முடியும்.

முற்பகல் 10.30 மணியைக் கடந்ததும் மட்டக்களப்புச் சிறைச்சா லைக்கு வெளியில் எடுக்கப்பட்டோம். அங்கு தயாராக நின்ற பேருந் தில் ஏற்றப்பட்டோம். ஆயுதம் தாங்கிய காவல்துறையினர் காவலில் இருந்தார்கள். மட்டக்களப்பு தமிழீழப் போராட்டத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி. ஊர் ஊராகச் சுற்றிவளைப்பு, கொலைகள், கடத்தல்கள் எனப் பல வழிகளில் தமது பிள்ளைகளையும் உறவு களையும் நீண்ட காலமாக இழந்ததால் அதேபோன்ற நிலை தற் போது கைதிகளாக உள்ள பிள்ளைகளுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அந்தப்பகுதி மக்களுக்கு இருந்தது.

என்னையும் ஐயரையும் பார்க்க வந்தவர்கள் தவிர 30 பேரளவில் சிறை வாசலில் கூடினார்கள். சின்னப் பிள்ளைகள், வயோதிபர்கள், பெண்கள் எனப் பலர் அதில் இருந்தனர். பேருந்து புறப்படத் தொடங்கியபோது கண்ணீர்விட்டுக் கதறினார்கள். எனக்கு அவர்களின் துக்கம் புரிந்தது. “எங்கட பிள்ளைகள் சிறையில் இருந்தாலும் மட்டக்களப்புச் சிறையில் இருந்தால் அடிக்கடி வந்து பார்க்கலாம். அவர்களுக்கான உணவையும் செய்து கொடுக்கலாம். சிங்கள ஊர்களில் உள்ள சிறைகளுக்குக் கொண்டுபோனால் அவர்களை மீண்டும் பார்க்கலாமா? உயிருடன் திரும்பி வருவார்களா? எங்கட பிள்ளைகளை உயிருடன் பார்க்கும் இறுதித் தருணம் இதுதானா?” என்ப தாக அவர்களின் ஏக்கம் இருந்தது. கைதிகளில் சிலர் அவர் களது குடும்பத்தினருக்கு ஆறுதல் சொன்னார்கள். சிலர் தாமும் சேர்ந்து அழுதார்கள். அத்தகைய துன்பம் எனக்கு இருக்கவில்லை. அங்கிருந்த மக்களின் ஏக்கங்களை அவதானித்த வண்ணமிருந்தேன்.

(தொடரும்)

## எல்லாத்துக்கும் நான் ரெடி...!

அருண்விஜய்யின் நடிப்பில் 2019ஆம் ஆண்டில் வெளியாகிய தடம் படத்தில் அறிமுகமாகித் திரைக்கு வந்தவர் ஸ்ம்ருதி வெங்கட். 'தடம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் தடம்பதித்த ஸ்ம்ருதி வெங்கட்டுக்குப் பட வாய்ப்புகள் அவ்வப்போதுதான் கிடைத்துவருகின்றன. மூக்குத்தி அம்மன் படத்தில் நடித்த பின்னர் இவரது நடிப்பில் வெளியான 'வனம்' தற்போது திரையரங்கில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அடுத்ததாக தனுஷ் நடிக்கும் 'மாறன்' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இப்படியாக ஒரு சில வாய்ப்புகளைக் கையில் வைத்திருக்கிற அவர் திரைத்துறையினருக்குப் புதிய செய்தி ஒன்றை விடுத்திருக்கிறார். தனது நேர்காணல் ஒன்றில், எந்தப் பாத்திரமானாலும் அதை ஏற்று நடிப்பதற்கு நான் தயாராகவுள்ளேன் என்று சொல்லியிருக்கிறார் ஸ்ம்ருதி. ஆண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் கையில் கிடைக்கின்ற படவாய்ப்புகளை அதிகப்படுத்தும் நோக்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று பலரும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனாலும் ஸ்ம்ருதி வெங்கட்டின் ''நான் எதற்கும் தயார்'' என்ற இந்த அறிவிப்புத் திரைத்துறையினர், இயக்குநர்கள், தயாரிப்பாளர்களின் காதிலும் போய் விழுந்திருக்கிறது. இதனால் இனி ஸ்ம்ருதி வெங்கட்டைப் பல படங்களில் காணும் வாய்ப்பும் கிடைக்கலாம் ஆடைகள் பலவும் களையப்பட்ட நிலையில்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலநாதன்

போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இலங்கைப் படையில் பதவி வகித்த பலரையும் அணுகித் தமது பதிவுகளின் ஊடாக அவர்கள் எவ்வாறு புலிகளை வென்றார்கள், அல்லது கொன்றார்கள் என்றும் அதில் ஒவ்வொரு சிப்பாய்களும் எத்தகைய அர்ப்பணிப்புகளை (அவர்களளவில்) செய்தார்கள் போன்ற விடயங்களையும் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறுவதில் சிங்கள யூரியூப் வலைத்தளங்கள் போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன.

# இரண்டாவது தாக்குதல்

**சமன் குமாரசிங்க பொல்கொல்லையில் பிறந்தவர். கொக்கரல்ல மத்திய மகாவித்தியாலத்தில் கற்றவர். 1998இல் இலங்கை தரைப் படையின் சிறப்புப் படைப்பிரிவில் (ஸ்பெசல் போர்ஸ்) 3ஆவது அணி யில் இணைந்து பயிற்சி பெற்றவர். அதன் பின்னர் ஆழ ஊடுருவும் படைப்பிரிவில் இணைந்தார். 2000ஆம் அண்டு 7ஆம் மாதம் 2ஆவது சிறப்புப் படையணியுடன் வெலிஓயாப் பகுதியில் இணைந்தார். 2008 நவம்பர் 26 அன்று புலிகளின் தாக்குதலில் கொல்லப் பட்ட கேணல் லலித் ஜயசிங்க பற்றி சமன் குமாரசிங்க அதிகம் குறிப்பிடுகிறார். அவரது மெய்ப்பாதுகாவலராக இருந்ததால் அவரது திறமைகளால் அதிகம் கவரப்பட்டிருந்தார். அவர் தனது இந்த அனுபவத்தை வெனச என்கிற யூரியூப் வாயிலாகக் கீழ்வருமாறு பகிர்ந்தார். அவரது நேர்காணலின் முதல் பாகம் கடந்தவாரம் வெளியானதைத் தொடர்ந்து இரண்டாவது பாகம் இந்த வாரம்.**

இரண்டாவது தாக்குதல் நடவடிக்கை ஒட்டுசுட்டானுக்கு வடக்காக இரணைமடுப் பகுதியில் இருந்த புலிகளின் முகாம் மீதானது. இந்தத் தாக்குத லுக்குத் தேவையான பொருள்களை வவுனியாவிலிருந்த படைமுகாம் களஞ்சியத்திலிருந்து எடுத்துக் கொண்டோம். மகாகச்சக்கொடி (பதவியா) பகுதியிலிருந்து காட்டுக்குள் இறங்கினோம். புலிகளின் வன்–சீரோ லைனைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. புளியங்குளம் – ஒட்டுசுட்டான் வீதிக்கு அருகில் மறைந்திருந்து நிலமைகளை அவதானித்தோம். பகல் நேரத்தில் அந்த வீதியைக் கடப்பதில் சிக்கல்கள் நிறைய இருந்தன. பொதுமக்களினதும் புலிகளினதும் நடமாட்டம் அதிகமாக இருந்தது. அதனால் இரவு நேரத்தில் வீதியைக் கடந்தோம்.

மறுநாள் அதிகாலையில் மாங்குளம் – ஒட்டுசுட்டான் பாதையைத் தாண்டினோம். தாக்குதலுக்கான இடத்தைக் கேணல் லலித் ஜயசிங்க காட்டிய பின் அந்தத் தாக்குதலுக்கான கிளைமோர் மற்றும் பொருள்களை மறுநாள் காலையில் எடுத்துச் சென்றோம். புலிகள் தமது பாதுகாப்புக் கருதிப் பாதை ஓரத்தில் காடு வெட்டி அகலித்திருந்தனர். எதிர்ப் பக்கத்தில் இருந்த காட்டுப் பகுதியில் கிளைமோரைப் பொருத்திவிட்டு அதற்கு நேர் எதிரில் காத்திருந்தோம். ஒரு பச்சை பிக்கப்பைத் தாக்கினோம். அதில் புலிகளின் முக்கிய தலைவர் ஒருவரையும் 3 போராளிகளையும் கொன்றோம். தாக்குதல் நடத்திய பின்பு நாம் வந்த வழியல் திரும்பாது வடக்காக இருந்த காட்டுப் பகுதிக்குள் புகுந்து ஒரு நாள் வரை அங்கு தங்கினோம். நாம் தாக்கிவிட்டுப் பின்தளத்துக்கு ஓடியிருப்போம் என்று புலிகள் நினைப்பார்கள் என்பதற்காக அப்படிச் செய்தோம். இத்தகைய தாக்குதல்களால் புலிகளின் முக்கிய தலைவர்களது நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த முடிந்தது.

**3ஆவது தாக்குதல்**

கேணல் லலித் ஜயசிங்கவுடன் எமது படையணி சென்ற இறுதிப் படை நடவடிக்கை அது என்று அப்போது நான் நினைக்கவில்லை. வருடத்தின் இறுதி மாதங்களில் மாவீரர் தினம் சார்ந்த நடவடிக்கைகளில் புலிகளின் தலைவர்கள் ஈடுபடுவதால் அதை வேவு பார்த்துத் தாக்குவது எமது அணியின் நோக்காக இருந்தது. இந்த நடவடிக்கைக்கு முன்னர் நான் விடுமுறையில் வீட்டில் நின்றபோது உடனடியாக வவுனியாவுக்கு வருமாறு லலித் சேர் எனக்கு அழைப்பெடுத்தார். தாக்குதல் நடந்த நாள் வரை கடுமையான மழை பெய்துகொண்டிருந்தது. முதலில் புலிகளின் வன் சீரோ லைனைக் கடந்தோம். பின்னர் 2008 நவ 23ஆம் நாள் மாங்குளம் – ஒட்டுசுட்டான் வீதியைச் சென்றடைந்தோம். இந்தத் தாக்குதலுக்காக நாம் 2008 நவ 14ஆம் நாள் புறப்பட்டிருந்தோம்.

நாம் புறப்பட்ட நாளில் இருந்து தொடர் மழை பெய்ததால் எமது கொம்பாஸ் (வழிகாட்டி) பொறுப்பாளர் சமரசிங்கவின் சப்பாத்துக்குள் மண், சேறு, தண்ணீர் எல்லாம் போய்க் கால்கள் புண்ணாகிவிட்டன. அவரால் நடக்க முடியவில்லை. 23ஆம் நாள் மாங்குளம் – ஒட்டுசுட்டான் வீதியைச் சென்றடைந்த போதிலும் புலிகளின் நடமாட்டத்தைக் கவனிப்பதற்காக ஒரு நாள் பாதைக்கு அருகில் பதுங்கினோம். எமது தாக்குதலுக்கான அமைவிடத்தை ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் பக்கமாக 5 கிலோ மீற்றர் தூரத்தில் (தேக்கம்காடு) லலித் சேர் அடையாளம் கண்டிருந்தார்.

**நாம் கிளைமோர் பொருத்திய இடத்தில் இருந்து மாங்குளம் பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் புலிகளின் ஒரு காவலரணும் ஒட்டு சுட்டான் பக்கமாக 300 மீற்றர் தூரத்தில் மற்றோர் காலரணும் இருந்தன. காலை 4.30 மணிக்கு அண்மை யாகக் கிளைமோர்க ளைப் பொருத்தி முடித் தோம்.**

தொடர்ச்சியாக மழை பெய்ததால் சப்பாத்துகளுடன் நடந்துசென்ற எமது கால்கள் புண்ணாகின. ஆனால், மழைச் சத்தத்தில் நாங்கள் இலகுவாக முன்னேற முடிந்தது. வெயில் காலத்தில் காட்டுக்குள் கிடக்கின்ற சருகுகளில் மிதித்தால் சத்தம் எழும். எதிரிகள் உசாரடைவர். அப்படிப் பார்க்கையில் மழை ஒருவகையில் சாதகமாகவும் இருந்தது. மறுநாள் லலித் சேரின் கால்களும் புண்ணாகிவிட்டன. அவர் தனது சப்பாத்தை ஒருதடவை கழற்றியபோது சப்பாத்து சொக்ஸுடன் தோலும் சேர்ந்து கழன்றது. இவை எதுவுமே அவரது நோக்கத்தைத் திசை திருப்புவதாக இருக்கவில்லை. அவர் திடமாக இருந்தார். எம்மையும் உற்சாகப்படுத்தினார்.

25ஆம் நாள் இரவு புலனாய்வுத் துறையினரின் தகவல்களின் அடிப்படையில் லலித் சேர் தீர்மானித்த இடம் எனக் குறிப்பிட்ட இடத்திற்கு 3 பெரிய கிளைமோர்களைக் கொண்டு சென்று பொருத்தினோம். நேரம் இரவு 2 மணியாகியிருந்தது. நாம் கிளைமோர் பொருத்திய இடத்தில் இருந்து மாங்குளம் பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் புலிகளின் ஒரு காவலரணும் ஒட்டுசுட்டான் பக்கமாக 300 மீற்றர் தூரத்தில் மற்றோர் காலரணும் இருந்தன. காலை 4.30 மணிக்கு அண்மையாகக் கிளைமோர்களைப் பொருத்தி முடித்தோம். இந்தக் கிளைமோர்களை 100 மீற்றர் தூரத்தில் இருந்து றீமோட் மூலம் வெடிக்க வைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

2008 நவம்பர் 26 அன்று காலை 7.30 மணியளவில் இலக்குக் கிடைத்ததால் கிளைமோரை வெடிக்க வைத்தோம். அது வெடித்துச் சற்று நேரத்தில் நாம் மிக வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது புலிகள் பலமாகத் துப்பாக்கிச் சூடுகளையும் கைக்குண்டுத் தாக்குதல்களையும் நடத்தினர். லலித் சேரின் காலில் குண்டடிபட்டது. அதிக குருதிப்பெருக்கு ஏற்பட்டது. அவரைத் தூக்கிக்கொண்டு ஓடினோம். பின்னர்தான் அவதானித்தோம் அவரது வயிற்றிலும் துப்பாக்கிச் சூடு பட்டிருந்ததை. சூடுபட்ட இடத்தில் கொழுப்பு அடைத்ததால் குருதி வெளியேறவில்லை. ஆனால் வயிற்றின் உட்புறமாக குருதி கசிந்ததால் வயிறு வீங்கிக் கொண்டிருந்தது.

நானும் லெப்டினன் ஜயரத்னவும் சேர்ந்து அவரைத்தூக்கிக்கொண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 மீற்றர் வரை ஓடி வந்த போது அவரது மூச்சு நின்று விட்டது. அவர் இறந்ததை எங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் இறந்தபோது அவரது மனைவி கர்ப்பவதியாக இருந்தார். எமது தலைமையகத்துடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த முடியதவாறு தொலைத் தொடர்புக் கருவிகளும் இயங்காதிருந்தன. கடும் மழையாக இருந்தபோதும் அவரது உடலை நனையவிடவில்லை. மழைக்கவசங்களால் மூடி வைத்தோம். அதேவேளை காட்டில் கடியெறும்பு சூழ்ந்துவிடாமலும் பாதுகாத்தோம். அவரது சடலத்துடன் 2 பேரை பாதுகாப்புக்கு விட்டு விட்டு நானும் சமரசிங்கவும் மகாகச்சிக்கொடி முகாமுக்குப் போகத் திட்டமிட்டோம். பின்னர் விஜயரத்னவும் சமரசிங்கவும் போனார்கள். எனது கால்களும் புண்ணாகிவிட்டதால் நடக்கமுடியவில்லை.

அவர்கள் அங்கிருந்து சென்று ஒரு மணி நேரத்தில் அவர்கள் சென்ற திசையில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. புலிகள் அவர்களை அடையாளம் கண்டு சுட்டிருக்க வாய்ப்புள்ளது என்று நினைத்தோம். அவர்கள் இறந்திருக்கலாம் என்ற முடிவுடன் 2 நாள்கள் லலித் சேரின் சடலத்துடன் கடும் மழையில் சாப்பாடும் இல்லாமல் காத்திருந்தோம். அவரது சடலத்தை அந்த இடத்தில் விட்டுவிட்டு வர மனம் வரவில்லை. அவர் எங்களுடன் பழகிய நினைவுகளுடன் அந்த இரண்டு நாள்களையும் காட்டில் கழித்தோம்.

2 நாள்களின் பின் எமது தொலைத் தொடர்புக் கருவியில் சத்தம் கேட்டது. பிரசன்ன என்ற அதிகாரி தொடர்பில் வந்தார். கப்டன் ரஞ்சித்தின் சிறப்புப் படையணி புலிகள் மீது தாக்கியது தான் 2 நாள்களுக்கு முன் நடந்த துப்பாக்கிச் சூடு என அறிய முடிந்தது. கப்டன் ரஞ்சித் நாங்கள் இருந்த பகுதிக்குள் உலங்கு வானூர்தியை இறக்குவதற்கு இடம் பார்க்குமாறு உத்தரவிட்டார் பகல் நேரத்தில் இறக்கினால் புலிகள் தாக்குவார்கள் என்பதால் இருட்டும் வரை காத்திருந்தோம். மாலை 6.30 மணியளவில் உலங்கு வானூர்தி இறக்கப்பட்டு லலித் சேரின் சடலத்துடன் நாமும் ஏறினோம். என்னால் நடக்க முடியாத அளவுக்குக் கால்கள் இருந்தன. ஏற்கனவே அங்கிருந்து சென்ற இருவரும் மகாகச்சிக்கொடி முகாமுக்குச் சென்றடைந்ததன் பின்னரே பிரசன்ன என்ற அதிகாரி எம்முடன் தொடர்பில் வந்தார் என்பது தெரியவந்தது.

## நம்மவூர்ச் சுத்துமாத்து



# பணியாற்றாமல் ஊதியம் பெறும் கில்லாடிகள்

அருட்செல்வன் - நல்லூர்

அரச அலுவலகங்களில் பணிபுரிபவர்களில் சிலர் கடமைநேரம் முழுதும் அங்கு நின்று பணியாற்றாமல் வேறு விடயங்களில் மும்முரமாக இருப்பதைக் காணலாம். அனேகமாக எல்லா அலுவலகங்களிலும் இவ்வாறான ஒருவராவது இருக்கவே செய்வார். இவர்கள் தமது அரச உத்தியேகத்தைவிட வருமானம் தருகின்ற வேறு வழிகளில் ஈடுபடுபவர்களாகவும் இருப்பார்கள். அத்தோடு அலுவலக நேரத்திலேயே தமது வருமான வழிகளையும் கவனித்துக் கொள்வார்கள். இவ்வாறு கடமை தவறுபவர்களைச் சுழியன், மண்டைக்காய் என்று பாராட்டிக் கூறும் அளவுக்கு எமது சமூகமும் பலவீனமாகவுள்ளது. அவனுடன் கொழுவினால் பிரச்சினை, அவனுக்குப் பஜாரில் அடிதடிக் காரர்களின் ஆதரவு இருக்கிறது எனக்கூறுவோரும் உளர்.

இவ்வாறானவர்கள் சுத்துமாத்துக்காரர்கள் அலுவலக நலன்புரிச் சங்கம், தொழிற் சங்கம், இன்னுமுள்ள வேறு அமைப்புகள் எனப் பலவற்றி லும் ஈடுபாட்டுடன் இருப்பர். அங்கு கூட்டத்துக்குப் போகவேண்டும், இங்கு இந்த அலுவல் உள்ளது என ஓடித்திரிவதுபோல காட்டித் தமது வர்த்தக முயற்சிகளையும் கவனித்துக் கொள்கின்றனர். தம்மை வெளியே காண்பவர்கள் இவர்கள் வெறும் வியாபாரிகள் என்று நினைக்காதிருப்பதற்காக அலுவலக ரீசேர்ட் ஒன்றைப் பெரும்பாலும் அணிந்தே திரிவர். தனது தேவைக்காக அலுவலக ரீசேர்ட்டை விரும்பும் இவர்கள் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கும் ரீசேர்ட் அவசியம் என்று கூறி இரண்டு ரீசேர்ட் தைப்பதற்கான பணத்தையும் உருவி விடுகின்றனர். அதில் வரும் லாபத்தில் குறைந்தது 5 ரீசேர்ட்டுகளையாவது தனக்குத் தைத்து எடுத்துக்கொள்கின்றனர்.

> கடமை தவறுபவர்களைச் சுழியன், மண்டைக்காய் என்று பாராட்டிக் கூறும் அளவுக்கு எமது சமூகமும் பலவீனமாகவுள்ளது

அதே ரீசேர்ட்டுடன் அலுவலக நேரத்தில் மீன் சந்தை, கோவில், பள்ளிக்கூடம் (பிள்ளைகளை ஏற்றவும், இறக்கவும்) என எல்லா இடங்களிலும் காட்சி தருகின்றனர். தமது அலுவலகத்தில் காலையில் ஒரு கையெழுத்து பின்னேரம் இன்னொரு கையெழுத்துப்போடுவது அல்லது இயந்திரத்துக்கு விரலைக் காட்டுவது மட்டுமே அவர்களது அரச பணியாக இருக்கிறது.

இவ்வாறான அலுவலர்கள் தமது அலுவலகத்தில் அலுவலக ஊழியர் (பியோன்) இருந்தால் அவருக்குப் பதிலாக அவர் செய்யும் வேலையைக்கூடத் தான் செய்வதாகக்கூறி அந்தச் சாட்டை வைத்து அலுவலகத்தை விட்டு வெளியே சென்றுவிடுகின்றனர். அரச உத்தியோகம் என்றால் வேலை செய்தாரோ இல்லையோ 60 வயது வரை காலத்தை ஓட்ட முடியும் என நம்புகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது சாதாரண மக்களே. குறித்த வேலைக்கு ஒருவரை நியமித்து அரசு மாதச் சம்பளம் வழங்கும்போதிலும் தமது கடமை யைச் செய்யாமல் தந்திரமாகத் தப்பிவிடுவோர் களாக இவர்கள் இருப்பதனால் பொதுமக்களுக் கான காரியங்கள் நடப்பதில்லை. கேட்டால், அந்தக் காரியத்தை ஆற்றுவதற்குப் பொறுப்பான அலுவலர் பணி நிமித்தம் வெளியே சென்றிருக்கிறார் எப்போது வருவாரோ தெரியாது என்று பதில் கிடைக்கும். ஆனால் அந்த அலுவலரோ தன் சொந்தத் தேவைகளின் பொருட்டு வெளியே சுற்றிக்கொண்டிருப்பார். இது அரசையும் மக்களையும் ஏமாற்றுவதாகும்.

இவ்வாறான சுத்துமாத்துக்காரர்களை அந்த அலுவலகத்துக்குப் புதிதாக வரும் உயர் அதிகாரிகள் கண்டிக்க முற்பட்டால் அந்தப் புதியவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம், ஊடகங்களில் அவரைப் பற்றிப் பிழையான செய்திகளை வெளியிடுவது எனப் பல குழறுபடிகளை இவர்கள் செய்கின்றனர். நேர்மையான அதிகாரிகள் சிலர் அவ்வாறானவர்களைப் பணி நீக்கம் செய்துள்ளார்கள். இவ்வாறானவர்களைப் பணி நீக்கம் செய்வதால் அந்த அலுவலகத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அதற்கு முன்னர் அவர் பணியாற்றியதாக இல்லை என்பதால்தான் அந்த நிலமை.

பல பாடசாலை ஆசிரியர்கள்கூடப் பிள்ளை களுக்குப் படிப்பிக்காமல் பாடசாலை நேரத்தில் தமது சொந்த அலுவல்களில் ஈடுபடுவது மிகச் சாதாரணமாக நடக்கிறது. இவ்வாறானவர்கள் அரசி யல் கட்சிகளையும் தம்வசம் வைத்திருப்பார்கள். இவ்வாறானவர்கள் தாம் சார்ந்திருக்கும் நிறுவனத் துக்கு எப்போதும் கெட்ட பெயரையே வாங்கிக் கொடுக்கின்றனர். இத்தகையவர்களின் செயற்பாடு எமது சமூகத்தில் காணப்படுகின்ற கௌரவமான சுத்துமாத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய இன்பம்: அந்தரங்கங்களைக் கடந்த பயணம்

ஜெமினிறோய்

கேட்கும்போதே பலரும் அருவருக்கும் சொல் இது. ஆனால், இதனைச் சாதாரணமாக அணுகுபவர்களும் இருக்கிறார்கள். அருவருப்பாக அணுகுபவர்களுக்கு இந்தச் சொல்லை உச்சரிப்பதும் அருவருப்புத்தான். பொதுவெளியில் அருவருக்கும் பலரும் அதற்கெல்லாம் நேர் எதிராகத் திரைமறைவில் சுயஇன்பம் காண்பவர்களாக இருக்கிறார்கள் என்கிற கூற்றும் உண்டு. பொதுவாக இதன்பால் ஈர்க்கப்பட்டிருப்பவர்கள் பலர் என்கிறார்கள்.

சுயஇன்பம் காண்பது தவறானதா இல்லையா? அதற்கப்பால் அது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்குமா இல்லையா? என்கிற வாதங்கள் எப்போதுமே நாகரிகமடைந்த மனிதர்கள் மத்தியில் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. சுயஇன்பம் என்ற சொல்லை உச்சரித்தாலே அருவருக்கும் மனநிலையிலும் வெட்கம் பூக்கும் மனநிலையிலும் இருக்கின்ற எம்மவர்கள் மத்தியிலும் இந்த வாதப்பிரதிவாதங்கள் எழாமலில்லை.

மேற்கு நாட்டவர்கள் மத்தியில் அதிலும் குறிப்பாக ஐரோப்பியர்கள் மத்தியில் இது ஒரு சாதாரண விடயமாக – வாழ்க்கை யதார்த்தமாக கடந்து போய்க்கொண்டிருக்கிறது. இது பற்றி அவர்கள் அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. அவர்கள் பாலியல் (செக்ஸ்) பற்றியே அதிகம் மூடிமறைப்பவர்கள் இல்லை என்பது வேறு விடயம் என்றாலும் சுயஇன்பத்திலும் அவர்கள் பலபடிகளையும் தாண்டி இருக்கிறார்கள். அவர்கள் தாண்டிய படிகள் என்னவென்றும் கீழே பார்ப்போம்.


### மற்றவர்களைப் பாதிக்காத இன்பம்

இன்பம் அனுபவிப்பதையே மனிதர்கள் வாழ்வாக நினைக்கிறார்கள். வாழ்வே இன்பம் கொள்வதற்கானதுதான் என்று சொல்வோரும் உண்டு. ஞானிகள் இதனைச் சிற்றின்பம் என்பார்கள். ஆனாலும் அவர்கள் பேரின்பத்தைத் தேடி அலைவார்கள். ஒவ்வொருவரும் இந்த இன்பங்களைப் பல வடிவங்க ளில் பல விதங்களில் அனுபவிக்கவும் செய்கிறார்கள்.

மனிதர்களின் வயதுக்கும், வாழ்க்கைப் பருவங்களுக்கும் ஏற்ப இந்த இன்பங்கள் வேறுபடுகின்றன. ஆசை என்கிற தேவையைப் பூர்த்தி செய்யும்போது அவரவருக்கு இந்த இன்பம் கிட்டுகிறது. உச்சக்கட்டமாக இன்பத்தை அனுபவித்து அது திகட்டும் நிலைக்கு செல்லும்போதும், இன்பத்தை உணர்ந்து அதைக் கடந்து செல்பவர்களும் இருக்கிறார்கள். அவ்வாறில்லாமல் இன்பத்துக்கு அடிமையாகி அதனுடன் கிடந்து உழல்பவர்களும் இருக்கிறார்கள்.

இந்த இன்பங்கள் முதலிலேயே சொன்னது போல பல வகைகளில் இருக்கின்றன. ஆனால், ஆசைகளின் முதலீட்டால் பிறக்கின்ற இந்த இன்பங்களால் சக மனிதர்களுக்கும் பாதிப்புகள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. உதாரணமாக மது அருந்துவது ஆண்கள் பலருக்கும் விருப்பாக இருக்கிறது. மது அருந்துவதன் மூலம் ஏற்படுகின்ற கிளர்ச்சிமிக்க உடல், மன நிலைகளை அனுபவிக்கும்போது அவர்களால் ஏனைய மனிதர்களுக்கு இடைஞ்சல்கள் மற்றும் தீங்குகள் ஏற்படுவதும் நடக்கிறது. இதைப்போலவே வீடு, கட்டம், காணி என்கிற ஆசைகள் எழுந்து அவற்றைப் பூர்த்தி செய்து இன்பம் காண்பவர்களும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சில ஆசைகளைப் பூர்த்தி செய்வதை வாழ்க்கையின் முன்னேற்றம் என்று கூறும் இந்தச் சமூகம் சிலவற்றை பிற்போக்கு, மோசமான செயல், பாவச் செயல், செய்யக் கூடாதவைகள் என்று வரையறுத்துத் தரம் பிரித்துவிடுகின்றது. சமூகம் அங்கீகரித்த விடயங்களில் முன்னேற்றம் கண்டவர்களுக்கும் அப்படிக் காணாதவர்களுக்கும் இடையில் விரிசல்கள் சச்சரவுகள் எழுகின்றன. தனக்குள்ள வசதி வாய்ப்பைத் தொடர்ந்து



தக்க வைத்து வாழ வேண்டிய நிலை அதை அடைந்தவர்களுக்கு இருக்கிறது. அதை எப்படியாவது அடைந்து விடவேண்டும் என்கிற துடிப்பு அது இல்லாதவர்களிடம் இருக்கிறது. இதில் எந்தவொரு தரப்பையும் ஏற்றுக் கொண்டு அங்கீகரிக்கும் எமது சமூகம் பாலியல் என்று வருகின்றபோது மட்டும் இறுக்கமான மூடிய எண்ணங்களுடனும் செயல்களுடனுமே அணுகுகின்றது.

இளமைப் பருவத்தில் ஆண், பெண்களுக்கு ஏற்படுகின்ற எதிர்ப்பாலின உடல் மீதான நாட்டமும் அதன் மூலம் கிடைக்கின்ற இன்பமும் கூட எம் சமூகத்தில் அனுபவிக்கப்பட முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. ஒரு ஆணோ பெண்ணோ தனது பதின்ம வயதிற்குள் நுழைந்ததுமே அவர்களுக்குப் பாலியல் நாட்டம் உருவாகத் தொடங்கி விடுகின்றது. ஆனால், அந்த வயதில் பாலியல் அனுபவிக்கப்படக்கூடாத ஒரு பாவச் செயல் என்கிறது எம் சமூகம். அப்படியானால் அவர்களின் பாலியல் நாட்டத்தைத் தீர்ப்பதற்கு என்ன வழி?

திருமணமான பெண்ணுக்கோ, ஆணுக்கோகூடத் தமது பாலியல் உறவில் திருப்தியின்மை இருக்கலாம். இதில் ஏதாவது ஒரு தரப்புக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டமின்மை எழலாம், சலிப்பு ஏற்படலாம், ஏன் அதீத ஆசைகூட எழலாம். அதீத பாலியல் நாட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத துணையோ கூட்டோ இருக்கவும் வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட நிலையில் பிரிவும் மணமுறிவும் தான் ஒரே வழியா? பிரிந்துவிட்டால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? அடுத்த இணை ஒன்றைத் தேடிக்கொண்டால்கூட அதுவும் ஒருவரின் தேவைக்கு மற்றவர் ஈடுகொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்?

இவ்வாறாக எத்தனை வகையில் மனிதர்கள் இன்பம் அனுபவிக்க விளைந்தாலும் அது ஒருவருக்கு மேற்பட்டவர்களை உள்ளீர்ப்பதால் - சார்ந்திருப்பதால் அதில் யாரோ ஒருவர் எங்கோ ஏதோ விதத்தில் அதனால் பாதிப்புக்கோ விருப்பமின்மைக்கோ முகம் கொடுக்கவே செய்வார்கள். ஆனால், இவை எல்லாவற்றையும் தாண்டித் தமக்கான இன்பத்தைத் தமது உடலில் இருந்து தாமே ஏற்படுத்திக்கொள்பவர்கள் மற்றவர்களுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாதவர்களாக இருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல், சுயமாக இன்பம் காண்பவர்கள் சிறந்த மனிதர்கள் இல்லையா?

### சுய இன்பத்தின் வளர்ச்சி

இப்போது –தற்காலத்தில் கூட நம்மவர்கள் பேசுவதற்குக் கூச்சப்படும் விடயமாக இருக்கின்ற சுய இன்பம் என்பது மிகப் பழங்காலத்தில் எவ்வாறு பரவியிருந்தது என்பதற்கான ஆதாரங்களோ, ஆராய்ச்சி முடிவுகளோ இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சிம்பன்சி குரங்குகளிலும் சுய இன்பம் அனுபவிக்கும் பழக்கம் இருக்கின்றது என்பதை ஆய்வாளர்கள் நிரூபித்திருக்கிறார்கள். தமிழர்கள் மத்தியில் காமசூத்திரத்தில் இதற்கான சில அடிப்படைகள் தென்பட்டாலும் அதற்குப் பிற்பட்ட காலத்தில் அது பேசப்படக்கூடாத பாவச் செயலாக முத்திரை குத்தப்பட்டது. அண்மைக் காலங்களில் இதில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பதின்ம, இளவயதுத் தலைமுறைகள் மத்தியில் சுய இன்பம் பற்றிய பேச்சுக்கள் சாதாரணமாக நிகழத் தொடங்கியிருக்கின்றன. அவர்கள் அதனைச் சாதாரணமாகக் கடந்து செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். சுய இன்பதைக் குறிக்கும் சில சொல்லாடல்கள்கூட அவர்கள் மத்தியில் இருக்கின்றன.

தமது உடலின் மென்மையான பகுதியும், உணர்ச்சிமிகு பகுதியுமான ஆண், பெண் குறிகளைத் தமது கைகளால் தடவியும், தீண்டியும், உரசியும் எனப் பல்வேறு முறைகளில் உணர்ச்சியைத் தூண்டும் செயற்பாட்டினையே சுய இன்பம் என்கிறோம். இந்தக் கைச்செயற்பாட்டின் காரணமாகத்தான் இளவயதினர் மத்தியில் "தன் கையே தனக்கு தவி" என்கிற சூசகச் சொல்லாடலும் புழக்கத்தில் இருக்கிறது. இதுபோல வேறுபல சொல்லாடல்களால் இதைக் குறிப்பிடவும் செய்கிறார்கள்.

தற்காலத்தில் சுய இன்பம் காண்பதில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சுயஇன்பம் கொள்வதற்குக் கைகளைப் பயன்படுத்துவதைத் தாண்டி ஆண், பெண் உறுப்புகளை ஒத்த வடிவில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்தும் பழக்கமும் அதிகரித்து வருகின்றது. பாலுறவு காட்சிகளைக் கொண்ட இணையங்களின் வளர்ச்சியும் பாலியல் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் பெருகி விட்டமையும் சுய இன்பத்துக்கான பொருட்களின் பாவனையை அதிகரித்து வருகின்றன. இவற்றைப் பெருமெடுப்பில் தயாரிக்கும் பெருநிறுவனங்கள்கூட வளர்ந்திருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. கூடவே படுத்துறங்கும் ஆண், பெண் பொம்மை களுடன் வாழ்பவர்களும் இருக்கிறார்கள். இவ்வாறா கச் சுயஇன்பம் இந்த உல கில் அடுத்த கட்டத்தை அடைந்துவிட்டது. நாம் இன் னும் அந்தச் சொல்லைப் பகிரங்கமாக உச்சரிக்கவே அஞ்சி நடுங்கிகொண்டே நகர்கின்றோம்.



சுய இன்பமும் உடல் ஆரோக்கியமும்

சுயஇன்பம் என்று உச்ச ரித்தாலே அது ஆண்களின் பழக்கம் என்கிற தோற்றம் வந்துவிடுவதாகவே தமிழ்ச் சமூக நிலை இருக்கிறது. சுய இன்பம் என்பது ஆண் - பெண் என்ற பேதங்க ளைத் தாண்டியது. இவ் விரு பாலரும் இதற்குட்பட்ட வர்களே. சமூகத்தில் அதி கம் பேசப்படாமலும், பெண் களின் வட்டத்தில் அதை விட அதிகம் பேசப்படாம லும் இருந்தாலும் இது நிகழாமைக்கான ஆதா ரங்கள் இல்லை. இதற்குப் பெண்கள் விதிவிலக்கு மல்லர்.

அதுபோக சுய இன்பம் காண்பதால் உடலுக்குச் சக்தி இழப்பு, ஆரோக்கி யக்கேடு உட்பட்ட பாதகங் கள் நிகழும் என்று உறுதி செய்யப்படவில்லை என்கி றார்கள் மருத்துவத் தரப்பி னர். அதற்காக அனைவ ரும் அனைத்து நேரமும் சுய இன்பத்தில் ஈடுபடுவ தும் நல்லதல்ல. அளவுக்கு மீறினால் அனைத்துமே தீங்குதான். மருத்துவத் தரப்பினர் இதனால் உட லுக்குக் கேடு இல்லை என்றாலும் பழங்காலத்தில் இருந்து இது ஆண்களின் பலத்தை, உடல் வலி மையை இழக்கச் செய்யும் என்று கருதப்பட்டு வருகி றது. அதிலும் குறிப்பாகப் படைவீரர்களாக இருக்கும் ஆண் மக்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்று கிரேக்க, எகிப் திய பழங்காலப் புனைகதை கள் வலியுறுத்துகின்றன.

எது எப்படியிருப்பினும் சுய இன்பம் பற்றிய இன்னும் ஏராளம் மர்மங்களும் மறை பொருள்களும் அறியப்பட வேண்டியவையாகவே உள்ளன. அதுபற்றிய பேச்சுகளும் ஆய்வுகளும் தேடல்களும் அதிகரிக்கப் படவேண்டியதும் காலத்தின் தேவை. மனிதர்கள் அதை மறைத்து வைக்கமுடியாது.

# கவிதை எனும் தேனாறு –21

வேலணையூர்–தாஸ்

டிலோஜினி மோசேஸ் எழுதிய "விண்ணதிர் பரணி" என்ற கவிதை நூல் கடந்த செவ்வாய்க் கிழமை பி.ப. இரண்டு மணிக்கு (7.12.2021) திருமறைக்கலா மன்றக் கலைத்தூது கலையக அரங்கில் வெளியீடு செய்யப்பட்டது

சட்டத்துறை மாணவியாக இருக்கிற டிலோஜினி மோசேஸ் இன் கவிதைகள் சிறந்த மொழியாற்றலுடன் சமூகம் சார்ந்து பல விடயங்களைக் கூர்மையாக முன்வைக்கின்றன.

அரசியல், மத, இன, சமூக அடக்குமுறைகளுக்கெதிராகக் குரல் உயர்த்தும் இவரது கவிதைகள்



நாளைய விடுதலை குறித்த நம்பிக்கையைப் பேசுகின்றன.

இருப்பினும் இத்தொகுதியில் இன்னும் கொஞ்சம் நன்றாக வந்திருக்கலாம் என நினைக்கின்ற கவிதைகளும் இருக்கின்றன. காலமும் வசிப்பும் இவரை ஈழத்தில் சிறந்த கவிஞராக அடையாளப்படுத்தும் என்று நிச்சயமாக நம்பலாம்.

வாழ்த்துக்கள்.

விண்ணதிர் பரணியை யாழ் பல்கலைக்கழகத்திற்கருகில் உள்ள "புத்தகக் கூடத்தில்". (Book lab ) பெற்றுகொள்ளலாம். இவர் தொடர்ச்சி யாக சமூக வலைத் தளங்களிலும் கவிதை தொடர்பில் இயங்கி வருகிறார். இவரது முகநூலில் இவரால் எழுதப்பட்டுள்ள இரண்டு கவிதைகள், குடும்பமாய் வாழ்தலில் பெண்ணுக்குரிய சுதந்திரம் ஆதரவு சரியாக வழங்கப்படுகிறபோது வாழ்வு இனிக்கிறது, அது மறுக்கப்படுகிற போது வாழ்வு சலிப்புக்குரியதாகவும் வெறுப்புக்குரியதாகவும் மாறிவிடுகிறது என்ற பெண்ணிலை சார்ந்த வாழ்வியல் உண்மையை அழகாகப் பேசு கிறது.

1

சூடாயிருத்தலில்
சலிப்பில்லை மேகா
சிறகு விரித்து
விடைபெறும் பறவை
எப்போதெனினும்
திரும்பி வந்தமர
இடமருளும் கிளையாய்,
போகையில்
சுதந்திரமும்
திரும்புதலில்
ஆறுதலும் தந்து
வீடாயிருத்தலில் தான்
பிரிதலை தொடர்ந்து
திரும்புதல்கள் சாத்தியம்
வழித்துணைக்கு
கொஞ்சம் தண்ணீர் தந்தனுப்பவும்
வலிகளில் கொஞ்சம்
ஒத்தடமிடவும்
அசதியில் தூங்க
மெல்லிய மடியும்
தருகிற அன்புக்கு
வேர் காய்வதில்லை
துளிர்த்து , செழித்து
பூத்த படியிருக்கும்
வீடாய், கூடாய்
கிளையாய் இரு
வேர் உள்ள வரை
விருட்சங்கள் எதுவும்
இறப்பதில்லை மேகா

---

2

இதோ
ஆண்டுகள் தாண்டி
வானத்தை காட்டி
பறப்பதற்கு
அனுமதித்தாய்சி
றகுகள்
நீ பிய்த்து
விளையாடவும்
வெட்டிப்போடவுமென்றே
நம்பத்தொடங்கிய பின்
பறக்கும் கலையை
மறந்தே விட்டேன்
இணைக்கும்
எனக்குமான
இடைவெளியை
நிரப்பி விட்ட
தூரத்தையெல்லாம்
மொழிபெயர்த்தெழுதிய
காதல் கவிதையிலோ
மௌனத்தின் வாடை
அதோ
என் குஞ்சுகளுக்கோ
நானோர்
பெருந்துயரின் சாட்சி
அவர்களின் வானத்தில்
அந்நிய நிலவு நான்
பறக்கவும் நடக்கவும்
பாடவும் தெரிந்தாலும்
என் சாயலில்லா
சோகம்!!!
எந்தக்குயில்களுக்காய்
அடைக்கப்பட்டேனோ
அவைகளினுலகிலும்
நான்
அரசியல் அழுக்கேறிய
சிறையோரப் பறவை
உங்கள்
கூடுகளை போலவே
புழுக்கமாயிருக்கிறது
என்னை
கைதியாக்கிய
உலகத்தின்
தெருக்களும்

## யாழ். குடாநாட்டில்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகளோ காவல்துறையினரோ ஈடுபடு வதாகத் தெரியவில்லை. மாட்டை இன்னார்தான் களவெடுத்தார் எனக் காவல்துறையில் சென்று முறைப்பாடு செய்தால் அத்தத் தகவல் கள்வருக்கு எட்டிவிடுகிறது. இதனால் குறிப்பிட்ட விவசாயி தேவையற்ற அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படுகிறது.

விவசாயி ஒருவர் அன்பாக வளர்த்த கன்றுத்தாச்சி மாட்டைக் கடத்திச் சென்று வயிற்றிலிருந்த கன்றை வெட்டி எறிந்துவிட்டு இறைச்சியை எடுத்துச் சென்ற சம்பவங்கள் கூட இடம்பெற்றன.

**விரத நாள்களில் இறைச்சிப் பாவனை**

யாழ்ப்பாணத்திலும் அதைச் சுற்றிய நகரங்களிலும் உள்ள முஸ்லிம் கடைகளில் வெள்ளி, செய்வாய், மற்றும் இந்துக்களின் விரத நாள்களில் வழமையை விட அதிகமான மாட்டிறைச்சியும் கோழியிறைச்சியும் பயன்படுத்தப்படுகின்றன. வீட்டில் சைவச் சாப்பாடு என்றால் கடைச் சாப்பாடுகளில் அர்வம் காட்டும் மக்கள் அதிகரித்திருக்கிறார்கள். இத்தகைய சமூக மாற்றமே தோட்டங்களில் வளர்க்கப்படும் பசு மாடு களை இல்லாது செய்திருக்கிறது. இவ்விறைச்சி களைத் தமிழ் மக்களே அதிகம் உண்கின்றனர் என் பதும் அதிர்ச்சியான செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன்: சவாலா சாந்தமா?

ஆபிரிக்க நாடுகளில் பரவத் தொடங்கிய கொரோனாவின் புதிய திரிபான ஒமிக்ரோன் தொடக்கத்தில் அச்சத்தை ஊட்டியது எனினும் தற்போது அது குறித்த தகவல்களை ஆய்வாளர்கள் வெளியிடத் தொடங்கியுள்ளனர். இலங்கையிலும் ஒமிக்ரோன் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்ட நிலையில் அதன் சமூகப் பரவல் எப்படியிருக்கின்று என்பது இன்னும் சில தினங்களில் தெரியவரும்.

இந்த நிலையில் உலகம் முழுவதுமுள்ள ஆய்வாளர்கள் இப்போது ஒமிக்ரோன் குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

பெருந்தொற்றின் தொடக்கத்திற்கே மீண்டும் நம்மை அழைத்துச் செல்ல ஒமிக்ரான் வரவில்லை. ஆனால், தற்போது ஒரு குழப்பமான சூழலுக்கு ஒமிக்ரான் வித்திடுகிறது. ஒமிக்ரான் குறித்த உறுதியான பதில்கள் கிடைக்க இன்னும் சில வாரங்கள் ஆகலாம்.

**ஒமிக்ரான், எவ்வளவு வேகமாகப் பரவு கிறது?**

ஒமிக்ரான் மிகவும் வேகமாகவே பரவுவதாகத் தெரிகிறது.

பெரும்பாலானவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்ட அல்லது முந்தைய பெரிய அலையின் காரணமாக, நோய் எதிர்ப்பாற்றல் அதிகமாகியுள்ள இடங்களிலும்கூட, இது பாதிக்கிறது.

தென்னாப்பிரிக்கா அதன் டெல்டா அலையின் முடிவை ஒரு மாதத்திற்கு முன்னர்தான் அடைந்தது. நாளொன்றுக்குச் சராசரியாக 300 கொரோனா நோயாளிகள் என்ற அளவுக்கு பாதிப்பின் தீவிரம் குறைந்தது. ஆனால், தற்போது அதுவே, நாளொன்றுக்கு 10,000 ஆக அதிகரித்துள்ளது. என்றால் ஒமிக்ரோனின் பரவுகளை வீதம் மிக மிக அதிகம். ஒமிக்ரோன் நான்காவது அலையை உண்டாக்கக்கூடிய உந்து சக்தியாக இருக்கிறது.

**கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களை ஒமிக்ரான் மீண்டும் தாக்குமா?**

**50 பிறழ்வுகளைக் கொண்ட ஒமிக்ரான் திரிபுக்கு எதிராக தடுப்பூசிகள் வேலை செய்யுமா?**

ஆராய்ச்சியாளர்கள், ஒமிக்ரோனுக்கான கொவிட் சோதனை களில் விட்டுச் செல்லும் அசாதாரண தடங்களின் வழியே கண்காணித்தார்கள். இது எஸ்–ஜீன் டிராப் அவுட் (S–gene dropout) என அழைக்கப்படுகிறது. கடந்த நவம்பரின் பிற்பகுதியில் கிடைத்த பரிசோதனை முடிவுகளில், 0.1 விழுக்காடு மட்டுமே இந்தத் தடம் இருந்தது. ஆனால், இப்போது 5 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்கிறது. இது ஒரு நாளைக்குச் சுமார் 2,500 பேர் நோய்த் தொற்றுகளை ஏற்படுத்தலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஒமிக்ரோனின் பரவல் வேகத்தை அளவிடுவதில், அதன் மாறுபாட்ட புள்ளிவிவரங்களைக் கண்டறிய, இது துல்லியமான வழியில்லை. ஆனால், நச்சுயிரி மாதிரிகளின் முழு மரபணு பகுப்பாய்வுக்காக காத்திருக்காமல் விரைவான மதிப்பீட்டை உருவாக்க இது உதவுகிறது.

ஒமிக்ரோன் பரவல், இன்னமும் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளதால், ஒமிக்ரோன் பாதிப்புகள் பிரிட்டனில் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் இரண்டு மடங்காக இருக்கலாம் என்று அந்த தொடக்கக்கட்டக் கணப்பீடுகள் கூறுகின்றன.

இது இங்கிலாந்திலுள்ள டெல்டா திரிபைவிட வேகமானது. 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கோவிட்டுக்கு எதிராக நமக்கு நோய் எதிர்ப்பாற்றல் இல்லாதபோது வேகமாகப் பரவிய அசல் கொரோனா நச்சுயிரியோடு இதை ஒப்பிடலாம்.

நச்சுயிரியால் பாதிக்கப்படுவதற்கும் அதை வேறு ஒருவருக்குப் பரப்புவதற்கும் இடையில் மிகவும் குறுகிய இடைவெளி இருக்கலாம். அதிவேக வளர்ச்சி ஆற்றலின் காரணமாக, சிறிய எண்ணிக்கை விரைவில் பெரியளவில் பெருகும். ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும்போது, மாத இறுதிக்குள் ஒரு நாளைக்குச் சுமார் 2,500 நோயாளிகள் என்பது 10,000ஐத் தாண்டும்.

**என்னையும் ஒமிக்ரான் தாக்குமா? நோய்வாய்ப்படுவேனா?**

ஆய்வாளர்கள், முதன் முதலில் ஒமிக்ரானிலுள்ள மரபணுப் பிறழ்வுகளின் பட்டியலைப் பார்த்ததிலிருந்து இருக்கும் கவலை என்னவெனில், அது தடுப்பூசிகளின் செயல்திறனைக் குறைக்கிறது. தடுப்பூசிகளை உருவாக்கப் பயன்படுத்திய அசல் கொரோனா நச்சுயிரிடமிருந்து இது மிகவும் வேறுபட்டுள்ளது, என்று கண்டறிந்தனர்.

நோய் எதிர்ப்பொருட்களைப் பயன்படுத்தும் சோதனையிலிருந்து நம்முடைய நோய் எதிர்ப்பாற்றல் எவ்வாறு நிலைத்து நிற்கும் என்பது பற்றிய முதல்கட்ட தரவு இப்போது உள்ளது. இவை கொரோனா நச்சுயிரியின் மேற்பரப்பில் ஒட்டிக் கொள்கின்றன. அப்படி ஒட்டிக்கொண்டு அணுக்களை அது பாதிக்காமல் தடுக்கிறது. இரண்டு முறை தடுப்பூசி போட்டவர்களின் உடலிலுள்ள நோய் எதிர்ப்பொருட்கள், நச்சுயிரியின் திறனை 20 முதல் 40 மடங்கு குறைப்பதாக இதுவரையிலான ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன.

ஆய்வுக்கூடத்தில் நடைபெறும் ஆய்வுகளின் முடிவுகள் நடைமுறையில் எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது. ஆனால், குறைவான பாதுகாப்பையே நல்கும் நோய் எதிர்ப்பொருட்களால், ஒமிக்ரான் அதிகம் பரவும் ஆபத்தும் ஏற்பட்டது.

இந்த நேரத்தில்தான், ஒரு நற்செய்தி வந்தது. ஃபைசர்–பயோஎன்டெக் தடுப்பூசியின் பரிசோதனைகளின் மூலம், மூன்றாவது டோஸ் நோய் எதிர்ப்பொருட்களின் அளவைப் பெருமளவில் அதிகரிப்பதைக் காட்டுகிறது. முந்தைய கொவிட் நச்சுயிரிக்கு எதிராக முந்தைய இரண்டு டோஸ்களும் செய்ததைப் போலவே, ஒமிக்ரானுக்கு எதிராக மூன்றாவது டோஸ் செய்யும் என்று பரிசோதனை முடிவுகள் பரிந்துரைக்கின்றன.


எடின்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா.எலினோர் ரிலே, "இதுவரையிலான தரவுகள் உறுதியளிக்கிறது. பூஸ்டர் போட்டுக் கொள்வது கடுமையான நோய்த்தொற்றுக்கு எதிராக அதிகளவிலான பாதுகாப்பை வழங்கவேண்டும் என்று பரிசோதனை முடிவுகள் அறிவுறுத்துகின்றன," என்று விவரிக்கிறார்.


ஒமிக்ரான் தொற்று எவ்வளவு கடுமையானது என்பது குறித்து இன்னும் தெளிவான பதில்கள் இல்லை.

ஒமிக்ரான் திரிபு சில நோயெதிர்ப்புகளைக் கடந்து மனிதர்களை பாதிக்கலாம் என தென்னாப்பிரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள முதற்கட்ட தரவுகள் கூறுகின்றன. ஆனால், ஒருவர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் போட்டிருந்தாலோ அல்லது கடந்த காலத்தில் தொற்று ஏற்பட்டிருந்தாலோகூட, இந்தத் தொற்றின் தொடக்கத்தில் அதை எதிர்த்துப் போராடிய உங்கள் நோய் எதிர்ப்பாற்றல் அமைப்பு இன்னும் சிறந்த நிலையிலிருக்கும்.

நோய் எதிர்ப்பொருட்கள் உடல் பாதுகாப்பின் முக்கியப் பகுதியாக விளங்குகிறது. மேலும், அவை பூஸ்டர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அவரை பரந்த, சிக்கலான நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஒரேயொரு கூறு மட்டும்தான்.

ஒருவர் தொற்றுக்கு ஆளான பிறகு, நோய் எதிர்ப்பொருட்களைவிட, டி–செல்கள் நச்சுயிரியை அதிகம் (தொடர்ச்சி 23ஆம் பக்கம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செ.கணேசலிங்கன்: ஈழத் தமிழ் இலக்கிய முன்னோடி

ஈழத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக நாவல் உலகில் புதிய பாதையை வகுத்த முன்னோடியான செ.கணேசலிங்கன் கடந்த சனிக்கிழமையன்று (04.12.2021) மறைந்தார். அவருக்கு வயது 93. இலங்கையின் 'தினகரன்' நாளிதழில் 1950இல் தனது முதல் சிறுகதையை எழுதிய அவர், தான் பிறந்து வளர்ந்த இலங்கையின் சமூக அவலங்களைத் தனது எழுத்துகளின் மூலம் பல்வேறு பரிமாணங்களில் தோலுரித்துக் காட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் கிராமத்தில் 1928 பங்குனி 9 அன்று பிறந்த செ.கணேசலிங்கன் அரசுப் பணியாற்றி 1981இல் ஓய்வு பெற்றார். 1950களில் தொடங்கி, மறையும் வரை தொடர்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட்ட அவரது எழுத்து, இலங்கை தமிழ்ச் சமூகத்து இளைஞர்களிடையே மட்டுமின்றி, 1970களில் தொடங்கி, தமிழகத்திலும் பரவலாக வாசிக்கப்பட்டது. படைப்பிலக்கியத்தில் மட்டுமின்றி சமயம், சமூகவியல், பெண்ணியம், கலை, திறனாய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பெருமளவு பாரதூரமானவையாக அவரது எழுத்துகள் திகழ்ந்தன.

தொடக்கத்தில் காந்தியவாதியாக இருந்த கணேசலிங்கன், 'மகாத்மா காங்கிரஸ்' என்ற அமைப்பின் செயலாளராக, யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிவந்த தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகத் தீவிரமாகப் பணியாற்றியவர். 1948–49இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த நேரத்தில், முன்னோடி கம்யூனிஸ்ட் ஆன ப.ஜீவானந்தம் கோடியக்கரை வழியாக யாழ்ப்பாணம் சென்றபோது, கணேசலிங்கன் அவரைத் தனது சொந்தக் கிராமமான உரும்பிராய்க்கு அழைத்துச் சென்று நடத்திய கூட்டத்தில் தீண்டாமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை ஜீவா வலியுறுத்திப் பேசினார்.

இத்தகைய தொடர்புகளும் பின்னாளில் ஏற்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களுள் ஒருவரான கார்த்திகேயனின் தொடர்பும் செ.க.வை மார்க்சிய சிந்தனைப் போக்கை நோக்கி இழுத்தன. அத்தத்துவத்தை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கற்றறிந்த அவர், தனது தொடர்ச்சியான, எளிமையான எழுத்துகளின் மூலம் மக்களிடையேயும் எடுத்துச் சென்றார். இவ்வகையில் அவர் எழுதிய 'குந்தவிக்குக் கடிதங்கள்', 'குமரனுக்குக் கடிதங்கள்', 'மான்விழிக்குக் கடிதங்கள்' என்ற மூன்று நூல்களும் ஒரு தந்தையாகத் தனது குழந்தைகளுக்கு மனித சமூகத்தின் வரலாற்றை மார்க்சிய சிந்தனைப் போக்கில் எடுத்துக் கூறும் நூல்களாகத் திகழ்கின்றன.

மலையகப் பகுதியில் தேயிலை–கோப்பித் தோட்டங்களில் அதிகாரிகளாலும் துரைமார்களாலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட கடுமையான சுரண்டலைத் தனது எழுத்துகளில் பதிவுசெய்ததோடு, இந்த கொடுமைகளுக்கு எதிராக சாதி, மத, இன பேதங்களைக் கடந்து, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஓரணியில் திரண்டு போராட வேண்டியதன் அவசியத்தையும் தனது எழுத்தில் வலியுறுத்திய தனிச்சிறப்புப் பெற்றவராகவும் திகழ்ந்தார். அவரது முதல் நாவலான 'நீண்ட பயணம்' (1965), அதையடுத்து 'சடங்கு' (1966), 'செவ்வானம்' (1967) ஆகிய மூன்றுமே யாழ்ப்பாணத்தைக் கதைக் களமாகக் கொண்டு, அதன் சமூக மாற்றத்தைச் சித்தரிப்பவையாக இருந்தன. 'நீண்ட பயணம்' நாவலுக்கு இலங்கை அரசு 1966ஆம் ஆண்டிற்கான சாகித்ய மண்டலப் பரிசை வழங்கியது. தமிழ்நாடு அரசு 'மரணத்தின் நிழலில்' நூலுக்காக 1994இல் சிறந்த நூலுக்கான பரிசை வழங்கியது.

சென்னை பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் முன்னாள் பேராசிரியர் வீ.அரசு தனது ஆய்வில் "தமிழ் நாவல் உலகில் புதிய வடிவமாக 'நீண்ட பயணம்' நாவல் அமைகிறது. நிலவுடைமைக் கொடுமையின் சாதியம் மற்றும் உழைப்புச் சுரண்டல் ஆகிய தன்மை, குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டு மொழியில் இயல்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், உழைக்கும் மக்களின் விடுதலைக்கான ஆக்க இலக்கியமாக இந்த நாவலை உருவாக்கியுள்ளார் என்று கருத முடியும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

செ.கணேசலிங்கனின் முதல் மூன்று நாவல்களும் இலங்கையில் நில மானிய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்புக்கு மாறும் சமுதாயத்தைச் சித்தரிக்கும் புதினங்களாக உள்ளன என்று பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிட்டிருந்தார். கைலாசபதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கை 1976இல் நடத்தியபோது, சமர்ப்பிக்கப்பட்ட பல கட்டுரைகளில் கணேசலிங்கனின் நாவல்கள்தான் அதிகம் பேசுபொருளாக இருந்தன.

'இரண்டாவது சாதி' என்ற அவரது நாவல், முதலாளித்துவம் பெண்களைக் கவர்ச்சிப் பண்டமாக்கிச் சந்தைப்படுத்துதலையும், பாலியல் பேதத்தை முன்வைத்துப் பெண்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதையும், அவர்களின் உரிமைகளை மறுப்பதையும் எடுத்துக் கூறுகிறது. ஆணிலும் பார்க்க மனித இனத்தில் படைப்பாற்றல் கொண்டவர்களாக இருந்தபோதிலும், பெண்கள் இரண்டாவது சாதியாகவே உலகம் முழுவதும் பார்க்கப்படுகிறார்கள் என்பதை அந்த நாவல் விரிவாக விவரிக்கிறது. பெண்மை பற்றிய பல கற்பிதங்களை உடைத்தெறியும் நாவலாக 'ஒரு பெண்ணின் கதை' [illegible]

சிறுவர்களுக்கான கதைகள் பகுத்தறிவை ஊட்டக் கூடியவையாக, சிந்தனையை வளர்ப்பவையாக, அறிவியல் மனப் பாங்கை வளர்ப்பவையாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவார். எழுத்திலும் பதிப்புத் துறையிலும் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் பாலமாக இருந்தார். தமிழ் பேசும் நல்லுலகில் என்றும் நினைவுகூரத்தக்கவர் அவர்.

## ஒமிக்ரோன்....

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்கின்றன. ஆகவே, அவை புதிய திரிபுகளிடமிருந்து எளிதில் தவிர்க்கப்படுகின்றன.

ஆனால், ஒமிக்ரானால் ஏற்படும் நோய் எவ்வளவு கடுமையானது என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள, யாரெல்லாம் அதற்குப் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் செல்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

**ஒமிக்ரான் திரிபினால் என்ன நடக்கலாம்?**

ஒமிக்ரான் அலை உருவாவது, தடுப்பூசிகள் பெரும்பாண்மை மக்களைத் தீவிர நோய்வாய்ப்படுதலில் இருந்து தடுப்பது ஆகிய இரண்டுக்குமே சாத்தியக்கூறுகள் உள்ளன.

"நம்மில் பெரும்பாலோர்" முற்றிலும் நன்றாக இருந்தாலும்கூட, "அனைவரும்" நன்றாக இல்லை என்பதுதான் பிரச்னை. நம்மில் சிலர் பலவீனமானவர்கள். சிலருக்கு தடுப்பூசிக்கு நன்கு செயலாற்றும் நோய் எதிர்ப்பாற்றல் அமைப்பு இல்லை. சிலருக்குத் தடுப்பூசி போடமுடியாது. சிலர் தடுப்பூசி போடவேண்டாம் என்று தேர்வு செய்துள்ளார்கள்.

டெல்டா திரிபு மற்றும் கோவிட் தொற்றுநோய்க்கு இன்னும் மருத்துவமனை பராமரிப்பு தேவைப்படும் நபர்களிடையே இதைப் பார்க்கிறோம்.

ஓர் அலை திடீரென, ஒரே நேரத்தில் தொடங்கினால், சிகிச்சை தேவைப்படுகிற இத்தகைய மக்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் கவனிக்கவெண்டிய சூழல் ஏற்படும்.

"இது அனைத்தையும் ஒன்றாக இணைக்கிறது," என்கிறார் வார்விக் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைக்கேல் டில்டெஸ்லி. "ஆகவே, ஜனவரியில் இருந்ததைப் போன்ற ஒரு பெரிய அலை உருவாகும் வாய்ப்புள்ளது. ஒரு கட்டத்தில் அது மருத்துமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழி வகுக்கும்." ஆனால், இதுவரையிலான அனைத்து தரவுகளிலுமே இன்னமும் பெரியளவு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக அவர் எச்சரிக்கிறார்.

ஒமிக்ரான் எவ்வளவு வேகமாகப் பரவுகிறது, எவ்வளவு தீவிரமானது அல்லது தடுப்பூசியின் செயல்பாட்டைத் தவிர்க்கிறது என்பதற்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் இல்லை. எனவே கணித மாதிரிகளில் எந்தத் தரவுகள் செருகப்படுகின்றன என்பதைப் பொறுத்து வரும் வாரங்களில் மாறுபட்ட பார்வையைப் பெறுவீர்கள். (நன்றி: பிபிசி)

## ஹெய்டி...

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம் தங்கியிருந்தபோது எதேச்சையாக சக்கர நாற்காலியைத் தவறவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்போதெல்லாம் ஹெய்டி தன்னுடன் அல்ல அந்தச் சிறுமியுடன்தான் பழகுகிறாள் என்ற கோபத்தில் கிளாராவின் சக்கர நாற்காலியைத் தள்ளிவிட்டு விடுகிறான் ஆடு மேய்க்கும் நண்பன்.

இந்த நிலையில் அவள் வேறு வழியின்றி எழுந்து நடக்க முயல்கிறாள். என்ன அதிசயம் உண்மையிலேயே அவளால் ஓடவும் நடக்கவும் முடிகிறது இப்போது. அரிய மூலி கைச் செடிகள் நிறைந்த மலைவாசத்தின் காற்




றும் தண்ணீரும் அந்த வாழ்க்கையும் அவளைக் குணமாக்கியுள்ள ஓர் அற்புதம் நடந்தது. இக்காட்சியே ஆடம்பரமிக்க மாசு நிறைந்த நகரச் சந்தடியைவிட தூய காற்று வீசும் எளிய கிராமப் பிரதேசங்களே அருமையானவை என்பதை வலியுறுத்துகிறது.


### நடிப்பு – பாத்திரங்கள்

ஆதரவற்ற சிறுமி ஹெய்டியாக அனுக் ஸ்டீபனும் தோழியாக இசபெல் ஒட்மேனும், ஆடு மேய்க்கும் நண்பனாக குய்ரின் அக்ரிப் பியும், தாத்தா அல்பிஹியாக புருனோ கன்ஸும், கண்டிப்பு மிக்க பணக்கார வீட்டு எஜமானியாக கதரினா ஷாட்லரும் மிக அற்புதமான நடிப்பை வழங்கியுள்ளனர். ஒவ்வொருவருடைய இளவயது நாட்களே ஒட்டுமொத்த வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்று சொல்வார்கள். அந்த வகையில் ஆல்ப்ஸ் மலையில் வாழ்ந்த சின்னஞ்சிறு பெண்ணின் அனுபவங்களே பிற்காலத்தில் ஹெய்டி என்ற பெயரில் 1880இல் ஒரு நாவலாக எழுதப்பட்டுள்ளது. அந்நாவல் உலகின் லட்சக்கணக்கான வாசகர்களை ஈர்த்தது. நாவலை எழுதிய 'ஜோஹனனா ஸ்பைரி' என்ற பெண்மணி அதன்பிறகு எவ்வளவோ வாழ்ந்திருக்கலாம்; சாதித்திருக்கலாம். ஆனால், தன்னுடைய குழந்தைப்பருவநாட்களைப்போல உன்னதமானது வேறொன்றும் இல்லை என்று அவர் நினைத்ததுதான் இந்நாவலின் மிகப் பெரிய வெற்றிக்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெய்டி

நகர்ப்பகுதிகளில் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பவர்கள் அதிகம். அவ்வாறானவர்கள் பரந்து விரிந்த கிராமப் புறங்களைக் காணும்போது மனநிலை எப்படியிருக்கும் என்பதையே 2015இல் வெளிவந்த இந்தத் திரைப்படம் காட்டுகிறது. கிராம அழகு மட்டுமல்ல அரியவகை மூலிகைகள் அடங்கிய அந்த மலைப் பிரதேசம், மாற்றுத்திறனாளியான கிளாரா என்ற சிறுமியின் கால்களைக் குணமாக்கிவிடுகிறது என்பதுதான் படத்தின் சிறப்பு.



## கதை

இது கிளாராவின் கதை அல்ல. ஹெய்டி என்ற பெண்ணின் பார்வையிலிருந்துதான் கதை உருவாகிறது. ஒருவகையில் இத்திரைப்படம் ஹெய்டியின் வாழ்க்கையும்கூட. ஹெய்டி என்பது அல்ப்ஸ் மலைத் தொடர்கள் சூழ்ந்த ஒரு கிராமத் தெய்வத்தின் பெயர். கிராமத் தெய்வங்களின் பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டும் வழக்கம் இருக்கிறது. இத்திரைப்படம் ஆல்ப்ஸ் மலை கிராமங்களின் கொஞ்சும் அழகை ஒரு சிறுமியின் கண்களின் வாயிலாக நம்மையும் காண வைத்திருக்கிறது. தாய் தந்தையரை இழந்த நிலையில், அத்தையிடம் வளரும் அந்தச் சிறுமி ஒரு சுமையாகக் கருதப்படுபவள். ஹெய்டியை ஒருநாள் அல்ப்ஸ் மலையில் வாழும் அவள் தாத்தாவிடம் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போய்விடுகிறாள் அவளது அத்தை. யாரும் கவனித்துக் கொள்ளத் தயாரில்லாத நிலையில்தான் ஹெய்டியின் குழந்தைப் பருவ வாழ்க்கை அமைகிறது. மலைமுகட்டில், மரச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட தனித்த வீடு ஒன்றில் தன்னந்தனியாக வாழும் தாத்தா அல்பிஹியும் அவளை வெறுக்கிறார்.

தொடக்கத்தில் உருட்டல் மிரட்டல்களைச் செய்யும் கண்டிப்பு மிக்கவராகத் தோன்றுகிறார். அவள் அப்பகுதிக்கு வந்த அன்றுகூட இரவானதும் வீட்டுக்குள் அனுமதிக்காமல் கதவடைத்துவிட்டுப் போய் படுத்துக் கொள்கிறார்.

பிராணிகளோடு சிறுமி ஹெய்டி உறங்கியதை அறிந்ததும் மனதில் பச்சாதாபம் ஏற்பட்டுவிடுகிறது. பரிவோடு அவளை அணுகி உண்ண உணவும் ஆதரவும் தருகிறார். பின்னர் ஹெய்டியின் அற்புதமான பாசத்தை ஏற்றுக் கொள்கிறார் தாத்தா.




அவளைப் பனிச்சறுக்கல் வண்டியில் அமரவைத்துச் சவாரி செய்கிறார். பயணிகளுடனும் மலைப் புல்வெளிகளில் ஆடு மேய்க்கும் சற்றே பெரியவனான பீட்டருடனும் அவள் விளையாடுகிறாள். அவள் இதனால் உற்சாகம் அடைகிறாள். ஒரு கட்டத்தில் ஹெய்டியை பாடசாலைக்கு அனுப்பத் தாத்தா ஏற்பாடு செய்கிறார். ஆனால், அதுவும் அவளுக்கு நிலைக்கவில்லை. அவளது அத்தை ஹெய்டியை எப்படியாவது பாடசாலைக்குச் செல்வதிலிருந்து தடுக்க நகரத்தில் ஒரு பணக்கார வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிடத் திட்டமிடுகிறாள்.

பெண்ணுக்குக் கல்வி மறுக்கப்படுவதுதான் இப்படத்தில் மறைந்து கிடக்கும் முக்கிய வேராக இருக்கிறது. அதுவே நான்கு பக்கமும் பூமியில் கால் கொண்டு ஆழச் செல்வதைப் போல உறுதியாக வளர்கிறது. ஹெய்டி பிற்காலத்தில் மிகப்பெரிய எழுத்தாளராக வருவதெல்லாம் இப்படத்தில் காட்டப்படுவதில்லை. மாறாக அவளுக்கு ஒரு மூதாட்டி குறிப்பேடு ஒன்றை அன்பளிப்பாக வழங்குவதை வைத்து நாம் மெல்ல ஹெய்டிதான் அந்த எழுத்தாளர் என்பதையும் மெல்லப் புரிந்துகொள்ளலாம். இதற்கு இடைப்பட்ட காட்சிகளில் ஹெய்டி அனுபவிக்கும் கொடுமைகள் ஏராளம்.

தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஹெய்டியிடம் அவளது அத்தை ஒரு நாள் வருகிறாள். அவளது தாத்தாவுக்குத் தெரியாமல் வந்து பாசமாகப் பேசுவது போல நடித்து அவளை அழைத்துச் செல்கிறாள். 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஜெர்மனியின் ப்ராங்பர்ட் நகரத்திற்கு ரயிலில் பயணம். ஹெய்டியை அவளது அத்தை ப்ராங்பர்ட் நகரின் செல்வந்தர் ஒருவரின் வீட்டில் வேலைக்குச் சேர்த்து விடுகிறாள். அங்கே சக்கர நாற்காலியில் சுற்றிவரும் பணக்கார மாற்றுத்திறனாளியான கிளாரா என்ற சிறுமியை பராமரிப்பதுதான் ஹெய்டியின் வேலை.

கிளாரா என்ற பெண் நடக்க முடியாமல் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துகிறாள்; தாயின் இறப்புக்குப் பிறகு அவள் ஏதோ ஒரு அதிர்ச்சியால் கால்களின் பயன்பாட்டை இழந்துவிட்ட பிறகு சக்கர நாற்காலிதான் துணை. அவரது தந்தை அவளை நேசிக்கிறார் என்றாலும், அவர் பெரும்பாலும் வியாபாரத்தில் இருப்பதால் அவளிடமிருந்து விலகி இருக்கிறார். மேலும் கிளாராவைத் தனது கடுமையான ஆளுகைக்குக் கீழ் வைத்திருக்கிறார் அந்த வீட்டு முதலாளி.

ஹெய்டி சாப்பாட்டு மேசையில் பணக்காரர்களின் நாகரிகப் பழக்கவழக்கங்களை அறியாமல் சாப்பிடும் முறையில் அந்த முதலாளியம்மாளிடம் கடுமையாக அவமானப் படுத்தப்படுகிறாள். அந்த வீட்டின் அனைத்து அசைவுகளும் அந்த முதலாளியின் கடைக்கண் கீழ்தான் எனும்போது அந்த வீட்டில் பொருந்த முடியாமல் தவிக்கிறாள்.

தனது தாத்தாவின் அன்பும், அரவணைப்பும் எவ்வளவு உன்னதமானவை என்பதை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கிறாள். தனிமையில் அழுகிறாள். அந்தப் பணக்கார வீட்டை விட்டுச் செல்லத் துடித்தாலும் தன் வயதையொத்த சிறுமியான கிளாராவுக்கு உதவி செய்வது மிக முக்கியமான பணி என்றே நினைக்கிறாள். அவளைப் பிரியவும் மனமில்லை. எனினும் ஒருநாள் ஹெய்டி தப்பிச் செல்வதைக் கண்டு அழைத்துவரும் வீட்டுப் பெரியவர்கள் மறுநாள் அவளை முறையாக வழியனுப்பி வைத்துவிடுகிறார்கள்.

ஹெய்டி தனது மலை கிராமத்திற்கே திரும்புகிறாள் என்பதை உணர்ந்த அவளது தோழி கிளாரா அழுகிறாள்... கதறுகிறாள்.. ஹெய்டி, தாத்தாவின் அரவணைப்பில் மீண்டும் பள்ளி செல்கிறாள். எனினும் தோழி கிளாராவுடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ள, அந்தக் கள்ளமறியாத இரு பிஞ்சு உள்ளங்களின் நட்பு மீண்டும் அவர்களை இணைக்கிறது. ஹெய்டியைப் பார்க்கத் துடிக்கிறாள் கிளாரா.

இந்த முறை கிளாரா அல்ப்ஸ் மலை கிராமத்திற்குச் சக்கர நாற்காலியுடனும் தனது வீட்டுப் பெரியவர்களுடனும் ரயிலில் வந்து சேர்கிறாள். அல்ப்ஸ் மலைவாசஸ்தலத்துக்கு வந்து சில (தொடர்ச்சி பக்கம் 23இல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551 ஏ, கஸ்தூரியார் வீதியிலுள்ள [illegible] கவுஸ் பிரை. லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781